கல்கி



KALKI ஆகஸ்ட் 26, 1951

4 அணா



RVM. 142-X30 TM


வனப்பை
அடையுங்கள்
100% சுத்தமான எண்ணெயை மூலப் பொருளாகக் கொண்ட, கேரளா ஸாண்டல்வுட் ஸோப்பிலுள்ள சந்தன எண்ணெய் சருமத்தை வளர்ப்பதோடு உண்மையான அழகிற்கு அவசியமான கதகதப்பையும் உயிரையும் உங்கள் சருமத்திற்கு அளிக்கிறது இதன் மிருதுவான கிரீம் போன்ற நுரை நீடித்த பரிமளத்துடன் உங்கள் சருமத்திலுள் நன்றாக வேலை செய்து அதை மிருதுவாகவும் வழவழப் பாகவும் செய்கிறது.
கேரளா
ஸாண்டல்வுட்
சோப்
SANDALWOOD
சருமத்தை
அழகுபடுத்துகிறது
கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட், கோழிக்கோடு
டிபார்ட்மென்ட் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அன்டு காமர்ஸ்,
கவர்ன்மென்ட் ஆப் மதராஸ்.
SISTA'S-KS-16-B-TAMIL

படஉலகில் ஓர் அற்புதம்! வீரமும் தியாகமும் சேர்ந்த திடுக்கிடும் காட்சிகள்!
காளி தேவியின் வீரதீரப் பிரதாபங்கள்!



இன்று முதல்: கிருஷ்ணா டாக்கீஸ் - தஞ்சாவூரில் ஆரம்பம்!

கீழ்க்கண்ட இடங்களில் அமோகமாக ஓடிக் கொண்டிருக்கிறது

ஜோதி டாக்கீஸ் ... மதுரை

ஜயா டாக்கீஸ்	...	இராஜமஹேந்திரபுரம்	...	2வது வாரம்
ராதாகிருஷ்ணா டாக்கீஸ்	...	குண்டூர்	...	3வது வாரம்
மணி டாக்கீஸ்	...	நெல்லூர்	...	3வது வாரம்
சீஷ்மஹால்	...	விஜயவாடா	...	4வது வாரம்

25-8-51 முதல்: மாருதி ... பீமாவரம்
அடுத்த மாறுதல்: லைட் ஹவுஸ் ... கோயமுத்தூர்

மெஜஸ்டிக் டாக்கீஸ் ... பெங்களூர்	பாலஸ் டாக்கீஸ் ...	ஹைதராபாத்
ரஞ்சித் டாக்கீஸ் ... மைசூர்	பாலாஜி டாக்கீஸ் ...	மங்களூர்
சென்ட்ரல் டாக்கீஸ் ... சேலம்	கெயிட்டி டாக்கீஸ் ...	திருச்சிராப்பள்ளி

மற்றும் இதர முக்கிய நகரங்களிலும் கூடிய சீக்கிரம் திரையிடப்படும்

G. F. D. ரிலீஸ்

Doric

டோரிக்

சிறந்த பிரயோசனமுள்ள

பேனாக்கள்

ரெகுலர் ரூ. 6/-



லீவர் - பில்லர்

ரூ. 6/8

1. இந்த அளவிலேயே உள்ள மற்றபேனாக்களைவிட அதிக மான மசியை கொள்கிறது.
2. மசிகசிந்து ஒழுகாமலிருக்கு மாறு உத்தரவாத முள்ளது.
3. தங்கமுலாம் பூசிய இரிடியம் தோய்ந்த உறுதியான நிப்.
4. அநேகவித கவர்ச்சிகர அழ கிய கலர்களில் உள்ளன.
5. இது ஒரு டோரிக் தயாரிப்பு



டோரிக் பேனா சரிவர எழுதாவிட்டால் எங் களுக்குத் திருப்பி அனுப்புங்கள். இலவச மாக நாங்கள் பதில் பேனா அனுப்புகிறோம்.

எல்லா டீலர்களிடமும்
கிடைக்கும் அல்லது

டோரிக் ப்ராடக்ட்ஸ்

பம்பாய்: பம்பாய் மியூச்சுவல்
பில்டிங், ஹார்ன்பி
ரோடு — பம்பாய்.
கல்கத்தா: 10. சௌரிங்கி.
பெங்களூர்: 2, சவுத் பரேட்.



பொருள் அடக்கம்

கல்கி

மலர் 11
இதழ் 4

1951 ஆகஸ்டு 26


கர ௵
ஆவணி 10௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

விவசாயிகளின் இணையற்ற மதிப்பைப் பெற்றுள்ளதும்

குறைந்த விலையில் நீடித்த உழைப்பை

அளிக்கக் கூடியதுமான



"யான்மர்"

6 H. P.

என்ஜின்கள் எங்களிடம் சரஸமான விலைக்குக் கிடைக்கும்

முழு விவரங்களுக்கு :

ஸாம்ஸன் & கம்பெனி, லிமிடெட்,

151, பிராட்வே - த. பெ. நெ. 1219 - மதராஸ்-1

போன் : 4521 தந்தி : "BARAPASH"

மயிலாப்பூரில் புதிய ஜவுளிக் கடை!

புதிய ஸ்டாக்! **போன் : 86544** **குறைந்த விலை!!**

எங்களிடம் அசல் கொள்ளேகாலம் பட்டினால் தயார் செய்த காஞ்சீபுரம், ஆரணி, பெங்களூர் பட்டு சேலைகளும், மைசூர் கிரேப் ஸில்க் சேலைகளும், சேலம் நவீன மோஸ்தர் ஜரிகை வேஷ்டிகளும், கோயமுத்தூர், உறையூர், மதுரை நூல் சேலைகளும், பம்பாய் மில் வேஷ்டிகளும், வாயில்களும் மிகவும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

இரண்டேகால் முழம் அகலம் பட்டுப் பாவாடைகள் ஓர் ஸ்பெஷல் ரகம்

ரத்தன் ஸில்க் ஹவுஸ்

11, கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், மதராஸ் - 4

கல்கி

மலர் 11 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 4

தியாகிகளே! உங்கள் தியாகம் எங்கே?

தியாகத்தின் அடிப்படையில் காங்கிரஸ் மகாசபை வளர்ந்து பலம் பெற்றது. ஆதலின் காங்கிரஸ் வாதிகளுக்குத் தியாக உணர்ச்சி குன்றினால் காங்கிரஸின் அடிப்படை ஆட்டங் கொடுத்து விடும்.

காங்கிரஸ் வாதிகளுக்குத் தியாக உணர்ச்சி வேண்டுமென்றால், காங்கிரஸ் தலைவர்களுக்கு அது எத்தனை அவசியம் என்று சொல்ல வேண்டியதில்லை.

காங்கிரஸ் தலைவர்களின் தியாக உணர்ச்சியைச் சோதிக்கும்படியான ஒரு நிலைமை தற்சமயம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

* * * *

காந்தி மகாத்மாவின் ஞானப் பெரும் புதல்வர் ஜவாஹர்லால் நேரு.

இந்திய மக்களின் இதய கமலங்களில் வீற்றிருப்பவர் ஜவாஹர்லால் நேரு.

உலகத்தின் முன்னிலையில் இந்தியாவின் அந்தஸ்தை மிக உயர்த்தி யிருப்பவர் ஜவாஹர்லால் நேரு.

நேருவை யன்றி வேறு யாராலும் தற்சமயம் இந்தியாவுக்குத் தலைமை வகிக்க முடியாது; இந்திய அரசாங்கத்தை நடத்த முடியாது; இந்தியா சமாளிக்க வேண்டி யிருக்கும் பல பிரச்னைகளைச் சமாளிக்க முடியாது.

நேருவின் பூரண ஒத்துழைப்பின்றிக் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவது அசாத்தியமான காரியம்.

ஆனால் நேருஜியின் உற்சாகமான ஒத்துழைப்பு காங்கிரஸுக்குக் கிடைக்காமற் போகும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது; தேசம் நேருஜியின் தலைமையை இழந்து விடுமோ என்ற ஐயமும் தோன்றி யிருக்கிறது.

இத்தகைய நிலைமை ஏற்பட்டதற்குக் காரணங்கள் இன்னவை என்பது நேயர்களுக்குத் தெரியும். அந்தக் காரணங்களைப் பற்றிச் சென்ற ஒரு வருஷ காலமாக இந்தப் பத்திரிகையில் எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம். காங்கிரஸ் அமைப்பில் புகுந்து விட்ட ஊழல்களைப் பற்றிச் சொல்லி வந்திருக்கிறோம். அதற்காகச் சில காங்கிரஸ் அபிமானிகள் நம் பேரில் வருத்தப்பட்டார்கள். உண்மையை எடுத்துச் சொன்னதற்காக வருத்தப்பட்டு என்ன செய்வது? நேருஜி அக் குறைகளை யெல்லாம் உணர்ந்தும் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு இத்தனை நாளும் பொறுமையாக இருந்து வந்தார். கடைசியில் அவரால் பொறுக்க முடியாமற் போய் விட்டது. "காங்கிரஸுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தே யாகவேண்டும்" என்று தீர்மானித்துக் காரியக் கமிட்டியிலிருந்து ராஜீனாமா செய்து விட்டார். பொதுத் தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் தேசத்துக்கும் காங்கிரஸ் அபிமானிகளுக்கும் இதைக் காட்டிலும் அதிர்ச்சி தரும்படியான செய்தி வேறு எதுவும் இருக்க முடியாது.


தேசத்தையும் காங்கிரஸையும் இந்த ஆபத்தான நிலைமையிலிருந்து காப்பாற்ற முடியாதா? முடியும். காரியக் கமிட்டித் தலைவர்கள் மனது வைத்தால் முடியும். அவர்கள் கொஞ்சம் தியாக உணர்ச்சி காட்டினால் முடியும்.

நேருஜி கோருவது என்ன?

காரியக் கமிட்டியை மாற்றி அமைக்க வேண்டும் என்கிறார். காங்கிரஸ் பொதுக் காரியதரிசிகளை மாற்ற வேண்டும் என்கிறார்.

எதற்காக இப்படிக் கேட்கிறார்?

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இப்போது மாகாண காங்கிரஸ் ஹிட்லர்களே பெரும்பாலும் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த மாகாண ஹிட்லர்களுக்கு



ஆச்சரியம்!

அந்தந்த மாகாண காங்கிரஸ் ஸ்தாபன ஊழல்களை மூடி மறைப்பதே முக்கிய வேலையாயிருக்கிறது. இந்த மாகாண ஹிட்லர்களின் கருவிகளாகக் காரியதரிசிகள் இருவரும் — காளா வெங்கட்ராவ், மோகன்லால் கௌதம் —ஆகிய இருவரும் பயன்பட்டு வருகிறார்கள்.

இது நாம் வெகுநாளாக எடுத்துக் கூறி வந்திருக்கும் புகார். இதற்காகவே இன்று பண்டித ஜவாஹர்லால் நேரு ராஜிநாமா செய்யும்படி நேர்ந்திருக்கிறது.

நேருஜியின் கோரிக்கையில் அவ்வளவு நியாயமில்லையென்றே வைத்துக் கொள்வோம். எனினும் அவருடைய தலைமை தேசத்துக்கும் காங்கிரஸுக்கும் எவ்வளவு அவசியம் என்பதைக் கருதி அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கக் கூடாதா என்று கேட்கிறோம்.

காரியக் கமிட்டித் தலைவர்களும் காரியதரிசிகளும் தங்களுடைய பதவிகளை ஏன் இன்னும் ராஜிநாமா செய்யவில்லை! பண்டித நேருவின் சேவையைக் காட்டிலும் தங்களுடைய சேவை தேசத்துக்கு அவசியமானது என்று அவர்கள் கருதுகிறார்களா!

ஓ தியாகிகளே! உங்கள் தியாக உணர்ச்சி எங்கே போயிற்று!

"நேரு போனால் போகட்டும்; யார் போனாலும் போகட்டும்; தேர்தலில் காங்கிரஸே ஒழிந்து போனாலும் போகட்டும்; நாங்கள் எங்கள் பதவிகளை விட மாட்டோம்" என்று சொல்லக்கூடிய நிலைக்கு வந்து விட்டீர்களா!

ஓ தேச பக்தத் தியாகிகளே! தயவு செய்து நேருஜிக்கு வழி விடுங்கள்.

இன்னும் ஐந்து வருஷ காலம் தேசத்துக்கு நேருஜியின் தலைமை இருக்கும்படி செய்யுங்கள்.

பிற்பாடு உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யலாம். தேசம் எங்கே போகிறது! நீங்கள் எங்கே போகிறீர்கள்! பதவிகள்தான் எங்கே போய் விடும்!

உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு; நேருஜிக்கு வழி விட்டு ஒதுங்கி நில்லுங்கள்!

தலைவிதிக்கு ஒரு கெடு!

தமிழ் நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதில் முதல் கெடு வைத்தாகி விட்டது. செப்டம்பர் 5ந் தேதிக்குள்ளே வரப் போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸின் சார்பாக நிற்க விரும்பும் அபேட்சகர்கள் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பித்து விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். நூறு ரூபாய் விண்ணப்ப தண்டமும் நானூறு ரூபாய் டெபாஸிட் தட்சணையும் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்திய பார்லிமெண்டுக்கு நிற்க விரும்பினால் ரூ. 250ம் ரூ. 750ம் ஆக ரூ. 1000 விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். இவ்வாறு தமிழ் நாடு தேர்தல் கமிட்டியார் தீர்மானித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

செப்டம்பர் மீ 8உ 9உ முக்கியமான அ. இ. கா. கமிட்டி கூட்டம் நடைபெறப் போகிறதே, அதில் தேசத்தின் தலைவிதியே நிர்ணயமாகப் போகிறதே, நேருவின் தலைமை உண்டா இல்லையா என்பது தெரிந்து விடப்போகிறதே, அதற்குப் பிறகு இந்த விண்ணப்ப கெடு வைக்கக் கூடாதா என்று கேட்கலாம்.

"நேருவின் விஷயம் எப்படியானால் என்ன, தேசத்தின் கதி என்னவானால் என்ன, விண்ணப்ப தட்சணை ரூபாய் நூறு வீதமும் ரூ. 250 வீதமும் எங்களுக்கு வந்து விடட்டும்!" என்று நம் தமிழ் நாட்டுத் தேர்தல் கமிட்டி தீர்மானித்து விட்டது.

அலறிப் புடைத்துக் கொண்டு செப்டம்பர் 5டைக்குள் அநேகர் விண்ணப்பம் போட்டு விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. பழைய சட்டசபைப் பெருச்சாளிகளின் விண்ணப்பங்கள் முதலில் வந்து சேரும். வரப் போகும் தேர்தலுக்கென்றே அவர்கள் பல வழிகளிலும் பணம் தேடி வைத்திருப்பார்கள்.

இன்னும் கறுப்பு மார்க்கெட்காரர்கள், பெர்மிட் தாரர்கள், ஜில்லா போர்டு வீரர்கள், நகரசபைச் சிரஞ்சீவிகள், காங்கிரஸ் ஸ்தாபன விடாக் கண்டர்கள் முதலியோர் விண்ணப்பங்களை அனுப்பி விடுவார்கள்.

ஆனால் இந்த முறையில் சரியான அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க முடியுமா என்பது சந்தேகந்தான்.

தேர்தல் கமிட்டியார் அந்தந்த ஜில்லாவுக்கும் தொகுதிக்கும் சென்று அங்குள்ள தேச பக்தப் பிரமுகர்களைக் கலந்து பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளக் கூடிய அபேட்சகர்களைக்

குறிப்பிட்டுவிடக் கூடாதா! 'அப்பீல்' செய்ய விரும்புகிறவர்கள் செய்து கொள்ளலாம் என்று விட்டுவிடக் கூடாதா!

அபேட்சகர்களைப் பொறுக்கும் முறை எப்படியாவது இருக்கட்டும். நமக்கு முக்கியமாக வேண்டியது, புதுச் சட்டசபைகளுக்கும் பார்லிமெண்டுக்கும் திறமையுள்ள யோக்கியர்கள் வர வேண்டும் என்பதுதான்

"சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் இதைப் பற்றி மயிலாப்பூரில் நடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் எடுத்துக் கூறி யிருக்கிறார்.

"நம் நாட்டில் ஜனநாயகம் வெற்றி பெறுவது இந்தத் தேர்தலில் நல்ல அபேட்சகர்களைப் பொறுக்குவதைப் பொறுத்திருக்கிறது" என்று எச்சரித்திருக்கிறார்.

"நல்ல அபேட்சகர்களைப் போடுங்கள்!" என்று சி. ஆர். சீனிவாசன் சொல்லும்போது "இப்போதுள்ள அங்கத்தினர் போன்றவர்களைப் போடாதீர்கள். வேறு நல்ல அபேட்சகர்களை, — திறமையும் யோக்கியதையும் உள்ளவர்களை, — பொறுக்கிப் போடுங்கள்!" என்று சொல்வதாகவே வைத்துக் கொள்ள வேண்டும்.

இதே விஷயத்தைத்தான் "தினசரி" ஆசிரியர் சம்மட்டி அடி போன்ற வாசகங்களில் சென்ற ஒரு வாரமாக வற்புறுத்தி வருகிறார். "பழைய ஓட்டை உடைசல் செல்லாக் காசுகளை யெல்லாம் ஒரேயடியாகத் தலை முழுகிவிட வேண்டும்; கூண்டோடு கைலாசத்துக்கு அனுப்பிவிடவேண்டும்" என்று எழுதிவருகிறார்.

பழைய அங்கத்தினரில் மிகப் பெரும்பாலோரால் நாட்டுக்கும் நன்மையில்லை, அவர்களுடைய தொகுதிகளுக்கும் எவ்விதப் பிரயோஜனமும் இல்லை என்பது தெளிவான விஷயம்.

அவர்களில் சிலர் மீது லஞ்சப் புகார், உத்தியோகஸ்தர்களின் வேலைகளில் தலையிட்ட குற்றம் முதலியவை சாட்டப் படுகின்றன. இவற்றை யெல்லாம் நிரூபிப்பது சாத்தியமல்ல. அவர்களுடைய நடவடிக்கைகளினால் காங்கிரசுக்கு அபகீர்த்தி அளித்திருக்கிறார்கள் என்பதே அவர்களை விட்டு விடுவதற்குப் போதுமான காரணமாகும்.

அங்கங்கே காங்கிரஸ் ஸ்தாபனங்களைக் கைப்பற்றி வைத்திருக்கும் சில்லறை ஹிட்லர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களும் காங்கிரசுக்கு வேண்டிய அபகீர்த்தியை உண்டு பண்ணியிருக்கிறார்கள். இவர்களை அபேட்சகர்களாகப் போடுவது மேலும் ஆபத்தாயிருக்கும்.

தேர்தல் கமிட்டியார் இந்த விஷயங்களை யெல்லாம் சிந்தித்துத் தங்கள் முறைகளை வகுத்துக் கொள்ளுவது நலம்.

காங்கிரஸ் இம்முறை பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவது சரியான அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதையே பொறுத்திருக்கிறது என்பதைத் தேர்தல் கமிட்டியார் மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

முதலைக் கண்ணீர்!



"சங்கீதம் பணம் பண்ணுகிறது!"

டப்பா சங்கீதத்தைப் பற்றி மேலும் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில நேயர்கள் அதைக் கொன்று குழியை வெட்டி மூடிவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். வேறு சிலர் அதைத் தலையில் வைத்துக் கொண்டு கூத்தாட வேண்டுமென்கிறார்கள்.

இதற்கிடையில், விவாதத்தின் ஓர் அம்சத்தைப் பற்றி ஸ்ரீமதி லதாமங்கேஷ் அவர்களின் அபிப்பிராயம் வெளியாகியிருக்கிறது. சென்னையில் பிரசுரமாகும் "Sport and Pastime" என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையின் விசேஷ நிருபர் ஸ்ரீமதி லதா மங்கேஷைப் பேட்டி கண்டு அவர் கூறிய சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். "மங்கேஷ் கீதம்" என்று இப்பத்திரிகையில் குறிப்பிட்டதை வைத்துக் கொண்டே பேட்டியின் விவரத்தை அந்த நிருபர் தொடங்குகிறார்.



...குழியை வெட்டி...

நமது முதல் கட்டுரையில் நாம் எழுதியிருந்ததாவது :— "ஸினிமா முதலாளிகளிடம் வேறு உயர்தரமான காரியம் எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. 'பணமே தெய்வம்' 'பாக்ஸ் ஆபீஸே கோயில்' என்ற மனப்பான்மையுடன் அவர்கள் படம் எடுக்கிறார்கள். அந்த நோக்கத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள்......"

ஸ்ரீமதி லதா மங்கேஷ்கர் மேற்படி வாரப் பத்திரிகை நிருபரிடம் கூறியதை இப்போது கேளுங்கள். "ஸினிமா சங்கீத டைரக்டர்கள் சொல்லிக் கொடுக்கிறபடி நான் பாடுகிறேன்" என்று கூறி விட்டு, ஸ்ரீமதி லதா மேலும் சொல்லியிருப்பதாவது :—


"பம்பாயில் ஸினிமாத் தொழிலில் மிக முக்கியமாகக் கருதப்படுவது சங்கீதம்தான் ; ஏனெனில் சங்கீதம் பணம் பண்ணுகிறது பெரும்பாலான ஸினிமா முதலாளிகள் என்னுடைய சங்கீதம் தங்கள் படங்களில் இருந்தால் அவை நிறையப் பணம் சம்பாதிக்கும் என்று நம்புகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், படத்தின் இதர அம்சங்கள், — கதை நடிப்பு முதலியவை, — அவ்வளவு முக்கியமல்ல!"

ஸ்ரீமதி லதா மங்கேஷ் கூறியவற்றில் மேற் கூறியதுதான் முக்கியமானது என்று நிருபர் கருதியிருக்கிறார். ஆகையினால் கட்டுரைக்கே "சங்கீதம் பணம் பண்ணுகிறது!" (Music Makes Money) என்ற தலைப்புக் கொடுத்திருக்கிறார். இந்தத் தலைப்பைத் திருப்பிப் போட்டாலும் பொருத்தமாக இருக்குமென்று நாம் கருதுகிறோம். அதாவது "பணம் சங்கீதத்தைப் பண்ணுகிறது!" (Money makes music) என்று கூறினால் உண்மைக்கு மாறாக இராது. உண்மையுடன் இன்னும் நன்கு பொருந்த வேண்டுமானால், "பணம் சங்கீதத்தைக் கொலை பண்ணுகிறது!" என்றும் தலைப்புப் போடலாம்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நேயர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். ஸ்ரீமதி லதா மங்கேஷ்கரின் குரல் இனிமையைப் பற்றி நமது நேயர்களில் சிலர் பரவசமாகக் கூறுவதை நாமும் ஒத்துக் கொள்கிறோம்.

ஆனால் லதாவின் குரல் இனிமைதானா அவருடைய பாட்டுக்களின் பிரபலத்துக்குக் காரணம்! அப்படியானால், அவர் தமது இனிய குரலில் உயர்தர ஹிந்துஸ்தானி சங்கீதத்தையே பாடலாமே! அப்படிச் செய்தால் ஸ்ரீ ஸைகால், ஸ்ரீமதி சாந்தா ஆப்தே, ஸ்ரீமதி கேஸர் பாய் முதலியவர்களின் ஹிந்துஸ்தானி இசையை நாம் ரஸித்துப் பாராட்டுவதுபோல் அவருடைய சங்கீதத்தையும் பாராட்டலாமே!

இல்லை; மங்கேஷ் கீதத்தின் கவர்ச்சிக்குக் காரணம் லதா மங்கேஷ்கரின் குரல் இனிமை அன்று. அதற்குக் காரணம், அவர் பாடும் 'பஞ்சாபி டியூன்' என்று சொல்லப்படும் டப்பா மெட்டுக்கள்தான். அதனாலேயே அந்த மெட்டுக்களில் மற்ற பாஷை ஸினிமா முதலாளிகளும் பாட்டுப் போடுகிறார்கள். ஹிந்தி வார்த்தைகளை எடுத்து விட்டுத் தமிழ், தெலுங்கு அல்லது மலையாள வார்த்தைகளைத் திணித்து விடுகிறார்கள். அவற்றைச் சுமாரான குரலுடையவர்கள் பாடுகிறார்கள்; ஆனால் அவையும் பிரபலம் அடைகின்றன!



..தலையில் வைத்துக் கொண்டு..

ஒரே நாளில் ஒரே வானொலி நிலையத்தில் ஹிந்தி, தமிழ், தெலுங்கு பாஷைகளில் லதா மங்கேஷ் மெட்டுக்கள் ஒலி பரப்பப்படுகின்றன.

ஆதலின், அப் பாடல்களின் வசீகர சக்தி குரலில் இல்லை, மெட்டிலே தான் இருக்கிறது என்று ஏற்படுகிறது அல்லவா!

பல ஆண்டுகளுக்குமுன்பு தமிழ் நாட்டில் ஸ்ரீ நடராஜ ஆச்சாரி என்று ஒரு பிரபல நடிகர் இருந்தார். நாடக மேடைகளில் சதாரம் என்னும் நாடகத்தில் அவர் திருடன் வேஷம் போட்டுக் கொண்டு வருவார். அந்த வேஷத்தில் அவருக்கு இணையான நடிகர் யாரும் இல்லை. ஒரு விதமான கில்லாடிப் பாட்டுக்களைப் பாடுவார். "நடராஜாச்சாரி டப்பா குத்துதல்" என்று அதைப் பற்றிச் சொல்லுவார்கள்.



திருடன் மேடையில் வந்து ஆடிப்பாடிக் கூத்தடிப்பதற்குத் தகுந்தவாறு தாளமே பிரதானமாக அந்தப் பாட்டுக்கள் அமைந்திருக்கும். மேடையில் திருடன் பாடிக் கொண்டு குதிக்கும்போது சபையிலே பலர் வாயினாலும் கையினாலும் தாளம் போட்டுத் தங்கள் உற்சாகத்தை வெளியிடுவார்கள்.

இப்படியெல்லாம் சிலர் உற்சாகப்பட்ட போதிலும், அந்த மெட்டுக்களைச் சங்கீதம் என்று ஒப்புக் கொண்டு யாரும் பாராட்டுவதில்லை. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பதை யொட்டிப் பார்க்கும்போது, தமிழ் உலகம் மேற்படி டப்பா மெட்டை ஒப்புக் கொள்ளவில்லை யென்று சொல்லலாம். ஒப்புக் கொண்டிருந்தால், கர்நாடக சங்கீதம் அப்போதே சமாதியில் வைக்கப்பட்டிருக்கும்.



பல வருஷங்களுக்குப் பிறகு அதே டப்பா சங்கீதம் வெவ்வேறு வடிவங்களில் இப்போது நம் புனிதத் தமிழ் நாட்டில் வியாபித்து வருகிறது. இந்தத் தடவை அது பின்னணி சங்கீதம் எனப்படும் மேனாட்டுக் கபந்தப் பிண்டத்தின் துணையையும் தேடிக் கொண்டு வந்திருக்கிறது.

ஸினிமா சங்கீதம் பற்றி வடநாட்டுப் பிரபல ஸினிமா நட்சத்திரம் ஒருவரின் அபிப்பிராயத்தைக் கொஞ்சம் கேட்டு வையுங்கள். ஸ்ரீமதி சாந்தா ஆப்தே தமிழ் நாட்டு ஸினிமா ரஸிகர்களுக்குப் புதியவர் அல்ல. இருபது ஹிந்திப் படங்களிலும் ஏழு மராத்திப் படங்களிலும் நடித்துப் புகழின் சிகரத்தை அடைந்தவர். அவரையும் மேற்படி 'ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்' பத்திரிகையின் பம்பாய் நிருபர் பேட்டி கண்டு அதன் விவரம் 18-8-51 இதழில் வெளியாகி யிருக்கிறது. ஸ்ரீமதி சாந்தா ஆப்தே சொல்லுகிறார் :—

"சமீப காலத்தில் ஸினிமா சங்கீதம் வெறும் ஆபாசக் குப்பையாகி வருகிறது. அதில் 'இந்திய சங்கீதம்' என்று சொல்லக்கூடிய அம்சம் ஒன்றுமில்லை. நம்முடைய சங்கீதக் கலை தற்சமயம் இவ்வளவு கேவலமான நிலைக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கு ஒரே காரணம், அயல் நாட்டுக் கலப்பட சங்கீதத்தை நமது படங்களில் புகுத்தி யிருப்பதுதான்......"

நமது முதல் கட்டுரையில் ஒரு பகுதியை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறோம் :—

"இப்போது வருகிற ஹிந்தி ஸினிமா கீதங்களும் அவற்றைக் காப்பி அடித்து வெளிவரும் தமிழ் தெலுங்கு ஸினிமா கீதங்களும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைச் சேர்த்தவையல்ல. ஸ்பானிஷ் சங்கீதம், மெக்ஸிகோ சங்கீதம், எஸ்கிமோ சங்கீதம், ஹவாய் சங்கீதம் முதலிய பல சங்கீதங்கள் கலந்த பயங்கரமான உருத்தெரியாத கபந்த பிண்டம் !........"

இந்தக் கபந்த பிண்டத்தை ஸினிமா கீதங்களின் பின்னணி சங்கீதத்தில் அதிகமாகப் பார்க்கலாம். பம்பாயில் இப்போதெல்லாம் சங்கீத டைரக்டர்கள் என்ன செய்து வருகிறார்கள் என்பதைப் பற்றி ஒரு நண்பர் தெரிவித்திருக்கிறார். மேனாட்டு இசைத் தட்டுக்களை நூற்றுக்கணக்கில் வாங்கிச் சேர்த்துக் கொள்கிறார்கள். கிராமபோனில் வைத்துக் கேட்கிறார்கள். அங்கே ஒன்றும் இங்கே ஒன்றுமாக எடுத்துக் கலப்படம் செய்து பின்னணி சங்கீதம் அமைக்கிறார்கள். அதே முறையில் பாட்டு மெட்டுக்களையும் அமைப்பதற்கு இப்போது தொடங்கி யிருக்கிறார்கள் !

நாம் ஹிந்துஸ்தானி சங்கீதமே கூடாது என்று சொல்லவில்லை. உண்மையான ஹிந்துஸ்தானி சங்கீதம் கர்நாடக சங்கீதத்துக்கு அநுசரணையாக இருந்து அதன் உயர்வைத் தூக்கிக் காட்டுமே தவிர அதை அழித்து விடாது. நம்மவர்களின் ரஸிகத் தன்மையையும் அழித்து விடாது. நாம் ஆட்சேபிப்பதும் அஞ்சுவதும் மேனாட்டுக் கலப்பட கபந்த பிண்டமான ஸினிமா சங்கீதத்தைத்தான்.

நமது இளம் நேயர்களை நாம் கேட்டுக் கொள்வதாவது:—அடுத்த முறை 'லாரலப்பா' முதலிய பாடல்களைக் கேட்கும்போது, எதையோ நினைத்துத் தாளம் போட்டுக் கொண்டு கேட்காமல் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். மூன்று நிமிஷத்தில் முதல் இரண்டு வரிகளை எத்தனை தடவை திருப்பித் திருப்பி ஒரு வித மாறுதலுமில்லாமல் அவற்றில் பாடி யிருக்கிறது என்று கவனியுங்கள். 'டக்கு டக்கு' என்று தாளம் போடக்கூடிய சௌகரியம் ஒன்றைத் தவிர வேறு எந்த விதமான சங்கீதக் கலையின் உயர்ந்த அம்சமாவது அந்தப் பாடல்களில் இருக்கிறதா என்று கவனித்துப் பாருங்கள்.

அமரகவியின் திருவிழா



பாரதி அன்பர்கள் பாக்கிய சாலிகள்; இலக்கிய நண்பர்கள் கொடுத்து வைத்தவர்கள். செப்டம்பர் 5உ அவர்களுக்கு இலட்சியமில்லை. செப்டம்பர் 8உ 9உகளைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அவையெல்லாம் என்ன வேணுமோ, ஆகிப் போகட்டும். செப்டம்பர் 11உ முதல் ஒரு வாரம் அமரகவி பாரதியாரின் திருவிழாக் கொண்டாட்டம் நடக்கப் போகிறது. அதை யாரால் தடுக்க முடியும்!

இவ்வாண்டில் எட்டயபுரத்தில் நன்றாக மழை பெய்து அக்கம் பக்கம் சுபிட்சமாக இருக்கிறதாம். இதுவும் பாரதி அன்பர்களுக்கு ஒரு குதூகலமான செய்திதான்.

சென்ற ஆண்டில் கோவில்பட்டி தாலுக்காவில் கடும் பஞ்சம் காரணமாக பாரதியார் பிறந்த ஊரில் பாரதி மண்டபத்தில் பாரதி விழாவை அடக்கமாகக் கொண்டாடினார்கள்.

இவ்வாண்டில் ஓரளவு சுபிட்சமேற்பட்டிருப்பதால் எட்டயபுரத்தில் சிறப்பான முறையில் விழாவை நடத்தப் போகிறார்கள். பாரதி சங்கத்தின் காரியதரிசியும் பொக்கிஷதாரருமான ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். எட்டயபுரத்து அன்பர்களும் உற்சாகமாக அத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு பாரதி விழாவைக் கனம் பெருமாள்சாமி ரெட்டியார் ஆரம்பித்து வைப்பார். பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை விழாவுக்குத் தலைமை வகிப்பார். தமிழ்நாட்டு மகா கவியான திருவள்ளுவரின் திரு உருவப்படம் திரு விழாவின் போது திறந்து வைக்கப்படும்.

பிரின்ஸ்பால் ஏ. சீனிவாச ராகவன், ஸ்ரீ சிவஞான கிராமணியார், ஸ்ரீ பெரியசாமித் தூரன், ஸ்ரீ சொ. முருகப்பா, ஸ்ரீ திரிலோக சீதாராம், ஸ்ரீமதி சகுந்தலா பாரதி (மகா கவியின் புதல்வியார்) ஆகியவர்கள் பாரதியாரின் கவிதையைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் இன்னிசை விருந்து அளிப்பார். திரு என். எஸ். கிருஷ்ணன் (அதற்குள் ருஷியாவுக்குச் செல்லாவிட்டால்) காந்திமகான் காலட்சேபம் நடத்தி மக்களை மகிழ்விப்பார்.

எட்டயபுரத்துப் பாரதி விழாவில் பாரதியார் சங்கத்தின் அங்கத்தினருக்கு விசேஷ வசதிகள் உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறோம். அங்கத்தினர்கள் வருஷ சந்தாவைக் காரியதரிசிக்கு அனுப்பி அழைப்புச் சீட்டு பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

காரியதரிசியின் விலாசம்:—ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார், எவர்கிரீன், தியாகராஜாரோடு, தியாகராஜ நகர், சென்னை.

<u>அட்டைப்பட விளக்கம்</u>


மாலைக் கதிரவன் மலைவாயில் விழும் நேரம் நெருங்கி விட்டது. இன்னும் காலந் தாழ்த்தக் கூடாது என்று பெண்கள் எல்லாரும் உற்சாகமாகத் தங்கள் கூந்தலைப் பின்னி முடித்துப் பிச்சிப்பூ சூடி, பிறை நுதலில் வண்ணத் திலகமிட்டுச் சிங்காரித்துக் கொண்டனர். அவளும்தான் சிங்காரித்துக் கொண்டாள். சிங்காரித்து என்ன பயன்! அவள் சிங்காரமெல்லாம் அவள் உள்ளத்துச் சோகத்தை இன்னும் அதிகப்படுத்திக் காட்டின. ஆம், அவள் கணவன் இன்னும் திரும்பி வரவில்லை. அந்தப் பிரிவாற்றாமையால் ஏங்குகிறாள்.

'மல்லிகைப் பூ வாங்கி வைத்தோமே அதையாகிலும் மாலையாகத் தொடுப்போம்' என்று ஊசியும் நூலுமாக உட்கார்ந்தாள். நாலு பூக்களைக் கூடத் தொடுத்து விட்டாள். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது. கவனமாய்க் கேட்டாள். வேறு எங்கிருந்துமல்ல; அவள் உள்ளத்திலிருந்துதான் வந்தது அந்தக் குரல்.

மன்னர் வருவார் என்று
மல்லிகைப்பூ வாங்கி வைச்சேன்
மன்னர் இன்னும் வரவில்லை
மல்லிகைப்பூ வாடிப் போச்சு!

கையில் எடுத்த பூ கையிலேயே இருந்து விட்டது. பிடித்த ஊசி பிடித்த நிலையிலேயே இருந்து விட்டது. அப்படிப் பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டாள்.

ஆனால் உலகில் எதுவும் நிலையல்ல. இந்தத் துயரமும் நிலையானதல்ல. "பெண்மணி! உன் கணவன் எங்கேயாவது அரைப்படி அரிசியும், அரைப்பலம் சர்க்கரையும் கிடைக்குமா என்று பார்க்கத்தான் போயிருப்பான். வெறுங் கையோடாவது திரும்பி வந்து விடுவான்! கவலைப்படாதே!" என்று நேயர்களின் சார்பாக ஆறுதல் கூறுகிறோம்.


உலகின்
மிகவும்
உன்னத
கேளிக்கைகளை
டெஸ்லா
மூலம் அனுபவியுங்கள்
TESLA
கீழ் நாட்டுச் சங்கீதமானாலும் மேல் நாட்டுச் சங்கீதமானாலும் இங்கிலாந்தில் ஒரு பேரறிஞர் சொற்பொழிவானாலும், மெல்போர்னில் நடக்கும் விறுவிறுப்பான கிரிக்கெட் விளையாட்டானாலும், நீங்கள் உங்கள் டெஸ்லா ரேடியோ மூலம் உலகத்தில் எங்கேயிருந்தும் எந்நேரத்திலும் ஆனந்தமாகக் கேட்கலாம்.
டெஸ்லா ஸிம்போனி:
விலை ரூ. 575/-
விலை AC ரூ. 450/-
உங்களுக்குகந்த மாடலைத் தேர்ந்தெடுங்கள்
ஒவ்வொன்றும் அதன் விலைக்குச் சிறந்தது!
மிகவும் சேர்த்தியான டெஸ்லா ரேடியோ ஒன்று உங்களிடம் இருக்கட்டும். அதன் உன்னத நாதம், அழகிய காபினெட் உங்களை ஆனந்த சிகரத்திற்கே அழைத்துச் செல்லும்.
டெஸ்லா பயனீர்:
5 டியூப் பாபல் வால்வு ஏ.ஸி., டி.ஸி. செட்.
விலை ரூ. 375/-
ANY TIME – ANYWHERE WITH TESLA
4 வால்வ் 3 வேவ் பாண்டுடன் தானாக இயங்கும் வால்யூம் கண்ட்ரோலுடன் ஏ.ஸி., டி.ஸி. மின் இயங்கும் குறைந்த விலை செட். விலை ரூ. 250/-
டெஸ்லா (இந்தியா) ரேடியோ மானுபாக்சரிங் கம்பெனி, லிமிடெட்
11/13, ஹார்னிமான் சர்க்கிள், பம்பாய்-1

பொன்னியின் செல்வன்



கல்கி

அத்தியாயம் 28

இராஜபாட்டை

மதங் கொண்ட யானை ஆழ்வார்க்கடியானுடைய கைத் தடிக்கும் அவனுடைய அதட்டலுக்கும் பயந்து நின்றுவிடுமா, என்ன? தும்பிக்கையை எடுப்பாகத் தூக்கிக் கொண்டு, வழியிலிருந்த செடி கொடிகளைச் சிதைத்துக் கொண்டு, மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

அடுத்த விநாடி ஆழ்வார்க்கடியானுடைய கதி அதோ கதிதான் என்பதில் இனிச் சந்தேகமில்லை!

துணைக்கு வந்த வீரர்கள் இருவரும் நின்ற இடத்தில் நின்றபடியே 'ஹாய்' 'ஹாய்' என்று கூச்சலிட்டார்கள்.

வந்தியத்தேவன் தன் கையிலிருந்து நழுவித் தரையில் விழுந்த வேலைத் திரும்ப எடுத்துக் கொண்டு கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்க எண்ணினான்.

அதே சமயத்தில் ஆழ்வார்க்கடியான் தன் கையிலிருந்த தடியை வீசி மத யானை மீது எறிந்தான்.

மறு கணம் ஆழ்வார்க்கடியானைக் காணவில்லை!

அவனுடைய தலைப்பாகை காற்றில் பறந்து சென்று ஒரு மரக் கிளையில் விழுந்தது.

ஆழ்வார்க்கடியான் என்ன ஆகியிருப்பான் என்று சிந்திப்பதற்குள்ளே அதைக் காட்டிலும் முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது.

அவன் மறைந்த இடத்துக் கருகில் சென்ற யானை திடீரென்று மண்டியிட்டது போல் முன் கால்களை மடக்கிக்கொண்டு முன்புறமாகச் சாய்ந்தது.

அந்த வனப் பிரதேசம் முழுவதிலும் எதிரொலி செய்த ஒரு பயங்கரமான பிளிறல் சத்தம் கேட்டது.

மறுகணத்தில் மலை போன்ற அந்த மத யானையின் உருவமும் முழுதும் மறைந்து விட்டது.

யானை அந்தப் படு பாதாளத்தில் உருண்டு உருண்டு விழுந்த போது சரிந்து விழுந்த பாறைகளின் தூசிப் படலம் மேலே எழுந்து பரவியது.

என்ன நடந்தது என்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்வதற்கு வந்தியத் தேவனுக்குச் சிறிது நேரம் ஆயிற்று.

ஆழ்வார்க்கடியானுக்குப் பின்னால் பெரும் பள்ளம் இருந்தபடியால் அவன் தடியை வீசி எறிந்த வேகத்தில் பின்புறம் சாய்ந்து விழுந்து விட்டான்.

அவனை நோக்கிச் சென்ற மதங் கொண்ட யானையும் முன்னங் கால் இரண்டையும் பள்ளத்தில் வைத்து விட்டது. பிறகு சமாளிக்கப் பார்த்தும் முடியவில்லை. அதனுடைய குன்

ஒருத்த உடலின் பெருங் கனமே அதற்குச் சத்துருவாகி அந்தப் பள்ளத்தில் கொண்டு தள்ளி விட்டது!

மத யானைக்கும் மத யானையையொத்த ஆழ்வார்க் கடியானுக்கும் ஒரே நேரத்தில் ஒரேவிதமான மரணம் சம்பவித்து விட்டது!

இதை வந்தியத்தேவனுடைய உள்ளம் உணர்ந்ததும் அவனுடைய உடம்பு சிலிர்த்தது.

அவனுடைய இதயத்தில் பெரும் வேதனை உண்டாயிற்று.

அந்த ஸ்ரீ வைஷ்ணவன்மீது வந்தியத்தேவனுக்கு முதலில் ஏற்பட்டிருந்த சந்தேகங்களெல்லாம் மறைந்து பிரயாணத்தின் போது அவன் பேரில் ஒருவித வாஞ்சையே ஏற்பட்டிருந்தது.

அப்படிப்பட்டவனுக்கு இத்தகைய கதியா நேர வேணும்?

அவனுடைய உதவியும் வழித் துணையும் இல்லாமல் இனித் தான் ஏற்றுக் கொண்டு வந்த காரியத்தைத் தானாகவே செய்து முடிக்க வேணுமே என்ற கவலையும் தோன்றியது.

வைஷ்ணவனும் யானையும் பள்ளத்தில் விழுந்து மறைந்த இடத்துக்கு அருகில் வந்தியத்தேவன் வந்து நின்று கீழே உற்றுப் பார்த்தான்.

முதலில் ஒரே புழுதிப் படலமாக இருந்தது. ஒன்றுமே புலப்பட வில்லை.

கொஞ்சம் கொஞ்சமாகப் புழுதி அடங்கி, யானை சென்ற வழியில் செடி கொடிகளும் பாறைகளும் ஊதமாகி விழுந்திருப்பது தெரிந்தது.

“என்ன, தம்பி! சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறாய்! ஒரு கை கொடுக்கக் கூடாதா!” என்ற குரலைக் கேட்டதும் வந்தியத் தேவனுக்கு ஒரு தரம் தூக்கி வாரிப் போட்டது.

அதிசயத்தினால் தள்ளாடி விழாமல் குரல்வந்த இடத்தை நோக்கினான்.



யானை விழுந்த வழியை யொட்டினாற் போல் செங்குத்தான பாறையோரத்தில் ஒரு மரத்தின் ஆணி வேரைப் பிடித்துக் கொண்டு ஆழ்வார்க்கடியான் தொங்கிக் கொண்டிருந்தான்.

வந்தியத் தேவனுடைய குதூகலத்துக்குக் கேட்க வேணுமா? உடனே வேடிக்கைப் பேச்சும் வந்துவிட்டது.

“ஓஹோஹோ! வைஷ்ணவரே! கஜேந்திரனுக்கு மட்டும் மோட்சத்தை அளித்துவிட்டு நீர் திரிசங்கு சொர்க்கத்தில் தங்கி விட்டீரே?” என்று சொல்லிக் கொண்டே, வீரர்களைக் கைதட்டி அழைத்தான்.

தன் அரையில் சுற்றியிருந்த துணிச் சுருளை அவிழ்த்து எடுத்து ஒரு முனையை இரு வீரர்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்தான்.

இன்னொரு முனையைக் கீழே விட்டதும் ஆழ்வார்க் கடியான் மரத்தின் வேரை விட்டு விட்டுத் துணிச் சுருளைப் பிடித்துக் கொண்டான்.

மூன்று பேருமாகப் பிடித்து இழுத்து உன்பாடு என்பாடு என்று அந்த வைஷ்ணவனை மெதுவாக மேலே கொண்டு வந்து சேர்த்தார்கள்.

சிறிது நேரம் வரையில் ஆழ்வார்க் கடியான் நெடிய பெருமூச்சு விட்டுக் கொண்டு பிரக்ஞையற்றவன் போலப் படுத்துக் கிடந்தான்.

மற்றவர்கள் அவனைச் சூழ்ந்து நின்று ஆசுவாசப் படுத்தினார்கள்.

சட்டென்று எழுந்து உட்கார்ந்து “கிளம்புங்கள்! நன்றாய் இருட்டுவதற்குள் இராஜ பாட்டைக்குப் போய்ச் சேர்ந்து விடவேண்டும். என் தலைக் குட்டை எங்கே? தடி எங்கே?” என்று கேட்டான்.


“ஒன்றும் அவசரமில்லை. நீர் இன்னும் சிறிது நேரம் ஆசுவாசப் படுத்திக் கொள்ளும். பிறகு

நாம் புறப்படலாம்'' என்று சொன்னான் வந்தியத் தேவன்.

அப்போது ஒரு நரி ஊளையிடும் சத்தம் கேட்டது.

இன்னொரு பக்கத்தில் இன்னொரு நரி தன் இனிய கீதத்தை ஆரம்பித்தது.

நூறு இருநூறு நரிகள் கோஷ்டி கானம் இசைத்தன.



மேட்டுப் பிரதேசமாயிருந்த காட்டிலிருந்து கீழ பள்ளத்தை நோக்கிப் பல இடங்களில் சலசலப்புப் பிரயாணங்கள் ஏற்பட்டன.

புதர்களில் மறைந்து செல்லும் சிறுத்தைகளே அச்சலசலப்புகளுக்குக் காரணம் என்று சொல்லித் தெரிய வேண்டிய அவசியமிருக்கவில்லை.

பள்ளத்திற்கு மேலே கழுகுகளும் பருந்துகளும் வட்டமிடத்தொடங்கின.

''யானையின் மரணம் என்பது சாதாரண விஷயமல்ல. சுற்றுப் பக்கம் வெகு தூரத்திலிருந்தெல்லாம் ஊன் தின்னும் மிருகங்களும் பட்சிகளும் சற்று நேரத்துக்கெல்லாம் கஜேந்திரனுடைய உடலைப் பட்சிப்பதற்காக வந்து விடும். நாமும் அவற்றுக்குப் பட்சணமாகி விடுவோம். புறப்படுங்கள் உடனே!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

அவன் கூறியதை வந்தியத்தேவன் இப்போது மறுத்துப் பேசவில்லை.

நால்வரும் காட்டுவழியில் எவ்வளவு துரிதமாகப் போக முடியுமோ அவ்வளவு துரிதமாகச் சென்றார்கள்.

அஸ்தமிக்கும் சமயத்துக்கு இராஜ பாட்டையை அடைந்தார்கள்.

இராஜ பாட்டையில் வருவோரும் போவோரும் வண்டிகளும் வாகனங்களுமாக ஒரே கலகலப்பாக இருந்தது.

யானைகளின் மீது சர்வ சாதாரணமாக ஏறி வருகிறவர்களைப் பார்த்து வந்தியத்தேவன் வியப்புற்றான். ''இம்மாதிரி மிருகம் ஒன்றுதானா காட்டுப் பாதையில் அவ்வளவு பீதியை உண்டு பண்ணி விட்டது?'' என்று எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்டான்.

''இந்த இராஜ பாட்டை எங்கிருந்து எங்கே போகிறது? நாம் எங்கே வந்திருக்கிறோம்? எங்கே போகிறோம்?'' என்று கேட்டான்.

''அநுராதபுரத்திலிருந்து சிம்மகிரிக்குப் போகும் இராஜ பாட்டையில் வந்து சேர்ந்திருக்கிறோம். தம்பள்ளை இன்னும் அரைக்காத தூரம் இருக்கிறது. இராத்திரி அங்கே போய்ச் சேர்ந்து விடலாம்'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''இராஜ பாட்டை வழியாகச் சுகமாய் வந்திருக்கலாமே? எதற்காகக் காட்டு வழியாக வந்தோம்?''

''இராஜ பாட்டையில் நாம் நெடுகிலும் வந்திருந்தால் நூறு இடத்தில் நம்மை நிறுத்திச் சோதனை செய்திருப்பார்கள். அநுராதபுரத்தில் அடியோடு நிறுத்திப் போட்டிருப்பார்கள். நாம் யாரைத் தேடி வந்திருக்கிறோமோ அவர் சிம்மகிரிக்குப் பக்கம் சென்றிருப்பதாக அறிந்தேன். அதனால்தான் குறுக்கு வழியில் வந்தேன். இன்னமும் அவரை நாம் கண்டு பிடிக்கத்தான் போகிறோமோ, இல்லையோ? வேறு எங்கேயாவது போகாதிருக்க வேண்டும்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

இராஜ பாட்டையின் இரு பக்கத்திலும் ஏராளமான வீடுகளும் கிராமங்களும் கடை வீதிகளும் கொல்லர்—தச்சர் பட்டறைகளும் இருந்தன. அவற்றில் வசித்தவர்களும் தொழில் செய்தவர்களும் பெரும்பாலும் சிங்களவர்களாகத் தோன்றினார்கள்.

இராஜ பாட்டையில் தமிழ் நாட்டுப் போர் வீரர்கள் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் இருபுறமும் வசித்த சிங்களவர்கள் எவ்விதத் தடையுமின்றி நிர்ப்பயமாய்த் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

''இந்தப் பகுதியெல்லாம் இப்போது யாருடைய வசத்தில் இருக்கிறது?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"சோழ சைன்யம் தம்பள்ளை வரையில் கைப்பற்றியிருக்கிறது. அப்பால் சிம்மகிரிக் குன்றும் கோட்டையும் மகிந்தன் வசம் இருக்கின்றன."

"இந்தப் பக்கங்களில் வசிக்கும் ஜனங்கள்?"

"பெரும்பாலும் சிங்களத்தார்தான். 'பொன்னியின் செல்வர்' இங்கே வந்த பிறகு யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. சோழ வீரர்களுக்கும் மகிந்தனுடைய வீரர்களுக்குந்தான் சண்டை. அதாவது போர்க்களத்தில் எதிர்ப்படும்போது. மற்றப்படி குடிகள் நிர்ப்பயமாய் வாழலாம். புத்த குருமார்களுக்கு ஒரே கொண்டாட்டம். அநுராதபுரத்தில் இடிந்து போன புத்த விஹாரங்களையெல்லாம் நம் இளவரசர் திரும்பப் புதுப்பித்துக் கட்டும்படி கட்டளையிட்டிருக்கிறாராம்! கேட்டாயா கதையை? பௌத்த குருக்கள் ஏன் குதூகலமடைய மாட்டார்கள்? இளவரசரை நான் சந்திக்கும்போது 'நீங்கள் செய்யும் காரியம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!' என்று சொல்லிவிடப் போகிறேன்!"

"கட்டாயம் சொல்லி விடும். உமக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்வதற்கு இந்த இளவரசர் யார்? அவருக்கு என்ன கொம்பு முளைத்திருக்கிறதா?" என்றான் வல்லவரையன்.

"அவருக்குக் கொம்பு முளைத்திருக்கவில்லை, தம்பி! அது உண்மையே! ஆனாலும் அவரிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அவருக்குப் பின்னால் யார் என்ன குறை சொன்னாலும், எதிரில் அவரைப் பார்த்ததும் மயங்கிப் போய் நின்று விடுகிறார்கள். இளவரசரை எதிர்த்துப் பேசும் சக்தி யாருக்கும் இருப்பதில்லை. அத்தகைய சக்தி,—இளவரசரைத் தம் இஷ்டப்படி நடக்கச் செய்யும் சக்தி,—ஒரே ஒருவருக்குத்தான் உண்டு......"

"ஆம், ஆம்! வீர வைஷ்ணவ ஆழ்வார்க்கடியாரின் அற்புத சக்தியை அறியாதவர் யார்? அப்படிப்பட்ட பயங்கர மத யானையைக் கைத்தடியால் எதிர்த்து வென்றவருக்கு இளவரசர் எம்மாத்திரம்!"

"நான் கூறியதை நீ சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை, தம்பி! பொன்னியின் செல்வர் எங்கே? இந்த ஏழை வைஷ்ணவன் எங்கே? மத யானையைக் கைத் தடி கொண்டு எதிர்ப்பேன்; புலியையும் கரடியையும் சிங்கத்தையும் வெறுங் கையோடு எதிர்ப்பேன். ஆனால் பொன்னியின் செல்வர் முன் நேருக்கு நேர் நிற்கும் போது என் தைரியமெல்லாம் எங்கேயோ போய் விடுகிறது. நெஞ்சு நெகிழ்ந்து விடுகிறது. தொண்டை அடைத்து விடுகிறது. வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளி வருவது பிரம்மப் பிரயத்தனமாகி விடுகிறது..."


"அவரை ஆளும் சக்தி படைத்தவர் என்று பின் யாரைச் சொன்னீர்!"

"உலகம் தெரிந்த விஷயமாயிற்றே; உனக்குத் தெரியாதா? இளைய பிராட்டியைப் பற்றித்தான் சொல்கிறேன். குந்தவை தேவியின் வாக்குத்தான் அவருக்கு வேத வாக்கு!"

"ஓஹோ! பழையாறை இளைய பிராட்டியைப் பற்றியா சொல்கிறீர்? உமது சகோதரி பழுவூர் இளையராணியைப் பற்றித்தான் சொல்கிறீரோ என்று பார்த்தேன்!"

"நந்தினியும் அபூர்வ சக்தி உடையவள்தான். ஆனால் அவளுடைய சக்தி வேறு விதமானது."

"எப்படி? என்ன வித்தியாசம்?"



"ஒருவன் நரகத்தில் விழப் போகிறவனாயிருந்தால், அவனைத் தடுத்து நிறுத்திக் குந்தவை தேவி சொர்க்கத்துக்கு அவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார். அது ஒரு வித சக்தி. நந்தினி என்ன செய்வாள் தெரியுமா? அவளுடைய சக்தி இன்னும் ஒரு படி மேலானது என்றே சொல்ல வேண்டும். நரகத்தையே சொர்க்கம் என்று சொல்லிச் சாதித்து, அதை நம்பும்படியும் செய்து, நரகத்தில் சந்தோஷமாகக் குதிக்கும்படி செய்து விடுவாள்!"

வந்தியத் தேவனுக்கு உடம்பு சிலிர்த்தது. நந்தினியின் குணாதிசயத்தையும் அவளுடைய பயங்கர மோகன சக்தியையும் இந்த வீர வைஷ்ணவன் எவ்வளவு சரியாக அளந்து மதிப்பிட்டு வைத்திருக்கிறான்! நந்தினி இவனுடைய சகோதரி என்று சொல்வது மெய்யாயிருக்க முடியுமா?

இந்த யோசனையில் வந்தியத்தேவன் ஆழ்ந்து விட்டபடியால் மேலே ஒன்றும் கேட்கவில்லை. சிறிது தூரம் மௌனமாக நடந்தார்கள்.

அந்த மௌனத்தைக் கலைத்துச் சில குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டது. அவர்களுக்கு எதிர்ப்பக்கத்திலிருந்து அச்சத்தம் வந்தது. சில நிமிஷத்துக்கெல்லாம் நாலு குதிரைகள் வெகு வேகமாக நாலுகால் பாய்ச்சலில் வந்தன. சூறாவளிக் காற்றைப் போல் புழுதியைக் கிளப்பி விட்டுக் கொண்டு வந்த அக்குதிரைகள் மின்னல் மின்னும் நேரத்தில் நம் கால் நடைப் பிரயாணிகளைத் தாண்டிச் சென்றன. ஆயினும் அந்தச் சிறிய நேரத்திலேயே அக்குதிரைகளின் மேலிருந்தவர்களில் ஒருவருடைய முகத்தை வந்தியத்தேவன் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிந்தது! ஆகா! பார்த்திபேந்திர வர்மன் அல்லவா இவன்? காஞ்சியிலுள்ள இளவரசர் ஆதித்தரின் அந்தரங்க நண்பன் அல்லவா? நம்மை அவ்வளவாகப் பிடிக்காதவன் அல்லவா? இவன் எங்கே வந்து விட்டு எங்கே போகிறான்! எதற்காக இவன் இலங்கைக்கு வந்தான்? எப்போது வந்தான்?......

பிரயாணிகளைத் தாண்டிச் சென்ற குதிரைகள் சற்றுத் தூரம் போனதும் கம்பீரமான ஒரு குரலில் "நில்லுங்கள்!" என்ற கட்டளை பிறந்தது.

குதிரைகள் நின்றன; பிறகு, இந்தப் பக்கமாகத் திரும்பின. அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் குதிரையைச் செலுத்திக் கொண்டு முன்னால் வந்தான். மற்றவர்கள் பின் தொடர்ந்து வந்தார்கள்.

முன்னால் வந்தவன், வல்லவரையன் எண்ணியது போலவே, நாம் முன்னம் மாமல்லபுரத்தில் பார்த்திருக்கும் பார்த்திபேந்திர பல்லவன்தான்.

வந்தியத்தேவனை அவன் உற்றுப் பார்த்துவிட்டு, "இது என்ன அப்பா இது? நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? தஞ்சாவூரில் நீ திடீரென்று மாயமாய் மறைந்து விட்டாய் என்று சொன்னார்களே? உன்னைப் பழுவேட்டரையர்கள் வேலை தீர்த்திருப்பார்கள் என்றல்லவா நினைத்தேன்!" என்றான்.

"பழுவேட்டரையர்களால் என்னை அவ்வளவு எளிதில் தீர்த்துக் கட்ட முடியுமா? நான் பழைய வாணர் குலத்தைச் சேர்ந்தவன் அல்லவா?"

"ஆம், ஆம்! எப்படியாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு தப்பிப் பிழைப்பதில் உனக்கு இணை வேறு யாரும் இல்லை......"

"ஐயா! உயிரைக் காப்பாற்றிக் கொள்வது அவசியமாயிருக்கும்போது காப்பாற்றிக் கொள்வேன். உயிரைக் கொடுக்க வேண்டிய சமயத்தில் கொடுக்கவும் அறிவேன். அப்படி நான் சாவதாயிருந்தால் தங்களைப் போன்ற பழைய பல்லவ குலத்தோன்றலுடன் சண்டை போட்டுச் சாவேனே தவிர, கேவலம் பழுவேட்டரையர்களின் கையினால் சாவேனா?" என்று சொல்லிக்கொண்டே வந்தியத்தேவன் உறையிலிருந்து வாளை உருவினான்.

"சேச்சே! உன்னோடு என்னைச் சண்டைபோடச் சொல்கிறாயா? அதுவும் இந்தத் தூர தேசத்திலே வந்து! வேண்டாம், தம்பி, வேண்டாம்! எனக்கு அவசர வேலை இருக்கிறது! உன்னிடம் இளவரசர் ஒப்புவித்த காரியம் என்ன ஆயிற்று?"

"செய்து முடித்து விட்டேன், ஐயா! சக்கரவர்த்தியிடம் கொடுக்கும்படி பணித்த ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தேன். இளைய பிராட்டியிடம்

கொடுக்கச் சொன்ன ஓலையை அவரிடம் கொடுத்தேன்."

"இங்கே எதற்காக வந்தாய்?"

"இலங்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு நாளாக இருந்தது. அதற்காக இந்த வைஷ்ணவரோடு புறப்பட்டு வந்தேன்......"

"ஆகா! இந்த ஆளைக்கூட நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே!"

"ஆம், மகாராஜா! பார்த்திருக்கிறீர்கள். என் சகோதரியைப்பற்றி ஏதாவது தெரியுமா என்று விசாரிப்பதற்காக இளவரசர் ஆதித்தரிடம் வந்தேன். அப்போது தாங்களும் அவர் பக்கத்தில் இருந்தீர்கள்!......"

"அது யார் உன் சகோதரி?"

"இப்போது பழுவூர் இளையராணியாக விளங்கும் நந்தினிதேவி!"

"ஆகா! அந்த விஷப் பாம்பினால் நாட்டுக்கு நேர்ந்திருக்கும் தீங்குகளையெல்லாம் நினைத்தால்.....அவளுடைய அண்ணனாயிருப்பதற்காக உன்னைக் கழுவில் ஏற்ற வேண்டும்!"

"மகாராஜா! ஒரு நாள் நான் கழுவில் ஏறிச் சாவதாகவே சபதம் செய்து கொண்டிருக்கிறேன். அன்றைக்குத் தாங்களே வந்து தங்கள் கையினாலேயே அந்தத் திருக் கைங்கரியத்தைச் செய்து விட்டால்......"

"உன்னைக் கழுவில் தூக்கிப்போடவென்றால் முடியுமா? அதற்கு நூறு ஆள் வேண்டும். இருக்கட்டும்; நீங்கள் வருகிற வழியில் இளவரசரைப்பற்றி ஏதாவது செய்தி கேள்விப்பட்டீர்களா? அநுராதபுரத்துக்கு அவர் வந்து விட்டாரா, தெரியுமா?" என்று பார்த்திபேந்திரன் கேட்டான்.

"அதைப்பற்றியெல்லாம் எங்களுக்கு என்ன தெரியும், மகாராஜா! நாங்கள் காட்டு வழியில் வந்தோம்! காட்டில் ஒரு மத யானை என்னைத் துரத்திக் கொண்டு வந்தது! அப்போது, பாருங்கள்......"

"போதும் உன் கதை! யார் கண்டது? ஒரு நாளைக்கு உன்னை நானே கழுவில் தூக்கிப் போட்டு உன்னுடைய ஆசையை நிறைவேற்றினாலும் நிறைவேற்றுவேன்!" என்று சொல்லிக் கொண்டே பார்த்திபேந்திரன் குதிரையைத் திருப்பினான்.

ஆழ்வார்க்கடியான் பார்த்திபேந்திரனுடன் பேசியபடியே அவனுடனிருந்த ஆட்களையெல்லாம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லாரும் குதிரைகளைத் திருப்பிக் கொண்டு போனபிறகு ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனிடம் "தம்பி! அந்த மற்ற மூன்று ஆட்களையும் பார்த்தாயா? அவர்களில் யாரையாவது உனக்கு முன்னம் தெரியுமா?" என்று ஆவலோடு கேட்டான்.

"இல்லை, நான் பார்த்ததேயில்லை!" என்றான் வந்தியத்தேவன்.

"ஆம், நீ பார்த்திருக்க முடியாதுதான். அவர்களில் இரண்டு பேரை நான் பார்த்திருக்கிறேன். திருப்புறம்பயம் பள்ளிப் படையில் நள்ளிரவில் பார்த்தேன்! அப்பா! என்ன பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்?" என்று கூறியபோது ஆழ்வார்க்கடியானுடைய உடம்பு முழுவதும் நடுங்கிற்று.

"அப்படி என்ன பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்?"

"சோழர் குலப் பூண்டே இந்த உலகில் இல்லாமல் அழிந்து விடுவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார்கள்......"

"ஐயையோ!"

"இவர்கள் எப்படி நமக்கு முன்னால் இங்கு வந்து சேர்ந்தார்களோ தெரியவில்லை! கெட்டிக்காரர்கள்! இந்த முரட்டுப் பல்லவனை எப்படியோ பிடித்துக் கொண்டார்கள் பார்!" என்று சொல்லி விட்டு ஆழ்வார்க்கடியான் மௌனமானான்.

வந்தியத்தேவனுக்குக் கோடிக்கரையில் அவன் அறிந்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அவன் கோடிக்கரை வந்ததற்கு முதல் நாள்தான் இரண்டு பேர் அவசரமாக இலங்கைக்குப் போனார்கள் என்றும், பூங்குழலியின் தமையன் அவர்களைப் படகில் ஏற்றிச் சென்றான் என்றும் கேள்விப்பட்டான் அல்லவா?

இவர்களில் அந்த இரண்டு பேரும் இருப்பார்களோ? அப்படியானால் பார்த்திபேந்திரனுக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

நால்வரும் தம்பள்ளை என்னும் புத்த புண்ணிய க்ஷேத்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். (தொடரும்)

அக்கப்போர்

"சர்ப்பம் ஒன்று குழந்தையுடன் விளையாடியது." —ஜபல்பூர் செய்தி

இது என்ன அசந்தர்ப்பம்!

★

"பிரதம மந்திரியானவர் தன்னுடைய சகாக்களைப் பொறுக்குவதற்கு முன் காங்கிரஸ் காரியக் கமிட்டியையும் அக்கிராஸனரையும் கலந்தே தீர வேண்டும் என்று ஸ்ரீ தாண்டன் கருதுகிறாராம்." —ஒரு செய்தி

இது என்ன விதண்டா வாதம் என்று நேருஜி நினைக்கலாம்!

★

"அமெரிக்கர் குணத்தை இந்தியக் கவி பாராட்டுகிறார்." —ஒரு செய்தித் தலைப்பு

அதிக போக்கிற்கும், கற்பனைக்கும் அதிகம் இடம் கொடுக்கும் விஷயம் அல்லவா!

★

"பாலாற்றில் அணை."

—ஒரு செய்தித் தலைப்பு

வெள்ளம் வருமுன் அணை போடுவதற்கு நல்ல உதாரணம்!

★

"சைக்கிள் திருட்டு சம்பந்தமாக ஒரு பி. ஏ. பட்டதாரியைப் போலீஸார் கைது செய்திருக்கின்றனர்." —ஒரு செய்தி

பி. ஏ. பட்டதாரிக்குப் போலீஸார் இப்பொழுது திருட்டுப் பட்டம் கட்டி விட்டார்கள் போலிருக்கிறது!

★

"அமெரிக்கா அணுகுண்டு வீசிய இனத்தன்று நாகசாகி மக்கள் ஒரு நிமிஷ நேரம் தலைகுனிந்து தியானித்தனர்." —ஒரு செய்தி

அணுகுண்டை வீசின அமெரிக்கா ஒரு கணமேனும் தலைகுனிந்து நின்றதா என்பதை அறிய விரும்புகிறோம்.

"சென்னை முஸ்லிம் லீக் தலைவர் ஸ்ரீ இஸ்மாயில் கிதிமந்திரி களம் கோபால் ரெட்டியிடம் காங்கிரஸ் டிக்கெட்டுகளைப் பெறலாம் என்று தந்திரமாக வலை வீசினார்."

—ஒரு செய்தி விமரிசனம்

களம் கோபால் ரெட்டியிடம் டிக்கெட்டுகள் வாங்கினால் விற்பனை வரி, தமாஷா வரி எல்லாவற்றையும் சேர்த்துக் கொடுக்கவேண்டியிருக்கும் என்பது ஸ்ரீ இஸ்மாயிலுக்குத் தெரிந்திருக்கலாமே!

★

"'தேசம் முழுவதும் பண்டித நேருவை ஆதரிக்கிறது. அவர் காரியக் கமிட்டியை விட்டு விலகாமல் இருப்பதற்கு வேண்டியதைக் காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ தாண்டன் செய்ய வேண்டும்,' என்று வெற்றிலை பாக்குக் கடை வியாபாரிகள் மகாநாட்டுத் தலைவர் பேசினார்."

—மதுரைச் செய்தி

"வெளியே போகிறேன் என்கிற வரை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்க என்னால் முடியுமா!" என்று ஸ்ரீ தாண்டன் சொல்லலாம்.

★

"அமர இலக்கியமோ இல்லையோ, இது என்னுடைய சொந்த சிருஷ்டி."

—ஒரு நாவலாசிரியர்

ஆசிரியர் ஆர அமர யோசித்து எழுதின புத்தகமாக இருந்தால் அது அமர இலக்கியந்தான்!

★

"உணவு இலாக்கா காரியாலயத்துக்கு முன் ஒரு பட்டினிப் பட்டாளம் இங்கு ஆர்ப்பாட்டம் செய்தது." —கல்கத்தா செய்தி

உணவு இலாக் காரணத்தினால் தானே அவர்கள் உணவு இலாக்காவின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய நேர்ந்தது!

★

"அமரர்......பெயரால் நிதி திரட்டாதீர்கள். அது அவருக்குப் பிடிக்காத விஷயம். ஆனால் அவர் புஸ்தகங்களை வெளியிட்டு, புஸ்தகம் ஒன்றை 50 ரூபாய் விலைக்கு விற்கலாம். பணம் வரும்." —ஒரு யோசனை

தாளிலே பேரு ஏமண்டி!

★

"கராச்சியின் வீதிகளில் ஸைக்குளைம்புக் செய்யப்பட்ட 'ஒட்டிய முஷ்டிகள்' விற்கப்பட்டன." —ஒரு செய்தி

இந்த ஒட்டிய முஷ்டி சமாசாரம் 'சிறுபிள்ளைத்தனமான விளையாட்டு' என்பதற்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும்!

★

"வைத்தியர், நாவிதர், நாயனம் வாசிப்பவர் எல்லாம் ஒருவரே. முதல் இரண்டும் கத்தி சம்பந்தப்பட்டவை. சங்கீதத்தை முதல் இரண்டுடன் ஏன் சேர்த்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை." —ஒரு டாக்டர்

சங்கீதத்தின் பெயரால் கொலை செய்கிறவர்களைப் பற்றி இந்த டாக்டர் கேள்விப்பட்டதில்லையா என்ன!



ஆரோக்கிய ரகசியம்

48. சர்வாங்காசனமும் அதன் நன்மைகளும்


வி. என். குமாரசாமி

இடுப்புக்குச் சற்று மேலே, முதுகுத் தண்டிற்கு இரண்டு பக்கங்களிலும் பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு மூத்திரக்காய்கள் இருக்கின்றன. இதைச் சிறுநீர் பிரித்தி என்றும் சொல்லுவர். மூந்திரிக் கொட்டையைப் போன்ற வடிவமும் சற்றேறக்குறைய நான்கு அங்குல நீளமும், இரண்டு அங்குல அகலமும் ஒரு அங்குல பருமனும் உள்ளதாக இருக்கும். இவற்றினுள் பூராவும் மயிரிழை போன்ற மிகச்சிறிய இரத்தக் குழாய்கள் குறுக்கும் நெடுக்குமாய்ப் பின்னப்பட்டு வலை போல்! இருக்கும். இவைகளை நமது சரீரத்தின் வடிகால் என்று சொல்லலாம். ஹம்ஸப் பட்சி, பாலும் நீரும் கலந்து வைத்தால், பாலை மட்டும் சாப்பிட்டு விட்டு, நீரை வைத்து விடுமாம். அதைப் போலவே இந்த மூத்திரக் காய்களும் செய்கின்றன. சரீரம் முழுவதிற்கும் சென்று, அவைகளுக்கு வேண்டிய சக்தியை அளித்து, வேண்டாத கழிவுகளை, தேய்ந்து மாய்ந்த பொருள்களை எடுத்து வரும் ரத்தமானது இந்த வடிகாலுக்கு வந்துதான், பிறகு இரத்தாசயத்திற்குச் செல்ல வேண்டும். அப்படி வடிகாலுக்குள் அந்த இரத்தம் புகுந்து வருவதற்குள், அங்கு மிக வேகமாய் வேண்டாத பொருள்களைப் பிரிக்கும் வேலை நடைபெறுகிறது. ரத்தத்திலுள்ள நீரையும் வேண்டாத பொருள்களையும் பிரித்து ரத்தத்தை இருதயத்திற்கு அனுப்பிவிட்டு, கழிவுப் பொருள்களை ஒரு வாய்க்காலின் மூலமாகச் சிறு நீர்ப் பைக்கு அனுப்புகிறது. அந்த வாய்க்காலின் கனம் ஒரு அங்குலத்தில் ஐந்தில் ஒரு பங்கும், பத்து அல்லது பன்னிரண்டு அங்குல நீளமும் இருக்கும். சிறு நீர்ப்பை அடி வயிற்றின் கீழ்ப் பாகத்தில் இருக்கிறது. அது சுமார் அரைப் படி நீர் பிடிக்கும். இரத்தத்திலிருந்து பிரிந்த அசுத்த நீர் ஒவ்வொரு சொட்டாய் இதில் வந்து சேரும். சிறுநீர்ப் பை பாதி நிறைந்ததும் சிறு நீர் விடும் உணர்ச்சி ஏற்படும்.


இந்தச் சிறு நீரில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து பங்கு ஜலமும், ஐந்து பங்கு மற்றப் பொருள்களும் இருக்கும். அந்தப் பொருள்களில் பாதி அளவு தசைகளும், எலும்புகளும் அழிவதால் ஏற்படும் கழிவுப் பொருள்களான யூரியாவும், மீதியில் நாம் சாப்பிடும் போது சேர்த்துக் கொள்ளும் உப்பும், சல்பேட்டும் இருக்கும். நீரின் நிறம் வெண்ணிற மஞ்சளாய் இருக்கும்.

பிட்யூடரி, தைராய்ட், கல்லீரல், பாங்கிரியாஸ் முதலியவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டவைகள் என்று முன்பே விவரிக்கப் பட்டிருக்கிறது. இவைகளில் எதற்காகிலும் ஒன்றிற்குச் சற்று அசௌகரியமோ, நோயோ உண்டானாலும் அது மூத்திரக்காய்களைப் பாதிக்கும். இவைகளைப் பாதிப்பது என்றால் என்ன! கண்டபடி நேரமில்லாத நேரங்களில் சாப்பிடல், ஒழுங்கான தேகப் பயிற்சி இல்லாமை, சரீர உழைப்பு இல்லாமை, நெய்யும், இனிப்புப் பண்டங்களும் அதிகமாய்ச் சாப்பிடல், அதிக உறைப்பு, பெருங்காயம், ஊறுகாய்கள் சேர்த்துக் கொள்ளல் முதலியவைகள்தான். தவிர பலவித நோய்கள் வந்து அதற்காகச் சாப்பிட்ட மருந்துகள், குத்திக் கொண்ட ஊசி மருந்துகள். இவற்றினாலும் பாதிக்கப்படலாம். ஒழுக்கம் மீறிய நடவடிக்கைகளினாலும் ஏற்படலாம். சிறு நீரைக் கொண்டு சோதித்தால் எந்தவிதக் கோளாறு என்று கண்டு பிடித்துவிடலாம்.

நீர் சம்பந்தமான வியாதி என்றால் டயாபெடீஸ் என்று நினைத்துக் கொள்வர். அதில் பலவிதங்கள் இருக்கின்றன. ஒன்று டயாபெடீஸ். அதைப்பற்றி முன் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. மற்றொன்று ஆல்பூமின் என்னும் பயங்கர வியாதி.



“அப்பா! இவன் என்னைப் பார்த்து அழகு காட்டுகிறான் அப்பா!”



எந்த வயதினரும் சர்வாங்காசனம் செய்யலாம். படத்தில் சர்வாங்காசன நிலையிலிருக்கும் சிறுவனுக்குப் பதினொரு வயது.

ஆல்பூமின் அதிக கொழுப்புச் சத்து நிறைந்த ஆகாரம், மாவுப் பொருள் முதலியவற்றைச் சாப்பிட்டுக் கொண்டு, சரீர உழைப்பு இல்லாமல் இருப்பவர்களுக்கு ஏற்படுவது. இதற்கும் பல மருந்துகள் இருக்கின்றன. உப்பில்லாப் பத்தியம் இருக்க வேண்டும். பால் சாதம், தயிர் சாதம் சாப்பிடலாம். இவ்வியாதி வந்தவருக்கு வேறு நரகம் வேண்டாம். தலைவலி, மயக்கம், ஆயாசம் முதலியவை உண்டாகும்.

சிறு குழந்தைகளுக்கு ஆல்பூமின் இருந்தால் வலிப்பு வரும். கர்ப்பம் கொண்ட பெண்கள் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். வாய்க்கு நன்றாய் இருக்கிறதென்று ஊறுகாய்கள் மற்றும் வேண்டாத ஆகாரங்களைச் சாப்பிடுவர். அவர்களுக்கும் ஆல்பூமின் வரும். சிகிச்சை செய்தால் மறைந்தாற்போல் இருக்கும். ஆனால் பிரசவ சமயத்தில் மறைந்திருந்து தாக்கும் எதிரியைப் போல, மீண்டும் தோன்றும். அப்படி இருந்தால் வலிப்பு நிச்சயம் வரும். பிரசவத்தின்போது வந்தால் தாய், குழந்தை ஆகிய இரண்டு உயிர்களுக்குமே ஆபத்து. சில, ஆயுதக் கேஸிலும் முடியலாம். இதில் யார் உயிர் பிழைப்பர் என்று சொல்ல முடியாது. பிரசவமான பின்பும் வலிப்பு வரும். அப் பலவீனமான நிலையில் வலிப்பு வந்தால் தாங்கச் சக்தி வேண்டுமே!

நீர்க் கல்: சிறு நீர் போகவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்ட போது போகாமல் அடக்கி வைத்திருப்பது, கடின ஜலத்தை அருந்துவது, பிராஸ்டேட் என்னும் கோளம் வீங்கிச் சிறு நீர் வரத் தடைப்படுவது முதலிய காரணங்களால் நீரில் உள்ள உப்புக்கள் உறைந்து கற்களாக மாறுவதுண்டு. இவை சிறு மணல் போல் இருக்கும். நிறையச் சுத்த ஜலம் அருந்துவதாலும், சரியான தேகப் பயிற்சி செய்வதாலும் நீங்கி விடலாம். இல்லையானால் உள்ளேயே தங்கி நாளுக்கு நாள் பெரிதாகிச் சில சமயம் சிறு நீர் போகும் வழியில் வந்து அடைத்துக் கொள்ளும். அப்பொழுது வலி பொறுக்க முடியாது. பிராண சங்கடமாய் இருக்கும். ஆப்பரேஷன் செய்து அந்தக் கல்லை எடுப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

அயற்சிகள்: அக்யூட் நெப்ரைட்டிஸ், கிரானிக் நெப்ரைட்டிஸ் முதலியவைகளும் உண்டாகும். பெரியம்மை, தட்டம்மை, டைபாயிட் ஜுரம், மலேரியா ஜுரம், டிப்திரியா, டான்ஸில், அதிக காப்பி, டீ குடி, புகையிலை பழக்கங்கள், மதுபான வகைகள் முதலியவைகளினால் உண்டாகும். தேக மெலிவு, பலவீனம், சிறு மூச்சு, பார்வைக் குறைவு, இரத்தக் கொதிப்பு முதலியவைகள் ஏற்படும். இவை முற்றினால் க்ஷயம், புற்று நோய் போன்ற பயங்கர நோய்களும் மூத்திரக்காய்களில் வரும்.

நல்லவேளையாக நமக்கு இரண்டு மூத்திரக் காய்களை இயற்கை அளித்திருக்கிறது. ஏதாவது கெடுதல் ஏற்பட்டால் முதலில் ஒன்றிற்குத்தான் ஏற்படும். அந்தச் சமயம் இதன் வேலையையும் சேர்த்து மற்றது செய்யும். பிறகுதான் மற்றதுக்கும் தொற்றும். ஆகையால் ஒரு மூத்திரக்காய் கெட்டு விட்டால் அதை ஆப்பரேஷன் பண்ணி எடுத்து விடுவதும் உண்டு. இரண்டும் கெட்டால் அவ்வளவுதான்.

இவைகளுக்கெல்லாம் நாம் இரையாகாமல் இருக்க வேண்டுமானால், சர்வாங்காசனப் பயிற்சியே சிறந்த மார்க்கம்.

தனுராசனம் செய்தால் 'டயாபடீஸ்' என்னும் வியாதி போகும் என்று முன்பு சொல்லி, இன்னும் சில ஆசனமும் செய்ய வேண்டுமென்று சொல்லி யிருக்கிற தல்லவா! அந்த ஆசனம், இந்தச் சர்வாங்காசனமே.

இந்த ஆசனத்தின் மூலம் தைராய்ட் வளம் பெறுகிறது. பாங்கிரியாஸ், குண்டிக்காய், கல்லீரல் முதலியவை இதன் ஆளுகைக்கு உட்பட்டது. நீர் சம்பந்தமான எந்த வியாதிகள் இருந்தாலும் சர்வாங்காசனம் ஒன்றைப் பழகுவதினாலேயே குணமாகிவிடும். (தொடரும்)



பிராயச்சித்தம்

ஸ்ரீரங்கராஜன்

தக்ஷிணாமூர்த்திக் குருக்கள் இரவு அர்த்த ஜாம பூஜையை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்படும்போது மணி பதினொன்று ஆகிவிட்டது. அன்று ஆடி வெள்ளிக்கிழமை. வழக்கமாக வந்த பக்தகோடிகளும், சிவநேசச் செல்வர்களும் பகவானுக்கும் குருக்களுக்குமாகச் சமர்ப்பித்த காணிக்கைப் பொருள்கள் தட்டிலும் கூடையிலும் நிரம்பின. அவற்றில் தமக்கு உரியனவாக உள்ளவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கட்டினார் குருக்கள்.

"தாயே! ஜகதம்பிகே! இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த ஏழையை நீ வருத்தப் போகிறாய்? பகலெல்லாம் இரவெல்லாம் உனது பாத பங்கயங்களுக்குத் தொண்டுசெய்வதைத்தவிர வேறொன்றும் அறியாத என்னை நீ வருத்தலாமா? எனக்கு விடிவு காலம் என்பது ஒன்று ஏற்படுமா? உன் திருவுள்ளத்தில் அருள் வற்றிவிட்டதா? நான் அவ்வளவு பாபியா?" என்று சொல்லிக் குங்குமத்தை நெற்றியில் இட்டுக்கொண்டே கதவைப் பூட்டினார். கோவிலிலிருந்து அவர் வீடு கூப்பிடு தூரந்தானிருக்கும். தட்டுத் தடுமாறிக் கொண்டே வீட்டை அடைந்தார்.

வாசல் திண்ணையில், இவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு ஒருவர் உட்கார்ந்திருந்தார். இருட்டில் இன்னார் என்பது புலப்படவில்லை.

"யார்?" என்று கேட்டபடி, கதவைத் தட்டினார் குருக்கள்.

"நான் அயலூர். சுவாமி தரிசனத்துக்காக வந்தேன். நீங்கள் உள்ளே போய் விட்டு வாருங்கள். இங்கேயே யிருக்கிறேன்" என்றார் திண்ணையிலிருந்த ஆசாமி.

கதவு திறந்தது. கால் நாழிகையில் கையில் விளக்கு ஒன்றை ஏந்திய வண்ணம், குருக்கள் வெளியே வந்தார். அவரைக் கண்டவுடன் மரியாதைக்காக எழுந்து நின்றார் வந்தவர்.



"பரவாயில்லை; நீங்கள் உட்காருங்கள்" என்று சொல்லிக் கொண்டே, குருக்கள் ஒட்டுத் திண்ணையில் எதிரே உட்கார்ந்து கொண்டார். அவர் கண்கள் வந்தவரை ஊடுருவிப் பார்த்தன. செட்டி நாட்டுத் தனவணிகர் போல இருந்தது அவர் தோற்றம். கழுத்திலும் கைவிரலிலும் நகைகள் மின்னின.

"நான் தேவகோட்டைப் பக்கம்; சுவாமி தரிசனத்துக்காகப் புறப்பட்டு வந்தவன். இந்த ஊரையும் பார்த்துப் போகலாம் என்று வந்தேன். அகாலமாகி விட்டபடியால், கோவிலுக்கு வர முடியவில்லை. காலையில் சுவாமி தரிசனம் செய்து கொண்டு புறப்பட வேண்டும்" என்றார்.

"சரி, அப்படியே செய்து கொள்ளலாம். தங்களுக்குப் போஜனம் ஆகிவிட்டதோ? இல்லையேல் எங்கள் வீட்டிலேயே சாப்பிடலாம்" என்றார் குருக்கள்.

"தாங்கள் பரமசிவன் மாதிரி இருக்கிறீர்கள். நானே சொல்வதாக இருந்தேன். நான் கோவிலுக்கு வராத காரணமும் அதுதான். பசியின் பிணியோடு சுவாமி தரிசனம் செய்ய மனமில்லை. தாங்கள் ஒரு கவளம் அன்னம் அளித்தால் மிகவும் உபகாரமாக இருக்கும்."

அவரைக் கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் ஒரு ஓரமாக இருக்கச் சொல்லி, அங்கே நின்று கொண்டிருந்த பார்வதி என்ற பெண்ணை அவருக்குப் பரிமாறச் சொன்னார். பசியின் வேகத்தில் அந்தக் குருக்கள் வீட்டு உணவு தேவாமிருதமாக இருந்தது செட்டியாருக்கு.

கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டார். இருவரும் வாசற்பக்கம்போனார்கள்.

"நீங்கள் திண்ணையில் படுக்கிறீர்களா? நான் திண்ணையில்தான் படுப்பது வழக்கம். காற்று நன்றாக வரும். திருடர் பயம் இல்லை" என்று சொல்லிக் கொண்டே ஒரு பாயும் தலையணையும் அவருக்குக் கொடுத்தார், குருக்கள்.

சிறிது நேரம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"எனக்குப் பரிமாறின குழந்தை, தங்கள் மூத்த குழந்தையா?" என்று கேட்டார் செட்டியார்.

"எனக்குப் பகவான் புத்திர பாக்கியத்தை அளிக்கவில்லை. இது என் தங்கை மகள். தங்கையும், தங்கை கணவரும் இறந்து விட்டார்கள். நான்தான் இந்தக் குழந்தைக்குத் தாயும் தகப்பனுமாக இருக்கிறேன்."

"குழந்தைக்குக் கல்யாணம் ஆகவேண்டும் போலிருக்கிறது."

"விவாகமாகி மூன்று வருஷங்களாகின்றன. எங்கள் ஜாதியில் மிகச் சிறு வயதில் குழந்தைகளுக்கு விவாகமாகி விடும். ஆனால் கல்யாணமாகியும் இந்தக் குழந்தை தன் புருஷன் வீட்டுக்குப் போக முடியவில்லை" என்றார் குருக்கள்.

"ஏன்?" என்று இடைமறித்துக் கேட்டார் செட்டியார்.

"சொன்னால் நீங்கள் வருத்தப்படுவீர்கள். அது ஒரு பெரிய கதை."

"ஒருவர் வீட்டு விஷயத்தை மற்றவர் அறிந்து கொள்ள முயல்வது பெரும் பிழை. சொல்லக் கூடுமானால் சொல்லுங்கள். ஏதாவது பணத்தகராறோ?"

"அப்படி ஒன்றும் இல்லை. எல்லாருக்கும் நடப்பது போல், இந்தக் குழந்தைக்கும் உரியகாலத்தில் விவாகம் நடந்தது. போன வருஷம் வரையில் புருஷன் வீட்டிலிருந்தாள். திடீரென்று ஒரு நாள் புருஷன் இவளைக் கொண்டு வந்து என்னிடம் தள்ளிவிட்டு, 'என்னை ஏமாற்றி, ஜெயிலுக்குப் போனவன் பெண்ணை என் தலையில் கட்டிவிட்டாயே! ஊர் சிரிக்கிறதே! இந்தப் பெண் உங்களோடு இருக்கட்டும். நான் வேறு விவாகம் செய்து கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். ஐந்தாறு தடவை கடிதம் மூலமாகவும், நேரிலும் போய் 'தகப்பன் செய்த குற்றத்துக்குப் பெண் என்ன செய்யும்? பெரிய மனது பண்ணி குழந்தையை அங்கீகரிக்க வேண்டும்' என்று பிரார்த்தித்தேன். ஒன்றும் பயன்படவில்லை. பிறகு ஊரார் மத்யஸ்தம் செய்தார்கள். அதன்படி நான் அந்தப் பிள்ளையாண்டானுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் குழந்தையை அவன் அழைத்துக் கொள்ளுவது என்ற முடிவாயிற்று.

"செட்டியார்வாள்! இரண்டாயிரத்துக்கும் மூவாயிரத்துக்கும் நான் எங்கே போவேன்? எவ்வளவோ முறையிட்டு அவனுக்கு எழுதினேன். பிடிவாதமாக இருக்கிறான். சரி, சுவாமி விட்ட வழி விடட்டும் என்று மனதைத் தேற்றிக் கொண்டு சும்மா இருந்து விட்டேன். 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு விவாகம் நடத்தலாம்' என்று சொல்லுவார்கள். நான் ஒரு பொய்கூடச் சொல்லவில்லை. இந்தப் பெண்ணின் தகப்பன் விஷயம் தெரிந்தே, அதைப் பொருட்படுத்தாமல் விவாகம் செய்து கொண்டான் என்று நம்பியிருந்தேன். நம்பின என்னைக் கடவுள் மோசம் செய்து விட்டார்."

"தகப்பனார் எதற்காக ஜெயிலுக்குப் போனார்?" என்று செட்டியார் கேட்டார்.

"யாரோ ஒரு பிரபு அளித்து சுவாமிக்குச் சாத்தியிருந்த தங்கச் சங்கிலி ஒன்றை, இந்தக் குழந்தையின் தகப்பன் எடுத்துக் கொண்டு, அதே மாதிரி வேறொன்றை மாற்றி வைத்து விட்டானாம். உண்மை வெளியாயிற்று. பிழைக்கிற பிழைப்புப்போய், சிறைவாசமும் ஏற்பட்டு அகால மரணத்துக்கும் ஆளானான். அவன் செய்த பாவம் எங்கள் தலையில் விடிந்தது."



"இதே கோவிலில்தான் அவரும் வேலை பார்த்தாரோ?" என்று கேட்டார்.

"இல்லை; சோழிக்குச் சமீபத்தில் சட்டைநாதபுரம் என்ற சிற்றூர் இருக்கிறது. நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். அந்த ஊரில் இருபது வருஷமாக வேலை பார்த்தான். நாணயமும் கௌரவமுமாகத்தான் இருந்தான். என்னமோ போதாத வேளை, திருடி விட்டான்."

"ஆமாம்; தங்கச் சங்கிலிக்குப் பதிலாக வேறொன்றை மாற்றியது குருக்கள் ஐயா என்பது நிச்சயமாயிற்றா? அந்த வேலையைச் சுவாமி தரிசனத்துக்கு வந்த 'பிரபு'வே ஏன் செய்திருக்கக் கூடாது?"

"நீங்கள் கேட்பது வேடிக்கையாக இருக்கிறதே? குழந்தைக்கு முடி இறக்குவதற்கு வந்தவர் பெரிய பிரபுவாம். அவரே தம் குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றித் தட்டில் போட்டாராம். இவையெல்லாம் விசாரணையின்போது ருசுவாயிற்று."

"நல்ல விசாரணை! நல்ல தீர்ப்பு!"

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

செட்டியார் பேசவில்லை. நித்திரையில் ஆழ்ந்து போனார்.

★

விடியற்காலம் நாலு மணி இருக்கும். தக்ஷிணாமூர்த்திக் குருக்கள் படுக்கையைச் சுருட்டிக்கொண்டே, திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் படுத்திருந்த செட்டியாரைக் காணவில்லை.

இவ்வளவு சீக்கிரம் எங்கே போயிருப்பார் என்ற நினைவுடன் உள்ளே போனார். வழக்கம்போல் ஸ்நானம் செய்து, அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வெளியே வந்தார். அதற்குள் பலபலவென்று விடிந்து விட்டது. செட்டியார் வருகைக்காகச் சிறிது நேரம் காத்திருந்துவிட்டு, கோவிலுக்குப் போனார். மணி எட்டாகியும் செட்டியார் வரவில்லை.

"வெறும் பஞ்சைப் பயல். காலணாவுக்கும் புண்ணியம் இல்லை. ஒருவேளைச் சோற்றுக்காக என்னவெல்லாம் புளுகினான். இவன்களுக்கெல்லாம் சாமி தரிசனம் ஒரு கேடா!" என்று செட்டியாரை மனதில் வைதார் குருக்கள்.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு ஒரு நாள், அவருக்கு ஒரு கடிதமும், ஒரு ரிஜிஸ்தர் கவரும் வந்தன. உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். பழக்கமில்லாத ஒருவருடைய கையெழுத்தாக அது இருந்தது.

"ஐயா அவர்களுக்கு:

"தங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் நான் புறப்பட்டு விட்டதில் தங்களுக்கு வியப்பாகவும் வருத்தமாகவும் இருக்கும். சட்டைநாதபுரத்தில் தங்கள் மைத்துனருக்கு ஏற்பட்ட பெரும்பழிக்குக் காரணம் நான்தான் என்றால் ஆச்சரியப் படுவீர்கள்.

"சுவாமி தரிசனத்துக்கு நானும் என் குடும்பமும் அந்த ஊருக்குப் போனோம். முன்பு ஒரு சமயம் அடைந்த அநுபவத்தால், கோவிலுக்குப் போகும் சமயங்களில் குழந்தையின் கழுத்தில் விலையுயர்ந்த நகைகளைப் போட என் மனைவி விரும்பவில்லை. அதற்காகக் குழந்தையின் கழுத்தை மூளியாக்கவும் விரும்பாமல் ஏதோ ஒரு இமிடேஷன் நகையைத் தயாரித்துப் போட்டிருக்கிறாள். அந்த விவரம் எனக்கு அப்போது தெரியாது. அன்று வழக்கத்தைவிடக் கூட்டம் அதிகமாகத்தானிருந்தது. எல்லாரையும் விட நான் பொருளும் புகழும் படைத்தவன் என்பதைக் காட்டிக்கொள்ள விரும்பினேன். தீபாராதனை முடிந்து, பிரசாதங்களைப் பெற்றுக்கொண்ட நான், சரேலென்று என் குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றி, தட்டில் போட்டு விட்டேன். எல்லாருடைய கண்களும் என்னை நோக்கின. என் பெருந்தன்மையையும், எனக்குக் கடவுளிடத்திலிருந்த பக்தியையும் அவர்கள் வியந்திருப்பார்கள். கோயிலை விட்டு நாங்கள் வெளியே வந்தபோது பலர் என்னைப் பாராட்டினார்கள்.

"ஆனால் என் மனைவிக்கு மட்டும் என் செய்கை, கொஞ்சமேனும் பிடிக்கவில்லை என்று அவள் முகக் குறிப்பினால் தெரிந்து கொண்டேன். பிறகு விசாரித்ததில் சுவாமிக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்த நகை தங்கம் அல்லவென்றும் வெறும் இமிடேஷன் என்பதும் தெரிந்தது. தெரிந்து என்ன செய்ய? கடவுளை ஏமாற்றிய பாவத்துக்கு ஆளானேன்.

"அன்று, தங்கள் வாய்மூலமாக, அந்தக் குருக்களுக்கு நேரிட்ட துன்பத்தை அறிந்ததுமுதல் என் உள்ளம் வேகிறது. நான் செய்த புல்செயலுக்குப் பிராயச்சித்தமாக தங்கள் விலாசத்துக்கு இன்று இரண்டாயிரம் ரூபாய் அனுப்பியிருக்கிறேன். குழந்தையை அதன் பருவனிடத்தில் சேர்ப்பிக்க இந்த அற்பத் தொகை உதவுமாயின், கடவுள் என்னைப் பூரணமாக மன்னிக்காவிட்டாலும், ஒரு சிறிதளவாவது மன்னித்துவிட்டார் என்பதை நிச்சயமாக நம்புவேன்."

நடுங்கும் கைகளுடன் மற்றொரு கவரைப் பிரித்தார். அதில் நூறு ரூபாய் நோட்டுக்களாக இருபது நோட்டுக்கள் இருந்தன.

"அம்பிகே! என்னை நீ கைவிடவில்லை அம்மா!" என்ற வார்த்தைகள் அவர் வாயினின்றும் வெளிவந்தன.





ராமு, சீனு, பட்டு இவர்களை உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் பனையூர் கிராமத்திலுள்ளவர்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்களைக் கேட்டால் என்ன சொல்லுவார்கள், தெரியுமா? 'அப்பா! அந்த மூவரையும் போன்ற விஷமக் கொடுக்குகள் இந்த உலகத்திலேயே கிடையாது' என்று கூறுவார்கள். அவர்கள் மூவரும் காலையில் எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை விடாமல் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள். அவர்களுடைய அம்மாவுக்கு அவர்கள் சண்டையைத் தீர்த்து வைக்கத்தான் பொழுது சரியாயிருக்கும்.

ஒரு நாள் அவர்களுடைய வீட்டில் 'தட தட'வென்று யாரோ கதவைத் தட்டினார்கள். அதைக் கண்டு மூன்று பேரும் ஆவலுடன் யார் வந்திருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக விரைந்தோடிக் கதவைத் திறந்தனர். கதவைத் திறந்ததும் வாசலில் தபால்காரன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் அந்த வீட்டுக்குக் கொடுக்க வேண்டிய கடிதம் இருந்தது. அந்தத் தபாலை அவனிடமிருந்து யார் வாங்குவது என்பதில் மூவருக்கும் சண்டை வந்து விட்டது.

ராமு தன்னிடந்தான் தபாலைக் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். சீனுவோ தன்னிடம் கொடுத்தால்தான் ஆயிற்று என்று அடம் பிடித்தான். ஆனால் பட்டு என்ன செய்தாள் தெரியுமா? 'ஹோ'வென்று அழுது தன்னிடம் கடிதத்தைக் கொடுத்தால்தான் ஆயிற்று என்று முரண்டு பிடித்தாள். அவ்வளவுதான்; தபால்காரன் பாடு திண்டாட்டமாய்ப் போய் விட்டது. யாரிடம் கடிதத்தைக் கொடுப்பது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தான். நல்ல

வேளையாக அவர்களுடைய அம்மா வாசலில் ஏதோ ரகளை நடப்பதை யறிந்து வாசலுக்கு ஓடோடி வந்தாள். அவள் வந்ததும் தபால்காரன் அவளிடம் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனான்.

ராமுவின் அம்மா கடிதத்தைப் பிரிப்பதற்குள் மூலைக்கு ஒருவராக, "அம்மா! கடிதத்தை என்னிடம் கொடு, அம்மா! நான் படிக்கிறேன்" என்று கேட்டுத் தொந்தரவு செய்தார்கள்.

"உங்கள் அத்தையிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. லீவுக்கு உங்களைக் கிராமத்துக்கு அனுப்பும்படி கேட்டு எழுதியிருக்கிறாள்" என்றாள் ராமுவின் தாயார்.

"அப்படியா, அம்மா! நான் மாத்திரம் லீவுக்கு அத்தை வீட்டுக்குப் போய் வருகிறேன், அம்மா! இந்தச் சனியன்கள் ஒன்றும் வரவேண்டாம்" என்றான் ராமு.

"போடா! உன்னை யார் கேட்டது! நான் மாத்திரந்தான் போகப்போகிறேன்" என்று கூறினான் சீனு ஆத்திரத்துடன்.

"நீங்கள் இரண்டு பேரும் ஒன்றும் போக வேண்டாம். நான்தான் போகப் போகிறேனாக்கும்" என்றாள் பட்டு. இப்படி ஒருவருக் கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்ததும் ராமுவின் தாயார், "நீங்கள் இப்படிச் சண்டை போட்டால் உங்களில் யாரையும் லீவுக்கு அனுப்ப மாட்டேன்" என்று கோபத்துடன் சொன்னாள். பிறகு தான் அவர்களுடைய சண்டையும் வம்புப் பேச்சும் நின்றது.

அன்று பட்டு, சீனு, ராமு மூவரும் ரயிலில் தங்கள் அத்தையின் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். போகும் வழியெல்லாம் அவர்களுக்குள் சண்டை வந்து கொண்டேயிருந்தது. அவர்கள் அத்தை வீடு வரும் வரை அவர்கள் சண்டை ஓயவில்லை.

அத்தை வீட்டில் வந்தாவது அவர்கள் விஷமம் செய்வதை நிறுத்தினார்களா? அதுதான் இல்லை. அவர்கள் விஷமமும் சண்டையும் அதிகமாயிற்றே தவிரக் குறையவே யில்லை. ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதையும் அடித்துக் கொள்வதையும் பார்த்து அவளுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

அடுத்த நாள் அவர்களுடைய அத்தை மார்க்கெட்டுக்குப் புறப்பட்டாள். போகும் பொழுது அவர்களிடம் வந்து, "இந்தாருங்கள்! நீங்கள் மூன்று பேரும் விஷமம் செய்யாமல் இருந்தால் உங்களுக்குப் பழங்கள் வாங்கி வருவேன்" என்றாள். அதைக் கேட்டதும் அவர்கள் தலையை மட்டும் அசைத்தார்கள்.

அவர்களுடைய அத்தை, வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்று சிறிது நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் பட்டு, சீனு, ராமு ஆகிய மூன்று பேருக்கும் வாக்குவாதம் வளர்ந்தது.

"இந்தா, சீனு! என் தலைமயிரை இழுத்தாயோ, பார்த்துக் கொள்" என்று உறுமினாள் பட்டு.

"நீ என் பந்தை என்னிடம் கொடுத்தால் தான் உன் பின்னலைப் பிடித்திழுப்பதை விடுவேன்" என்றான் சீனு.

"நான் உன் பந்தைத் தரமாட்டேன். நீ பின்னலைப் பிடித்து இழுத்தாயோ உன் கையை நன்றாகக் கடித்து விடுவேன்" என்றாள் பட்டு.

"உனக்கு அவ்வளவு தைரியமா? உன் தலைப் பின்னலைப் பிடித்து இழுக்கிறேன். எங்கே, கடி பார்க்கலாம்" என்று கூறிச் சீனு அவள் தலைப் பின்னலைப் பிடித்துச் சுருக்கென்று இழுத்தான். பட்டு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிப் போய் மூலையிலிருந்த ஒரு தடியை எடுத்து வந்து சீனுவை அடிக்க ஓங்கினாள்.

"என்ன! இரண்டு பேரும் சண்டை போடுகிறீர்களா? பாருங்கள்! உங்களை என்ன செய்கிறேன், பார்!" என்று கூவி, ராமு இருவர் முதுகிலும் பொத்துப் பொத்தென்று நாலு அடி வைத்தான். அவ்வளவுதான்; இருவரும் ஹோவென்று அழுது கொண்டே ராமுவை அடிக்க முயற்சி செய்தார்கள்.

இச்சமயத்தில் யாரோ கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. மூவரும் விழுந்தடித்துக் கொண்டு வாசல் பக்கம் ஓடினார்கள். வாசலில் ஒரு அழகான பெண் நின்று கொண்டிருந்தாள். அந்தப் பெண் வேறு யாருமில்லை! அந்த வீட்டுக்குப் பக்கத்துத் தோட்டத்திலுள்ள தேவதை தான்.


அவளைப் பார்த்ததும், ராமு தைரியமாக "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"நான் உங்கள் வீட்டுக்குப் பக்கத்துத் தோட்டத்தில் வசிக்கும் தேவதை. நீங்கள் போடும் சத்தத்தினால் என்னால் தூங்க முடியவில்லை. இனிமேலாவது சத்தம் போடாமல், ஒருவருக்கொருவர் சண்டை போடாமல் இருப்பீர்களா?" என்று கேட்டது அந்தத் தேவதை.

அதைக் கேட்டதும் சீனு; "எங்கள் வீட்டில் சத்தம் போட்டால் உங்களுக்கு என்ன வந்தது? அப்படித்தான் சத்தம் போடுவோம்" என்று கூறினான்.

"சரி! நன்றாகச் சத்தம் போடுங்கள். சண்டை போட்டுக் கொள்ளுங்கள்......... அதிருக்கட்டும், உங்கள் ஒவ்வொருவருக்

நீங்களும் வரையலாம்!



மோட்டார் காரிலிருந்து ஒரு மனிதரின் முகம் வரவழைக்கலாம்!

கும் பலவிதமான ஆசைகள் உண்டல்லவா?" என்று கேட்டது அந்தத் தேவதை.

"ஆமாம்!" என்று மூவரும் சேர்ந்து தலை யசைத்தனர்.

"சரி! நீங்கள் ஒவ்வொருவரும் முதலில் என்ன ஆசைபபடுகிறீர்களோ அது நிறைவேறும்!" என்று கூறிவிட்டு அந்தத் தேவதை தோட்டத்துக்குள் மறைந்தது.

அந்தத் தேவதை மறைந்து சென்றதும் மூவரும் வீட்டுக்குள் சென்றனர். போய்க் கொண்டிருக்கும் போதே அவர்களுக்குள் மறுபடியும் சண்டை வலுத்தது.

"ஏ, பட்டு! நான் பிரியப்படுகிறதை நீ பிரியப்படக் கூடாது, தெரியுமா?" என்று கூறினான் சீனு.

"டேய், பனை மரம்! நான் பிரியப்பட்டால் உனக்கென்னடா வந்தது?" என்று சொன்னான் பட்டு. அவ்வளவுதான்; பட்டுவின் முதல் ஆசை நிறைவேறி விட்டது. சீனு பனைமரம் மாதிரி விகாரமாக உயர்ந்து விட்டான்.

ராமு சீனுவின் கோர உருவத்தைக் கண்டதும் சிரித்து விட்டான். அது சீனுவுக்கு மிகுந்த கோபத்தை யளித்து விட்டது. சீனு, "ஏண்டா, பீப்பாய்! என்னைக் கேலி செய்கிறாய்?" என்றான். ராமுவைச் சீனு பீப்பாய் என்றதும் அவன் பீப்பாயாகப் பருத்து விட்டான்.

ராமு தனது பருத்த தேகத்துடன் நடக்க முடியாமல் நடந்து வருவதைக் கண்டு பட்டு சிரித்து விட்டான். ராமுவும் சினந் தாங்க முடியாமல், "ஏ, கறுப்பி! உனக்கு என்னைப் பார்த்துச் சிரிக்கு மனவுக்குத் தைரியம் வந்து விட்டதா? உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்றான். ராமுவின் கோபத்தினால் பட்டுவின் தேகம் அண்டங் கறுப்பாக மாறி விட்டது.

மூவரும் தங்கள் கோர உருவத்தைக் கண்ணாடியில் பார்த்தபோதுதான் அவர்களுக்குத் தங்களுடைய தவறுகள் தெரிந்தன. மூவரும் வருத்தந் தாங்க முடியாமல் அழஆரம்பித்தனர்.

பிறகு ராமு இளையவர்களைத் தேற்றி, "வாருங்கள்! அந்தத் தேவதையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கலாம்" என்று கூறி அவர்களை அழைத்துச் சென்றான்.

அடர்ந்த மரங்களுக்கிடையிலிருந்து யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. ராமு அந்தக் குரல் கேட்ட திசையை நோக்கிச் சென்றான். தேவதை சிரித்துக் கொண்டே ஒரு மரத்தினருகில் நின்று கொண்டிருந்தது. தேவதையைக் கண்டதும் மூவரும் அதன் காலில் விழுந்து, "எங்களை மன்னித்து விடு. நாங்கள் இனிமேல் சத்தம் போட மாட்டோம். எங்களைப் பழைய உருவத்துக்கே மாற்றி விடு" என்று கண்ணீர் பெருக்கி வேண்டிக் கொண்டனர்.

தேவதையும் அவர்களுடைய அழுகைக்கு இரங்கி, "சரி! உங்கள் கொடிய உருவம் மறைந்து விடும். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் மூவரும் மறுபடியும் சண்டை போட்டுக் கொண்டீர்களானால், உங்கள் கோர உருவம் திரும்பி வந்துவிடும்" என்று கூறியது. ராமு சீனு, பட்டு மூவரும் அதற்குச் சம்மதிக்கவே, உடனே தன் மந்திரக் கோலால் அவர்கள் மூவரையும் தடவியது. கேட்க வேண்டுமா? தேவதையின் அருளினால் மூவரும் பழைய உருவத்தை யடைந்தனர். தங்கள் சுய ரூபத்தைக் கண்டதும் அவர்கள் அடைந்த ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. ராமு தன் நன்றியைத் தெரிவிப்பதற்காகத் திரும்பினான். அதற்குள் தேவதை அடர்ந்த செடிகளுக்குள் மறைந்து விட்டது.

ராமு, சீனு, பட்டு மூவரும் குதித்துக் கொண்டே வீடு சென்றனர். வீட்டில் போய் மூவரும் சந்தோஷமாக விளையாட ஆரம்பித்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ள வில்லை. மார்க்கெட்டுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்த அவர்களுடைய அத்தை மூவரும் சண்டை போடாம லிருப்பதைக் கண்டு மிகுந்த சந்தோஷ மடைந்தாள். அந்த ஆனந்தத்தில் அவர்களுக்கு நிறையப் பழங்களை வழங்கினாள்.

இப்பொழுதெல்லாம் ராமு, சீனு, பட்டு மூவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதில்லை. சண்டை போட்டுக் கொண்டால் எங்கே மறுபடியும் கோர உருவம் திரும்பி வந்துவிடுமோ என்கிற பயத்தினால்தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை யல்லவா?



அதிகாரம் செலுத்திய பெண்

மூலக்கதை : ஆங்கிலம் - டாக்டர் ஜி. எஸ். ராவ்

மொழிபெயர்ப்பு : 'வாஞ்சி'

"பெரிய வீட்டில் இனி அமர்க்களமாகத்தான் இருக்கும். இளைய நாட்டுப் பெண் நளினி வந்து விட்டாள். அவள் பணக்கார வீட்டுப் பெண். போதாக்குறைக்குப் பட்டணத்தில் வளர்ந்தவள். மேகத்தைக் கண்டு மயில் ஆடும் அல்லவா! அது போல நளினி சதா சர்வ காலமும் ஆடம்பரமான ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டு நர்த்தனம் செய்து கொண்டிருப்பாளாம்."

இவ்விதம் அந்தக் கிராம ஜனங்கள் வம்பு அளந்து கொண்டிருந்தார்கள். மேற்படி கிராமத்தில் உள்ள பெரிய வீட்டின் விவகாரங்களில் அவர்களுக்கு நீண்ட கால அனுபவம் உண்டு! பல வருஷங்களுக்கு முன் அந்த வீட்டுக்கு வந்த மூத்த நாட்டுப் பெண் ஸரோஜின் குணாதிசயங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரிந்தவைதானே.

ஸரோஜை அடக்கமான பெண் என்று யாரும் சொல்ல முடியாது. அவளே அந்த வீட்டை ஆட்சி புரியும் ராணியாக விளங்கினாள். அந்த ஸ்தானத்துக்கு எள்ளளவு பங்கம் ஏற்பட்டாலும் ஸரோஜ் சகிக்க மாட்டாள்; யுத்தத்துக்குப் புறப்பட்டு விடுவாள்.

இது வரையில் அந்த வீட்டிலே ஸரோஜின் இஷ்டப்படி எல்லாம் நடந்து வந்தது. அவளுடைய கணவன்தான் எல்லாப் பிள்ளைகளுக்கும் மூத்தவன். சமீபத்தில் உள்ள பட்டணத்தில் அவன் ஆரம்பித்த வக்கீல் தொழிலில் அபிவிருத்தியும் ஏற்பட்டு வந்தது.

எனவே இளைய சகோதரர்கள் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டியவர்கள்தானே! ஸரோஜின் கிழட்டு மாமியாரும் அவளுடைய பெண் சசியும் (ஸரோஜின் நாத்தி) ஒன்றும் தெரியாத பட்டிக்காட்டுப் பேர்வழிகள். எனவே அந்த வீட்டில் ஸரோஜ் சொல்வதே சட்டமாக இருந்தது.

இந்தச் சமயத்தில்தான் பெரிய பட்டணத்திலிருந்து பணக்கார வீட்டுப் பெண் நளினி வந்து சேர்ந்தாள். நளினியின் தேகத்தைப் பட்டுப் புடவைகளும் 'ஸாடின்' ரவிக்கைகளும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. பவுன் நகைகளோ சொல்லி முடியாது! ஸரோஜுக்கு மிகுந்த ஆத்திரத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு நகையும் நளினியிடம் இருந்தது. அது பகலிலும் இரவிலும் அவள் இருக்கும் இடத்தைப் பறை சாற்றிக் கொண்டிருந்தது. அதுதான் நளினி அணிந்திருந்த உயர்ந்த நிஜ வைரத் தோடு!

நளினியின் நகைகள் பல ரகங்களாக இருந்தது போல் அவளுடைய குணங்களும் இருந்தன. அவள் எந்தச் சமயத்தில் யார் மீது சீறுவாள்! எப்போது யாரை அவமதிப்பாள்! என்பதை யாராலும் சொல்ல முடியாது. எனவே, ஸரோஜின் கர்வத்தையும் அதிகாரத்தையும் நளினி கொடிப் பொழுதில் இருந்த விடம் தெரியாமல் செய்து விடுவாள்.

இவ்வாறாக, பெரிய வீட்டைக் கவிழ்ந்து கொண்டுவரும் போர் மேகங்கள் எப்போது இடி முழக்கம் செய்யப் போகின்றன என்பதைக் கிராம ஜனங்கள் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

* * *

பாக்கியத்தின் (ஸரோஜின் மாமியார்) முகத்தில் சந்தோஷமும் பரபரப்பும் தாண்டவமாடின. "நளினி வந்திருக்கிறாள். இதைச் செய், அதைச் செய்" என்று அவள் தன் பெண் சசிக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தாள். சசியைத் தவிர வேறு யாரிடத்திலும் அவளுடைய அதிகாரம் செல்லாதல்லவா!

"சசி, நளினி பணக்கார வீட்டுப்பெண் இல்லையா! அவள் மனம் கோணாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு" என்று அடிக்கடி சொன்னாள் பாக்கியம்.

இதன் மத்தியில் பாக்கியம் எதிர் வீட்டில் இருக்கும் செவிட்டுக் கங்கம்மாப் பாட்டியிடம் சென்று உரத்த குரலில் இரகசியமாக விஷயத்தைத் தெரிவித்தாள்.

"என் இளைய நாட்டுப் பெண் வந்திருக்கிறாள். இந்தப் பட்டணத்து ஜனங்கள் கர்வம் பிடித்தவர்கள் என்றும், அவர்கள் நம் ஏழைக் கிராமத்தில் ஒரு நாள் கூடத் தங்கமாட்டார்கள் என்றும் என் கணவர் சாகும் தறுவாயில் கூடச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் நளினி வந்து முழுசாக ஒருநாள் ஆகிவிட்டது! இது எங்கள் வீட்டுக்குப் பெருமை அல்லவா! அவர் பல மாதங்கள் படுக்கையாக இருந்தபோதும், பிறகு இறந்தபோதும் நளினி வீட்டார் இங்கு வரவேயில்லை. அவர்கள் வராமல் இருந்தது பெரும் வெட்கக்கேடு. இந்தப் பட்டணத்து ஜனங்களுக்குக் கொஞ்சம்கூட ஒழியாது போலிருக்கிறது......ஆனால்

ஊரார், உற்றார் உறவினரின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் இடம் வைக்காமல் அவருடைய முதல் வருஷச் சிராத்தத்துக்காவது நளினி வந்து சேர்ந்தாளே! அதுவரையில் சந்தோஷந் தான்'' என்றாள் பாக்கியம்.

நளினிக்கு வேண்டியதைச் செய்துகொண்டு சசி வீட்டில் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தாள். அதே சமயம் அவள், தான் ஸரோஜின் கோபத்துக்கு ஆளாகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

ஸரோஜின் மனம் கோணும்படி சசி நடந்து கொண்டால் அவள் ஸரோஜின் சீற்றத்துக்கு மாத்திரம் அல்ல, அவளுடைய கணவனும் தன் அண்ணனுமான வக்கீல் கோபியின் கோபாவேசத்துக்கும் ஆளாக வேண்டியிருக்கும் அல்லவா!

• • •

கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த பாயில் நளினி உட்கார்ந்து கொண்டிருந்தாள். பசுவின் சாணத்தால் அந்த வீடு மெழுகப்பட்டிருந்தது. இது பட்டணத்துப் பெண்ணான நளினிக்குப் பிடிக்கவேயில்லை. தரையைச் சாணத்தினால் மெழுகும் கர்நாடக வழக்கம் அவளுக்கு வெறுப்பைக் கொடுத்தது. ஏதோ துர்நாற்றத்தைச் சகிக்க முடியாமல் சகித்துக் கொண்டிருப்பவள் போல் மூக்கை அடிக்கடி 'சிணுங்கி'க் கொண்டிருந்தாள்.

மற்றொரு புறத்தில் அவளுடைய மைத்துனர்களான சங்கரும் ராமேசமும் பள்ளிக்கூடம் போகாததால் ஏற்பட்ட குதூகலம் காரணமாகக் குஸ்தி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

கூடத்தின் மத்தியில் வக்கீல் கோபி தலையணைமீது சாய்ந்து கொண்டு, தான்தான் வீட்டுக்கு எஜமானன் என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தான். அவனது மனைவி ஸரோஜ் அவன் பக்கத்தில் நின்று கொண்டு ஓய்ச்சல் ஒழிவில்லாமல் என்னவோ புகார் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"சிலருக்கு எவ்வளவு வயதானாலும் யார் யாரிடம் எப்படி நடந்து கொள்வது என்பதே தெரியவில்லை'' என்றாள் ஸரோஜ்.

"எப்படியாவது தொலைந்து போகட்டும். உனக்கு என்ன அதைப் பற்றி! இந்த வீட்டுக்கு நீதான் மூத்த நாட்டுப் பெண். ஆகையால் உன் ஸ்தானத்தை யாரும் அபகரித்துக் கொண்டு விடமுடியாது. கல்யாணம் ஆனபின் இப்போது தான் முதல் தடவையாக நளினி இந்த வீட்டுக்கு வந்திருக்கிறாள். அவளைப் பற்றியே எல்லாரும் விசாரிக்கிறார்கள். அதற்காக நீ ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்!'' என்று கோபி அவளைச் சமாதானம் செய்ய முற்பட்டான்.

ஸரோஜ் தன்னுடைய கோபக் கண்களால் நளினியை ஒரு வெட்டு வெட்டி, கோபியிடம் மேற்கொண்டு சொல்ல ஆரம்பித்தாள்.

"நீங்கள் இந்தக் குடும்பத்தின் தலைவர் இல்லையா! இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த யாராவது வெட்கங் கெட்ட விதமாக நடந்து கொண்டால், அவர்களைச் சரியான வழிக்குக் கொண்டு வர வேண்டியது உங்கள் கடமை இல்லையா! இன்று உங்கள் தகப்பனாரின், உங்கள் சொந்தத் தகப்பனாரின் சிராத்த தினம். பட்டுப் புடவைகளையும் ஆபரணங்களையும் அணிந்து அலங்காரமாகக் குலுக்கிக் கொண்டும் மினுக்கிக் கொண்டும் இருப்பதற்கு இன்றுதான் நாளோ!''

ஸரோஜ் இவ்வாறு கூறிய பின் தன்னைத் தானே பார்த்துக் கொண்டாள். அவள் ஆடம்பரமின்றி சாதாரண நூல் புடவை உடுத்திக் கொண்டிருப்பதைத்தான் அவள் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டாள்.



"அட கடவுளே! நீ பேசாமல் இருக்க மாட்டாயா!'' என்று அலுத்துக் கொண்டான் கோபி.

இது வரையில் எல்லாவற்றையும் பேசாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த நளினி தன் விசுவரூபத்தைக் காட்ட ஆரம்பித்தாள்.

"ஸரோஜ் அக்கா! உங்களுக்கு வேண்டும்போலிருந்தால் என் நகைகளிலும் புடவைகளிலும் சிலவற்றை உங்களுக்குத் தருகிறேனே! உங்களுக்கு என்ன வேண்டும்!'' என்று நளினி உள்ளூறக் குமுறும் கோபத்தை இனிமையான குரலில் வெளியிட்டாள்.

அவ்வளவுதான்! ஸரோஜுக்கு ஆத்திரம் பொங்கியது. "கேட்டீர்களா அவள் சொல்லுவதை! இந்த வீட்டில் நான் யார்! துரும்புக்கும்

கெடு கெட்டவளாகி விட்டேன்" என்று புலம்பினாள் ஸரோஜா.

கோபி தன் தம்பியின் மனைவி நளினிக்குப் புத்தி கூறினான்: "ஸரோஜா உனக்கு மூத்த சகோதரி போல் அல்லவா! அவளிடம் இப்படிப் பேசலாமா? சொந்த தினத்தில் நீ கல்யாணப் பெண் போல் காட்சியளிப்பதை அவள் கண்டித்தது நியாயம்தானே!"

"ஓஹோ! அப்படியா! இன்று காலையில் ஸரோஜா மாத்திரம் பட்டுப் புடவையும் நகைகளும் அணிந்து கொள்ளவில்லையா! எல்லோரும் என் புடவையும் நகைகளும் நன்றாக இருக்கின்றன என்று சொன்னதால் அவளுக்குப் பொறாமை உண்டாகிவிட்டது. உடனே அவற்றை யெல்லாம் களைந்து விட்டு, விபூதியும் ருத்திராக்ஷமும் தரித்த சாமியார் போலக் காட்சியளிக்கிறாள்" என்றாள் நளினி.

"எனக்கு வேண்டிய நகைகள் இருக்கின்றன. ஊர் திரியும் காவாலிகளின் நகைகளை வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை" என்று சீறினாள் ஸரோஜா.

"போதும்! நிறுத்த மாட்டாயா!" என்று உரக்கக் கத்தினான் கோபி.

நளினி:—இவளுக்கு என்ன பொறாமை! என்ன பொறாமை!

கோபி:— போதும்! நீயும் நிறுத்த மாட்டாயா!

ஸரோஜாவுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.

"இவளுடைய தகப்பனார் வீட்டிலிருந்து இவளை உதைத்துத் துரத்தி விட்டார்கள். இது உண்மையா இல்லையா என்று இவளையே கேளுங்களேன்! இவளும் உங்கள் தம்பி நானூறும் ஐந்நூறு மைல் தூரம் மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்து வந்திருக்கிறார்கள். மூன்றாவது வகுப்பு வண்டி! இந்த லட்சணத்தில் பட்டுப் புடவைகள், நகைகள்வேறு!"

மூன்றாவது வகுப்பு வண்டி என்றதும் சவுக்கால் அடிப்பது போல் இருந்தது கோபிக்கு. "என்ன மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்தார்களா! ஏன்! எதற்காக!" என்று பரபரப்புடன் கேட்டான் அவன்.

"இவர்களிடம் செலவுக்குப் பணம் இல்லை. அதனால் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்தார்கள். பணத்துக்காக உங்கள் தம்பி தெருவில் பிச்சை எடுக்க நேர்ந்தாலும்! ஊர் திரியும் காவாலிகள்! பிச்சைக்காரர்கள்!"

"நீ ஏழு தலைமுறைகளில் கண்ணால் கூடப் பார்த்திருக்க முடியாது, அவ்வளவு பணம் என் அப்பாவிடம் இருக்கிறது. ஆகையால் உன்னைப்



போல் நான் விபூதியும் ருத்திராட்சமும் அணிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை" என்றாள் நளினி.

"போதும், போதும்! உங்கள் சண்டையை நிறுத்துங்கள்" என்று கோபி கத்தியதில் வீடு முழுதும் அதிர்ந்தது. சிறுவர்களான சங்கரும் ராமேசும் வழக்கமாகக் கிடைக்கின்ற ஏற்படும் கொந்தளிப்பைத் தெரிந்து கொண்டு தங்கள் குஸ்திச் சண்டையை நிறுத்தினர்.

"ஸரோஜா சொல்வது உண்மையா!" என்று கோபி நளினியைப் பார்த்துக் கேட்டான்.

"ஆமாம். நான் இங்கு புறப்பட்டு வரக் கூடாது என்று என் அப்பா தடுத்தார். எனக்கும் இங்கு வருவதற்கு இஷ்டமில்லை. ஆனால், இதைக் கேட்டதும் உங்கள் தம்பிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. எல்லோர் முன்னிலையிலும் உங்கள் தம்பி என் அப்பாவை, நேருக்கு நேராக வாயில் வந்தபடி திட்டிவிட்டார்."

"சரி, பிறகு......"

"பிறகு என்ன! என் அப்பா பெரிய மனிதர் இல்லையா! அதுவும் அந்தப் பட்டணத்தில் மாஜிஸ்திரேட்! இதுவரையில் என் அப்பாவை உங்கள் தம்பியைப் போல் யாரும் இவ்வளவு துணிந்து திட்டியதே இல்லை. அவ்விதம் திட்டியதால் அப்பாவுக்கு வெறி பிடித்தது போல் ஆகிவிட்டது. அவர் எங்கள் இருவரையும் வெளியே துரத்தி விட்டார். 'இனி இந்த வீட்டு வழி வராதீர்கள்' என்றும் ஆத்திரத்துடன் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். இதெல்லாம் உங்கள் தம்பியால் வந்த வினைதான். உங்கள் தம்பியிடம் பணம் இல்லை. நாங்கள் என்ன செய்வது! வெட்கமின்றி மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தோம். மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்தது போதாதென்று இந்த வெட்கக்கேட்டை உங்கள் தம்பி இங்கு எல்லோரிடத்திலும் தம்பட்டம் அடித்து விட்டார். உருப்படாத இந்தப் பட்டிக்காட்டு ஜனங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கவேண்டும் அல்லவா!"

நளினி கூறிய இந்த வரலாறைக் கேட்டதும் கோபி உச்ச ஸ்தாயியில் கத்த ஆரம்பித்து விட்டான்.

"என் தம்பிக்குத்தான் அறிவு, மூளை ஒன்றும் இல்லை. உனக்குப் புத்தி எங்கே போயிற்று! இப்போது அவன் உன் அப்பாவிடம் சண்டை போட்டு அவரை விரோதித்துக் கொண்டு விட்டானே. இனி அவனுடைய படிப்புக்கு யார் பணம் அழித்துக் கொடுப்பார்கள் என்று நினைத்துக் கொண்

டிருக்கிறாய்! இன்னும் இரண்டு வருஷம் படித்துத் தொலைய வேண்டுமே! ஒரு வருஷத்துக்கு ஆயிரம் ரூபாய் செலவாகுமே! இந்தப் படிப்பை முடித்து ஏதாவது உத்தியோகத்துக்கு வழி செய்யாவிட்டால் நீங்கள் எதைக் கொண்டு ஜீவனம் செய்வீர்கள்! நிலத்தை உழுது ஜீவனம் செய்ய வேண்டியதுதான். இந்த லட்சணத்தில் குறத்தி மாதிரி நகைகளால் வேஷம் போட்டுக் கொண்டு குதிக்கிறாய்!"

இந்தச் சமயம் பார்த்து ஸரோஜ் தூபம் போட்டாள்.

"இந்த லட்சணத்தில் இவர்களுக்குத் திரும்பிப் பட்டணத்துக்குச் செல்லக்கூடப் பணம் இல்லை. இங்கு இவர்கள் மகாராஜாக்கள் மாதிரி ஒரு வேலையும் இல்லாமல் சாப்பிட்டுக் கொண்டும், தூங்கிக் கொண்டும், குழந்தைகளைப் பெற்றுக் கொண்டும், ஆயுள் வரையில் நம் செலவிலே வாழலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்."

நளினி ஸரோஜாவுக்குச் சளைத்தவளா!

"இந்தப் பாழும் வீட்டில் நான் ஒருநாளும் வாழமாட்டேன். இங்கு என்ன இருக்கிறது! ரேடியோ இருக்கிறதா! மின்சார விளக்கு இருக்கிறதா! மோட்டார் இருக்கிறதா! மாலையில் உலாவப் போவதற்கு இடம் இருக்கிறதா! பேசுவதற்கு நல்ல மனிதர்கள்தான் இருக்கிறார்களா! ஒன்றுமில்லை. மண்ணும் சாணமும் தான் இருக்கின்றன. இங்கு வாழ்வதைக் காட்டிலும் நான் தூக்கிட்டுக் கொள்வேன். நான் திரும்பிச் செல்வதற்கு என் அப்பா பணம் அனுப்புவார். இல்லாவிட்டால் என் நகைகளை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு திரும்பிப் போகிறேன்!"

இவ்விதம் சரமாரியாகப் பொழிந்துவிட்டு நளினி விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

இந்தக் கோலத்தைக் கண்ட கோபியின் தாயார் அவனைக் கடிந்து கொண்டாள்.

"கோபி, இது என்ன கூத்து! நளினி முதல் தடவையாக நம் வீட்டுக்கு வந்திருக்கிறாள். அதற்குள் அவளைக் கோபித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டாயே!"

"ஆமாம், ஆமாம்! உன் செல்லப்பிள்ளை நாணுவுக்காக நீயும் அழத் தொடங்கிவிடு. அவனுக்குத் தான் புத்தியில்லை என்றால் இந்தப் பெண்ணுக்குப் புத்தி எங்கே போயிற்று! இனி இவர்கள் கூலி வேலை செய்து பிழைக்க வேண்டியது தான். இப்பேர்ப்பட்டவர்களுக்கு அதுதான் கதி" என்று ஆத்திரத்துடன் தாயாருக்குப் பதிலளித்தான் கோபி.

* * *

'கங்கம்மாப் பாட்டி! கங்கம்மாப் பாட்டி!' என்று கத்திக்கொண்டே சங்கரும் ரமேசும் அந்தப் பாட்டியிடம் சென்று தங்கள் வீட்டில் நடந்ததைச் சொன்னார்கள். "நாணு அண்ணா கடைக்குப் போயிருக்கிறான். அவன் வந்ததும் வீட்டில் நடந்த சண்டையைக் கேள்விப் பட்டால்...அவ்வளவுதான்!" என்று கவலைப் பட்டார்கள்.

மேற்படி சண்டையைக் கேட்டு அந்தக் கிழவி வருந்தினாள். "உங்கள் மூத்த அண்ணா நடந்து கொண்டது புத்திசாலித்தன மல்ல. முன்பெல்லாம் தகப்பனார் இறந்து விட்டால், மூத்தபிள்ளைதான் தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து கொண்டு குடும்பத்தை நிர்வாகம் செய்வான்; எல்லாரையும் அன்புடன் பராமரிப்பான். ஆனால், கோபிக்கோ அவன் வேட்டகத்து ஜனங்களைத் தவிர வேறு யாரைக் கண்டாலும் பிடிப்பதில்லை" என்று கங்கம்மாப் பாட்டி தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

"இதற்கெல்லாம் காரணம் ஸரோஜ் மன்னி தான். அவள் எப்போதும் எங்கள் எல்லோரையும் திட்டிக் கொண்டே இருக்கிறாள். எங்கள் மீது கோபம் வரும்படி அண்ணாவைத் தூண்டி விடுகிறாள். ஆனால் நளினி இன்னும் எங்களைத் திட்ட ஆரம்பிக்கவில்லை; நாணு அண்ணாவை எங்களுக்கு விரோதமாகத் தூண்டி விடவும் இல்லை" என்றான் கடைக்குட்டி ரமேஷ்.

"இன்னும் சில நாட்கள் ஆகட்டும், அவளும் திட்ட ஆரம்பித்து விடுவாள். ஆனால் நாணுவிடம் யாரும் சில்லறை விளையாட்டெல்லாம் வைத்துக் கொள்ள முடியாது; அவனுக்குக் கோபம் வந்து விட்டால்...அவ்வளவுதான்!" என்றான் சங்கர்.

"கங்கம்மாப் பாட்டி, நீங்கள் வந்து சண்டையைத் தீர்த்து வையுங்கள். நாணு திரும்பி வந்தால் என்ன நடக்குமோ, கடவுளுக்குத் தான் தெரியும்! நளினி விம்மி விம்மி அழுது கொண்டு தலைவிரி கோலமாக இருக்கிறாள். இந்த பயங்கரக் காட்சியை நாணு வந்து பார்த்தால் என்ன செய்வது! அம்மா சண்டை போடாமல் இருக்கும்படி எல்லோரையும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். பூஜை அறைக்குச் சென்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாள். நீங்கள் வந்து ஏதாவது சமாதானம் சொல்லுங்கள்" என்று இரண்டு சிறுவர்களும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

"இது மாதிரி விஷயங்களில் யாராலும் எதுவும் செய்ய முடியாது. என்ன நேர்ந்தாலும் நீங்கள் வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருங்கள். நம்மைக் காப்பாற்றுவதற்குக் கடவுள் இருக்கிறார்" என்று கங்கம்மாப்பாட்டி கடவுளின்மேல் பாரத்தைப் போட்டு விட்டாள்.

* * *

நாணு ஆத்திரமே உருவெடுத்தாற் போல் காட்சியளித்தான்.

"ஓஹோ! அவ்வளவுக்கு வந்து விட்டதா! வக்கீல் ஐயா, இப்போது உங்கள் திருவாயைத் திறந்து கொஞ்சம் பேசுங்கள், பார்க்கலாம்" என்று நாணு மூத்த அண்ணா கோபியைப் பார்த்துச் சொன்னான்.

"நாணு, தயவு செய் அப்பா, பேசாமல் இரு. எனக்காகப் பேசாமல் இரு" என்று அவன் தாயார் கெஞ்சினாள்.

"அம்மா, சில விஷயங்களில் பெற்ற தாய்க்குக் கூடத் தலையிட உரிமையில்லை. நீ பேசாமல் அப்புறம் போ. இந்த விவகாரம் என்னையும் என் அண்ணா என்று கூறிக் கொள்ளும் இந்த மனிதனையும் பொறுத்தது."

"உன் அண்ணா என்பது எனக்குப் பெருமையைக் கொடுக்கக் கூடிய விஷயம் அல்ல. உன்னை என் தம்பி என்று சொல்லிக் கொள்

னவே வெட்கமாக இருக்கிறது. உன்னால் எல்லாருக்கும் அவமானம்" என்றான் கோபி.

"என்னைப் பார்த்து நன்றாகப் பேசு. நான் இராத சமயம் பார்த்து அபலையான பெண்ணிடம் பிரமாதமாக அளக்கிறாயே. மூத்த அண்ணாவாம்! எல்லோரும் பெருந்தன்மை, நல்லொழுக்கம் எல்லாம் இந்தக் கனவானிடம் வந்துதான் பிச்சை வாங்கிக் கொண்டு போக வேண்டும்...பிறந்ததிலிருந்து அயோக்கியத்தனமாக நடந்து கொள்ளும் அயோக்கிய வக்கிலிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்!" என்று இரைந்தான் நாணு.

இதைக் கேட்டதும் கோபி பாய்ந்து எழுந்தான். "போதும், நிறுத்தடா" என்று கர்ஜித்துக் கொண்டே நாணுவின் அருகில் சென்றான்.

"அதற்குள் நிறுத்த முடியாது. இன்னும் சொல்வதற்கு இருக்கிறது. அதையும் கேட்டுக் கொள். நீயும் உன் மனைவியும் நளினியைத் தொந்தரவு செய்து கஷ்டப்படுத்துவதற்குச் சரியான சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தீர்களோ! நான் இராத சமயம் பார்த்து அவளைக் குளவி போல் கொட்டினீர்களோ!" என்று கையை ஓங்கிக் கொண்டு நாணு கத்தினான்.

"நளினி பிழைக்கத் தெரியாத பைத்தியக்காரக் கணவனுடன் திரிந்து கொண்டிருக்கிறாள், இல்லையா! கணவனுடன் திரியாமல் வேறு யாருடன் திரிய வேண்டுமாம்! இதோ இருக்கிறாளே இவள், உன் அருமை மனைவி, இவள் உன்னுடன் செல்லாமல் வேறு யாருடன் செல்லுவாளோ! கணவனுடன் போவதும் வருவதும் குற்றமோ? பேஷ்! பேஷ்! நன்றாக இருக்கிறது, நீங்கள் அடிக்கும் கூத்து!" என்று மேலும் நாணு மூச்சு விடாமல் சத்தம் போட்டான்.

கோபி தனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டான். "நான் உன்னைக் கை கழுவி விட்டுவிட்டேன். இனி உனக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நீ இனி என்னுடைய தம்பியும் இல்லை."

"ரொம்பவும் நல்லதாய்ப் போய்விட்டது" என்றான் நாணு.


"நான் இல்லாவிட்டால் நீ பட்டினி கிடந்து, தெருக்களில் சந்தி சிரித்திருப்பாய். பணக்கார இடத்தில் உனக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்பதற்காக நான் எவ்வளவு அலைந்து திரிந்து கஷ்டப்பட்டேன், தெரியுமா! மாஜிஸ்திரேட்டின் மாப்பிள்ளை...இஞ்ஜினீயரிங் படிப்பு......சொகுசான பட்டணத்து வாழ்க்கை......இதெல்லாம் உனக்கு மண்டைக் கர்வம் ஏற்படும்படி செய்து விட்டன. உன் மனைவியிடம் நான் ஏதோ சொன்னேன் என்றாய் அல்லவா! ஆமாம், சொல்லத்தான் சொன்னேன். இன்னும் ஒரு தடவை சொல்கிறேன், கேள். நீ பைத்தியக்காரன், அறிவற்ற மடையன், பால் வார்த்த நல்ல பாம்பு கூட, தெருவில் திரியும் நாய் கூட உன்னைக் காட்டிலும் நன்றியுள்ளதாக இருக்கும். உன்னால் எனக்கும் என் குடும்பத்துக்கும், உன் மனைவியின் குடும்பத்துக்கும் பெரிய அவமானம்தான் ஏற்பட்டிருக்கிறது. உனக்காகக் கஷ்டப்பட்ட எல்லோர் முகத்திலும் நீ நன்றாகக் கரியைப் பூசி விட்டாய்."

(அடுத்த இதழில் முடியும்)



இரட்டைவால்!





சீனு ஒரு தனவந்தரின் மகன். அவன் ஒரு நாய் வளர்த்து வந்தான். அதற்கு வால் மிகவும் குட்டை. அதனால் அதைக் குட்டை வால் என்றே அழைத்தான். "வீட்டைப் பாதுகாப்பதற்கு இவ்வளவு சின்ன நாயை வைத்துக் கொண்டிருக்கிறாயே! யாரேனும் பாக்கட்டில் போட்டுக் கொண்டு போய் விடப் போகிறார்கள்!" என்று எல்லோரும் பரிகசிப்பது வழக்கம்.


ஒருநாள் ஒரு பெரிய புள்ளி நாய் சீனுவின் வீட்டுக்குள் ஒரு பூனையைத் துரத்திக்-கொண்டு நுழைந்து விட்டது. யாரும் அதன் அருகே போவதற்குப் பயந்தார்கள். புள்ளிநாயோ பூனையைத் துரத்துவதை விட்டுக் குட்டை வாலின்மேல் ஒரு பாய்ச்சல் பாய்ந்தது. குட்டை வால் பயந்தடித்துக் கொண்டு எங்கேயாவது ஒளியப் பார்த்தது. சட்டென்று அதற்கு ஒரு யோசனை தோன்றிற்று. கீழே போட்டிருந்த புலிமுகத்துடன் இருந்த புலித் தோலுக்கு அடியில் புகுந்து கொண்டு புலித் தோலோடு நகர்ந்தது. பிறகு புள்ளி நாய் மேல் பாய்ந்தது. புள்ளி நாய் நடுங்கிப் போய் விட்டது. ஓட்டம் பிடித்தது. குட்டை வாலும் துரத்தியது. புலி தான் துரத்துகிறது என்று புள்ளி நாய் கதிகலங்கி ஓடி மறைந்து விட்டது. சீனுவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. தன் குட்டை வாலின் சமயோசித புத்தியைக் கண்டு வியந்தே போனான்.

அன்று சீனுவின் தங்கை மீனு ஊரிலிருந்து வந்தான். நிறைய ஜாங்கிரி, லட்டு இன்னும் பல பல பக்ஷணங்கள் ஊரிலிருந்து கொண்டு வந்திருந்தாள். குட்டை வாலுக்குப் பக்ஷணம் கொடுக்க அவளுக்கு இஷ்டமில்லை.

தோட்டத்தில் இருவரும் நாற்காலிகளில் அமர்ந்து பக்ஷணத்தை சாப்பிட ஆரம்பித்தார்கள். திடீரென்று தூற்றல்போட ஆரம்பித்து மழையாகவே கொட்டிற்று. சீனுவும்மீனுவும் அப்படியே எல்லாவற்றையும் போட்டு விட்டு உள்ளே ஓடினார்கள்.

அது மழையே இல்லை. குட்டை வால் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும் ரப்பர்க் குழாயைத்தான் புதர் மறைவில் இருந்து தூக்கிப் பிடித்தது. அதிலிருந்து ஜலம் கொட்டிற்று. மழை என்று நினைத்து ஓடிவிட்டார்கள்.

சீனுவும், மீனுவும் வாசல் பக்கம் போய்ப் பார்த்தார்கள். மழையும் இல்லை ஒன்றும் இல்லை. தோட்டத்தில் பெய்யும் மழை வாசலில் இல்லையே என்று தோட்டப் பக்கம் மறுபடியும் வந்து பார்த்துத் திகைத்துப் போனார்கள். அங்கும் மழையைக் காணோம். குட்டை வால் மட்டும் மேஜை மேல் லாகவமாக ஏறிப் பக்ஷணங்களைத் தின்று கொண்டிருந்தது. ரப்பர்க் குழாயும் தண்ணீர் ஊற்றிய வண்ணம் கீழே கிடந்தது. அவர்களுக்கு விஷயம் புரிந்து விட்டது. "குட்டை வால் புள்ளி நாயைத் தான் விரட்டியது என்றால் நம்மையே விரட்டி விட்டதே! அது குட்டை வால் இல்லை இரட்டை வால்!" என்று இருவரும் பாராட்டினார்கள்.



மத்திய கேந்திரம்

ஜெயமணி

எகிப்து—6

'சுதந்திர' எகிப்தின் முதலாவது பார்லிமெண்டுக்கு 1923-ம் வருஷம் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் ஜக்லுல் பாஷாவைத் தலைவராகக் கொண்ட வப்துக் கட்சியினரே மகத்தான வெற்றி பெற்றனர். மொத்தம் இருந்த 214 ஸ்தானங்களில் 177 ஸ்தானங்கள் ஜக்லுல் பாஷா கட்சியினருக்குக் கிடைத்தன.

அப்போது எகிப்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே பல பிரச்னைகள் தீர வேண்டியிருந்ததால், அவ் விஷயமாக ஜக்லுல் பாஷா இங்கிலாந்துக்குச் சென்றார். ஆனால் அவ்வமயம் நடந்த பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டன.

மேற்படி பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறாமல் போனதற்குச் சூடான் விவகாரம்தான் முக்கிய காரணம் ஆகும்.

சூடான் எகிப்துக்குத் தெற்கே இருக்கும் ஒரு நாடு. அது எகிப்து எல்லையை அடுத்து இருக்கிறது என்றாலும் சூடானியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. இரண்டு தேச ஜனங்களின் பழக்க வழக்கங்களும் பேசும் பாஷைகளும் முற்றிலும் வெவ்வேறாகும்.

அப்படியிருந்தும் அந்த இரு நாடுகளும் பரஸ்பரம் உதவியை நாடாமல் வாழ முடியாது என்பது இயற்கையின் கட்டளை! எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஓடிக்கொண்டிருக்கும் நைல் நதி சூடானிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லுகிறது. நைல் நதி இராவிட்டால் எகிப்து முழுதும் வறண்ட பாலைவனமாகக் காட்சியளிக்கும் என்ற விவரம் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"எகிப்தின் ஜீவநாடியாக நைல் நதி அமைந்திருப்பதால், அதன் உற்பத்தி ஸ்தானத்தை அடுத்துள்ள சூடான் பிரதேசத்தில் எகிப்தியர்களுக்கு ஓரளவாவது அதிகாரம் இருக்க வேண்டும்" என்று மில்னர் கமிஷனும் சிபார்சு செய்திருந்தது.

எகிப்து சுதந்திரம் அடைவதற்கு முன் இங்கிலாந்து, எகிப்து இரு நாடுகளின் நிர்வாகத்திலும் சூடான் இருந்து வந்தது. அதனாலேயே அந்த நாட்டுக்கு இன்றும் கூட ஆங்கிலோ எகிப்திய சூடான் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

எகிப்து பெயரளவில் சுதந்திரம் பெற்றது என்றாலும், எகிப்தில் பிரிட்டிஷ் துருப்புகள் இருந்தன. எகிப்து ராணுவத்துக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகளே தலைமை வகித்தனர். போலீஸ், நிதி, நீதி முதலிய முக்கியமான இலாகாக்களும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் நிர்வாகத்திலேயே இருந்தன.

எகிப்தில் பிரிட்டிஷாரின் பூரண ஆதிக்கம் இருந்தவரையில் சூடான் விஷயமாக எவ்விதத் தகராறும் உண்டாகவில்லை. அப்போது சூடானின் அபிவிருத்திக்காக எகிப்து ஏராளமான தொகையும் செலவு செய்ய வேண்டியிருந்தது. எகிப்தின் பண உதவி கிடைத்திரா விட்டால் சூடான் தேசம் பாப்பராகியிருக்கும்.


ஆனால் எகிப்து தங்கள் கையிலிருந்து நழுவி விடும் என்ற நிலைமை பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டபோதுதான், அவர்கள் சூடானில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முயற்சித்தனர். எகிப்தியர்களோ தங்களுடைய வாழ்வுக்கு இன்றியமையாத நைல் நதி சூடான் வழியாக வருவதால், சூடான் விஷயத்தில் தங்களுக்கும் அதிகாரம் இருக்க வேண்டுமென்று கருதினர். எனவே ஜக்லுல் பாஷாவுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் முறிந்ததற்கு அந்தப் பிரச்னை முக்கிய காரணமாயிற்று.

• • •

எகிப்தில் தங்கள் இஷ்டப்படி நடந்து கொண்டிருந்த பிரிட்டிஷாருக்கு வப்துக் கட்சித் தலைவர்களும் எகிப்து பார்லிமெண்டும் முட்டுக்கட்டையாக இருந்தது ஆத்திரத்தை உண்டாக்கியது. அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமும் அவர்களுக்கு வெகு சீக்கிரத்தில் கிடைத்தது!

1924-ம் வருஷத்திலே சர் லீ ஸ்டாக் என்ற ஆங்கிலேயர் சில எகிப்தியர்களால் கொல்லப்பட்டார். அவர் எகிப்திய ராணுவத்துக்குத் தலைவராக இருந்ததுடன், சூடானில் கவர்னர் ஜெனரல் பதவியும் வகித்து வந்தார்.

மேற்படி சம்பவம் பிரிட்டிஷாருக்கு மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால் அதைக் குறித்து பிரிட்டிஷாரைக் காட்டிலும் எகிப்தியத் தலைவர்களே அதிக



கம்பளத்தில் சித்திர வேலை செய்யும் எகிப்தியர்கள்

அதிர்ச்சியும் கலக்கமும் அடைந்தனர். அதனால் தங்களுடைய நலன்களுக்கும் இலட்சியத்துக்கும் பெரும் இடையூறு ஏற்படும் என்று அஞ்சினர்.

அவர்கள் பயந்ததற்கு இணங்க, எகிப்தில் இருந்த பிரிட்டிஷ் ஹை கமிஷனரிடமிருந்து எகிப்தியத் தலைவர்களுக்கு ஒரு கட்டளை பிறந்துகொண்டு வந்தது. பிரிட்டிஷ் ராணுவத் தலைவரின் கொலைக்காக மன்னிப்புக் கேட்பதுடன், ஐந்து லட்சம் பவுன் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று பிரிட்டிஷார் கோரினர். இவற்றைத் தவிர, எகிப்து பெற்ற ஓரளவு சுதந்திரத்தையும் சிதைக்கக் கூடிய பல அக்கிரமமான நிபந்தனைகளையும் விதித்தார்கள்.

இவ்வாறாக, யாரோ சில அறிவிலிகள் செய்த காரியம் எகிப்தின் சுதந்திரத்துக்கே வினையாக முடிந்தது!

அந்தச் சம்பவத்தைப் பிரிட்டிஷார் பல விதத்திலும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். எகிப்தில் பிரிட்டிஷார் இழந்திருந்த சில உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் கொலை உதவியாக அமைந்தது!

அந்த விபரீதச் சம்பவத்தைக் கண்டு மனம் பதறிய ஜக்லுல் பாஷா பிரிட்டிஷார் கூறிய சகல நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டார். பிரிட்டிஷார் வற்புறுத்திய நஷ்ட ஈடுத் தொகையான ஐந்து லட்சம் பவுனை இருபத்து நாலு மணி நேரத்தில் செலுத்தினார்.

அதுதான் சமயமென்று பிரிட்டிஷார் சூடான் தேசத்திலே தங்களுடைய பூரண ஆதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பினார்கள். ஆனால் அந்த விஷயத்தில் மாத்திரம் எகிப்திய சர்க்கார் சிறிதும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

எனினும் பிரிட்டிஷார் எகிப்தியர்களின் எதிர்ப்பைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் சூடானைத் தங்களுடைய பூரண அதிகாரத்தின் கீழ் உள்ள காலனியாகச் செய்து கொண்டார்கள்.

அதன் காரணமாக சூடானில் இருந்த எகிப்துத் துருப்புகள் புரட்சியில் ஈடுபட்டன. ஆனால் மேற்படி புரட்சியைப் பிரிட்டிஷார் வழக்கம் போல் கடுமையான முறைகளைக் கைக்கொண்டு அடக்கி ஒடுக்கி விட்டார்கள்.

அவ்வளவுதான்! மறுபடியும் பழைய கதையே ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷாரின் நடவடிக்கைகளைக் கண்டித்து ஜக்லுல் பாஷா மந்திரி சபையினர் ராஜிநாமா செய்தார்கள். உடனே புவாட் மன்னர் தேசத்தின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற பார்லிமெண்டைக் கலைத்து விட்டார்.

அவ்வாறாக, பிரிட்டிஷாரின் அந்தரங்கமான நோக்கம் நிறைவேறியது. ஜக்லுல் பாஷாவை அதிகார பீடத்திலிருந்து விரட்டுவதும், அவர் கட்சியினர் பெரும்பான்மையாக இருந்த பார்லிமெண்டைக் கலைப்பதும்தான் அவர்களுடைய நோக்கம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

சூடான் நிர்வாகத்தைப் பிரிட்டிஷார் முற்றிலும் தங்கள் வசமாகச் செய்து கொண்டதால், அந்தப் பிரதேசத்தில் ஓடும் நைல் நதித் தண்ணீரைக் கட்டுப்படுத்தி, எகிப்தின் குரல்வளையை நெரிக்க அவர்களுக்கு வசதி ஏற்பட்டது.

பிரிட்டிஷாரின் திருவிளையாடல்களை ஏற்கெனவே எகிப்திய பார்லிமெண்டு சர்வதேச சங்கத்துக்கு அறிவித்துப் பரிகாரம் தேட முற்பட்டது. எனினும் அதன் முயற்சி பலிக்கவில்லை.

எகிப்து சர்க்கார் ராஜிநாமா செய்ததிலிருந்து அங்கு கடுமையான கட்சிப் போராட்டம் ஆரம்பமாயிற்று. ஒரு புறம் தேசப் பிரதிநிதிகளான வப்துக் கட்சியினர் நின்றனர்; மற்றொரு புறத்தில் புவாட் மன்னர், பிரிட்டிஷார், அவர்களுடைய தாசர்கள் முதலியோர் கச்சை கட்டிக் கொண்டு உறுமினர்.

இவ்விதமாக, புவாட் மன்னரின் சர்வாதிகாரம் கடிவாளம் இல்லாத குதிரையைப் போல் முன்னிலும் மேட்டிலும் சென்று கொண்டிருந்தது! இந்தியா அன்னியர் ஆதிக்கத்தில் இருந்தபோது சுதேச மன்னர்களைப் பிரிட்டிஷார் ஆட்டி வைத்தார்கள் அல்லவா? அது போலவே எகிப்து மன்னரையும் பிரிட்டிஷார் தங்கள் இஷ்டப்படி ஆட்டி வைத்தனர்.



கோயிலை எனக்குச் சுற்றிக் காட்டி அழைத்துக் கொண்டு வந்த மனிதர் நவ ராத்திரி மண்டபத்துக்கு எதிரிலுள்ள ஒரு இருண்ட அறையைக் காட்டி, "இதுதான் 'பறி கொடுத்த ராமன்' சன்னதி" என்றார்.

"பறிகொடுத்த ராமனா?" என்றேன் நான் ஆச்சர்யத்துடன்.

"ஆமாம்! பிராட்டியைப் பறி கொடுத்த போது சக்கரவர்த்தித் திருமகன் எந்த திருக்கோலத்திலிருந்தாரோ, அதே திருக்கோலத்தில் இங்கே சேவை சாதிக்கிறார்" என்றார் ஸ்ரீ வைஷ்ணவ பரிபாஷையின் தரம் குன்றாமல்.

"ஓஹோ, அப்படியா? வேறு எந்த ஊரிலும் ஸ்ரீராமபிரான் பிராட்டியைப் பிரிந்த கோலத்தில் சேவை சாதித்ததாக நான் கேள்விப்பட்டதே இல்லை" என்றேன்.

"அதுதானே இந்த க்ஷேத்திரத்திற்குள்ள மகிமை! வாருங்கள்" என்று பெருமையோடு சொல்லி என்னை அந்த இருளடைந்த அறைக்குச் சமீபமாக அழைத்துப் போனார்.

அந்தக் கோயிலிலேயே வௌவால்கள் சர்வ சுதந்திரத்துடன் வசிப்பதற்கு அந்தப் 'பறிகொடுத்த ராமன்' சன்னதியைத் தவிர வேறு சரியான இடம் இல்லை போலிருக்கிறது. அந்தச் சன்னதியின் வாசற்படியை நெருங்கியவுடனேயே நூற்றுக் கணக்கான வௌவால்கள் எங்கள் தலைக்கு மேல் சிறகடித்துப் பறக்கத் தொடங்கின. ஏதோ துர்நாற்றம் வேறு வீசியது. சமீபத்தில் நெருங்கிப் பார்த்தவுடன்தான் அந்தச் சன்னதியில் மினுக் மினுக்கென்று ஒரு தீபம் எரிந்து கொண்டிருந்தது தெரிந்தது. அந்த விளக்கின் வெளிச்சத்தைக் கூட விழுங்கி விடும்போலிருந்தது அங்கு குமைந்திருந்த இருள். என்னோடு வந்தவர் அந்தத் தீபத்தைத் தூண்டி விட்டுச் சிறிது இருளைப் போக்கினார். மங்கலான ஒளியில் அங்கே மூன்று சிலைகள் இருப்பது தெரிந்தது.

கரங்களில் வில்லும் அம்பும் தாங்கி ஸ்ரீ ராமனும் அவருக்கு வலது புறத்தில் லக்ஷ்மணனும் அவர்களுக்குச் சமீபத்தில் சிறிது முன்னால் கைகட்டி வாய் புதைத்த வண்ணம் ஆஞ்சநேயரும் காட்சி அளித்தனர்.

"பார்த்தீர்களா? பிராட்டியை இழந்த கோலத்தில் பகவான் சேவை சாதிப்பதை!" என்றார் எனக்கு வழிகாட்டியாக வந்தவர்.

நான் ஒவ்வொரு சிலையாக உற்று நோக்கினேன். எல்லாச் சிலைகளுக்கும் எண்ணெய்ப் பிசுக்கேறிய அழுக்கு வஸ்திரங்கள் அணியப் பட்டிருந்தன. அவை மூன்றும் மிகவும் புராதனமான சிலைகளாகத் தோன்றின. வௌவால்களின் அரணாக விளங்கிய அந்த இருண்ட அறையில் இருந்த ஸ்ரீ ராமபிரானின் சிலை இயற்கையிலேயே சோக உருவாகத்தான் எனக்குத் தோன்றியது. பயங்கரமான கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டில் கூட ராமபிரானோடு வசிக்க இச்சை கொண்ட சீதா பிராட்டி, இந்த வௌவால்கள் நிறைந்த இருண்ட அறையில் அவரோடு வசிக்க இஷ்டப் படாமல் எங்காவது சென்றிருக்க வேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றியது. ராமனின் இடது கைப்புறத்தில் தாராளமாக இடம் விடப் பட்டிருந்ததிலிருந்து அங்கு ஏற்கனவே

சீதா தேவியின் சிலை ஒன்றும் இருந்திருக்கலாமோ என்ற சந்தேகத்தை எனக்கு உண்டாக்கியது. "இடது கைப்புறத்தில் இவ்வளவு இடமிருக்கிறதே? இங்கே ஏற்கெனவே சீதையின் சிலையும் இருந்திருக்கத்தான் வேண்டும். அதை யாராவது தூக்கிக் கொண்டு போய் இருக்கலாமல்லவா? இந்தக் காலத்திலும் யாராவது ஒருவன் ராவணனைப்போல் இருந்து..." என்றேன்.

"ஹூம் ஹூம்! அப்படி இருந்தால் இங்கே ஒரு சிலை இருந்ததற்கு அடையாளமாகத் தரையில் பள்ளம் இருக்குமல்லவா?" என்றார் என்னோடு வந்தவர்.

அவர் கூறியதும் உண்மை. அந்த இடத்தில் ஒரு சிலை இருந்ததற்கான அடையாளம் சிறிதுகூட என் கண்ணுக்குத் தென்படவில்லை. "ஆமாம்! சிலை இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இடது கைப்புறத்தில் இவ்வளவு இடம் ஏன் விடப்பட்டு சூனியமாகக் கிடக்கிறது?" என்றேன்.

"பிராட்டி இல்லாவிட்டால் பிராட்டி இருக்கவேண்டிய ஸ்தானம் எங்கே போய் விடும்? பிராட்டி இருக்கவேண்டிய ஸ்தானம் என்று ஒவ்வொருவர் மனத்திலும் படவேண்டும் என்பதற்காகத்தான் இடம் விடப்பட்டிருக்கிறது" என்றார் அந்த மனிதர்.

"அதுவும் சரிதான்" என்று சொல்லி விட்டு நான் வெளியே வந்தேன்.

எனக்குக் கோயிலைச் சுற்றிக் காட்டி அந்த க்ஷேத்திரத்தின் மாகாத்மியத்தை யெல்லாம் சொல்லிய அந்தப் பிராமணருக்கு அரை ரூபாயைத் தட்சிணையாகக் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தேன்.

* * *

நான் அந்த ஊருக்குப் போய் மாதம் ஆறாகி விட்டது. அதற்கப்புறம் நான் பெருமாள் கோயில் பக்கமே போகவில்லை.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை. வீட்டில் ஏதேதோ கடிதங்களை யெல்லாம் புரட்டிக் கொண்டிருந்தேன். என் எதிரில் பஞ்சகச்சமும் பன்னிரண்டு திருமண்ணும் துலங்க ஒரு வைஷ்ணவர் வந்து நின்றார்.

"நீங்கள் யார்?" என்றேன்.

"நான் பெருமாள்கோயில் பரம்பரை அர்ச்சகர். என் பெயர் கேசவ பட்டாச்சாரியார்......" என்று சொல்லியபடியே ஒரு தட்டில் தேங்காய் மூடி, பழம், புஷ்பம் இவைகளை வைத்து என்னிடம் நீட்டினார். நான் அந்தப் பிரசாதங்களை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டே, "இப்பொழுது கோயிலில் ஏதாவது உற்சவமோ?" என்று கேட்டேன்.

"இல்லை. ஒரு திருப்பணி... அதற்குத்தான் உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றார் அவர்.

"என்ன திருப்பணியோ?"

"கோயிலில் ஒரு ராமன் சன்னதி இருக்கிறது" என்று சொல்லி நிறுத்தினார்.

"ஆமாம்! எனக்குத் தெரியும். நவராத்திரி மண்டபத்துக்கு எதிரிலுள்ள பறி கொடுத்த ராமன் சன்னதி..." என்றேன்.

"ஆமாம்! ஆனால் அவர் பறி கொடுத்த ராமன் இல்லை. அந்தச் சன்னதியில் பிராட்டி இல்லாததால் எல்லோரும் அதற்குப் பறி கொடுத்த ராமன் சன்னதி என்று பெயர் வைத்து விட்டனர். உண்மையில் அப்படி இல்லை......"

பட்டாச்சாரியாரின் வார்த்தை எனக்கு ஆச்சர்யத்தை உண்டாக்கியது. "அப்படியென்றால் ஏற்கெனவே அங்கு சீதையின் சிலையும் இருந்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?" என்றேன்.

"அதிலென்ன சந்தேகம்? கட்டாயம் அப்படித்தா னிருந்திருக்க வேண்டும். பிராட்டி இல்லாமல் எந்தத் திவ்ய க்ஷேத்திரத்திலாவது ராமன் தனியாகச் சேவை சாதிக்கிறாரா.....?"

"ஒரு திவ்ய க்ஷேத்திரத்திலும் இல்லை. ஆனால் இந்த க்ஷேத்திரத்தில் பிராட்டி இல்லாமல் சேவை சாதிப்பதே ஒரு தனி மகிமையாக இருக்கக் கூடாதா? எல்லாத் திவ்ய க்ஷேத்திரங்களிலும் தான் எம்பெருமான் பிராட்டியோடு தரிசனம் தருகிறாரே. இந்த க்ஷேத்திரத்தில் அவர் பிராட்டியைப் பிரிந்திருந்த கோலத்தில் தரிசனம் தருவதும் யுக்தமாகத் தானே இருக்கிறது?" என்றேன்.

பட்டாச்சாரியார் சிறிதுநேரம் தயங்கினார். பிறகு ஒரு தடவை கனைத்துக் கொண்டு, "நீங்கள் சொல்லுவதும் சரிதான்...ஆனால் இந்தக் கோயிலில் ராமன் தேவியை இழந்த கோலத்தில் காட்சியளிக்கிறார் என்பதற்கு ஆதாரமாகப் புராதனமாக ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லையே......!" என்றார்.

"சீதாபிராட்டி ஸமேதராகச் சேவை சாதித்தார் என்பதற்குப் புராதனமான ஆதாரம் ஏதாவது இருக்கிறதா?" என்றேன்.

"ஆதாரம் இல்லாமல் நான் சொல்லுவேனா? அந்தச் சன்னதியில் ராமனுடைய திரு உருவத்துக்கு இடது புறத்தில் நிறைய

இடம் விடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் அந்த இடத்தில் சிலையின் திருவுருவம் இருந்திருக்க வேண்டு மென்றுதான் தோன்றுகிறது......"

"அதைத் தவிர வேறு ஏதாவது ஆதாரம் உண்டோ...?" என்றேன் நான் ஆவலுடன்.

"இருக்கிறது. கோயில் அதிகாரிகளைக் கொண்டு அந்த இடத்தைத் தோண்டிப் பார்க்கும்படி வேண்டிக் கொண்டேன். அவர்களும் தோண்டிப் பார்த்தார்கள். ஏற்கெனவே அங்கே ஒரு சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் அகப்பட்டன......"

"அப்படியா? சீதா பிராட்டிதான் அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்க வேண்டுமென்பதற்கு ஏதாவது ஆதாரம் இருந்ததா?" என்று கேட்டேன்.

"அப்படி ஒரு ஆதாரமும் தென்படவில்லை. ஆனால் அந்த இடத்தில் சீதைதானே பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கவேண்டும்?" என்று கேட்டார் பட்டாச்சாரியார்.

"இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஏன் அந்த இடத்தில் ஒரு சுக்ரீவனின் சிலையோ விபீஷணனின் சிலையோ இருந்திருக்கக் கூடாது?"

எனக்கு எப்படிப் பதில் கூறுவது என்று தெரியாமல் பட்டாச்சாரியார் சிறிது நேரம் தடுமாறினார். அவர் முகம் சுருங்கியது. "ஏதோ என் மனத்தில் அங்கு சீதைதான் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. அந்த இடத்தில் பிராட்டியைப் பிரதிஷ்டை செய்யும் திருப்பணியை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தக் கைங்கர்யத்துக்காகப் பலரிடம் பணம் வசூல் செய்திருக்கிறேன். நீங்கள் மிகவும் பகவத் பக்தி உள்ளவர்களென்று கேள்விப்பட்டு வந்தேன்..." என்றார்.

பட்டாச்சாரியார் அந்தத் திருப்பணியைச் செய்ய முனைந்தது பலவிதத்திலும் தவறானதாகத்தான் எனக்குப் பட்டது. அவருடைய முகத்தை உற்று நோக்கினேன். முகத்தின் தேஜஸிலிருந்து அவர் நன்கு படித்த விவேகியாகவும் அநுபவமுள்ளவராகவும் இருக்கவேண்டும் என்று தோன்றியது. "அப்படியென்றால் புதிதாக ஒரு சீதையின் சிலையைப் பிரதிஷ்டை செய்து வைக்கப் போகிறீர்களா?" என்றேன்.

"ஆமாம், அதிலென்ன தவறு? இந்தப் பணியைச் செய்துவிட வேண்டுமென்று என் மனத்தில் ஒரு ஆவல் ஏற்பட்டுவிட்டது.



"பாகவதர் இவ்வளவு கீழே பாடிக் கொண்டு இருக்கிறாரே! காதே கேட்கவில்லையே! என்ன ராகம் பாடுகிறார்?"

"பாதாள பைரவி என்று நினைக்கிறேன்!"

இது நல்லதோ கெடுதலோ, ராமச்சந்திரனே இருக்கிறார். அந்தக் கருணை மூர்த்தி நான் செய்தது அபசாரமாகவே இருந்தாலும் மன்னித்து விடுவார்" என்றார்.

இதற்கு மேல் அவரோடு தர்க்கம் செய்ய எனக்கு இஷ்டமில்லை. பட்டாச்சாரியார் தவறு செய்கிறார் என்றுதான் எனக்குத் தோன்றியது. இருந்தாலும் அவர் அந்தத் தவறையும் ராம கைங்கர்யமாக நினைத்துச் செய்வதால் அவரை வெறுங்கையோடு அனுப்ப மனமில்லை. ஆகவே, ஒரு பத்து ரூபாயை எடுத்துத் தட்டில் வைத்து அவரிடம் கொடுத்தனுப்பினேன்.

* * *

பிறகு ஆறு மாதமும் ஓடியது. கேசவ பட்டாச்சாரியார் கைதேர்ந்த சிற்பி ஒருவரைக் கொண்டு ஒரு சீதையின் சிலையைச் சிருஷ்டித்து அதைப் 'பதிகொடுத்த ராமன்' சன்னதியில் ஆடம்பரமாகப் பிரதிஷ்டையும் செய்து விட்டார்.

பட்டாச்சாரியாரின் வற்புறுத்தலின் பேரில் அன்று நான் கோயிலுக்குப் போயிருந்தேன். இருள் சூழ்ந்து வெளவால்களின் வாசஸ்தலமாக விளங்கிய அந்தச் சன்னதியில் அன்று மின்சார விளக்குகளின் பிரகாசம் கண்ணைப் பறித்தது. சுற்றிலும் துர்க்கந்தம் வீசி வந்த இடம் சாம்பிராணிப் புகையின் வாசனையாலும் மலர்களின் வாசனையினாலும் மனத்தைச் சாந்தி கொள்ளச் செய்தது.

அந்த மண்டபம் முழுவதும் வாழை மரங்களும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. இத்தனை அலங்காரமும் இருந்தென்ன? சன்னதிக்குள்ளே சென்று ராமபிரானைத்

தரிசித்தபோது என் மனம் துணுக்குற்றது. பட்டாச்சாரியார் அளவிடமுடியாத பெரிய குற்றத்தைச் செய்து விட்டார் என்று தோன்றியது.

நெடுநாட்களாக அபிஷேக அலங்காரங்களைக் காணாத அந்த மூர்த்திகளுக்கு அன்று யோகம். எல்லாச் சிலைகளும் பட்டாடைகளாலும், மலர் மாலைகளாலும் அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. எத்தனை அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தாலென்ன? முதன் முதலாக இருளில் அந்த ராமன் சன்னிதியில் நான் வந்து பார்த்தபொழுது ராமனின் முகத்தில் குடிகொண்டிருந்த சோகத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது பல விதமான தீப ஒளிக்கு முன்னால் அந்த முகத்திலிருந்த சோகம் தெளிவாகத் தெரிந்தது. அந்தச் சோகத்தை எதனாலும் மாற்றிவிட முடியாது என்று எனக்குத் தோன்றியது.

ராமனின் சிலைக்கு இடது கைப் புறத்திலிருந்த சீதையின் பிம்பத்தைப் பார்த்தேன். அந்த முகத்தில் சிரிப்புக் களை சொட்டியது. சிற்பி வெகு அழகாகத்தான் அந்தச் சிலையைச் செய்திருந்தான். அந்தச் சீதையின் சிலையைத் தனியாக வைத்துப் பார்த்தால் அதன் அழகை நாம் மெச்சாமலிருக்க முடியாது. ஆனால் புதிதாகச் செய்யப்பட்ட அந்தச் சிலை புராதனமான ராமனின் சிலைக்கு ஈடானதாகப் படவேயில்லை. ராமனை ஏமாற்றுவதற்காக ராவணன் ஒரு மாயா சீதையைக் கொண்டு வந்து நிறுத்தியிருப்பது போலத்தான் தோன்றியது. இதை நினைத்ததும் என் உடல் சில்லிட்டது. 'மகா அபசாரம், மகா அபசாரம்!' என்று என் வாய் என்னை அறியாமலேயே முணுமுணுத்தது.

என்னை உபசரித்து அழைத்து வந்த கேசவ பட்டாச்சாரியாரின் முகத்தைப் பார்த்தேன். அவரும் நிம்மதி இழந்து ஏதோ நினைவில் கொண்டவர் போலக் காணப்பட்டார்.

* * *

இரண்டு மூன்று நாட்கள் ஓடின. யாரோ ஒரு பையன் என்னிடம் வந்து கேசவ பட்டாச்சாரியார் படுத்த படுக்கையாகக் கிடப்பதாகவும் என்னைப் பார்க்கப் பிரியப்படுவதாகவும் சொன்னான். நான் உடனே அவர் வீட்டுக்குச் சென்றேன்.

பட்டாச்சாரியார் படுக்கையில்தானிருந்தார். அவருடைய உடம்பு துரும்பாக இளைத்திருந்தது. முகம் சோபை இழந்து அதில் மரணக்குறி தென்பட்டது. அவர் என்னைக் கண்டதும் ஜாடை காட்டித் தன் படுக்கைக்குச் சமீபமாக உட்காரச் சொன்னார். நானும் அவருக்குச் சமீபமாகப் போய் உட்கார்ந்தேன். அவர் என் கையைப் பிடித்துக் கொண்டு தழுதழுத்த குரலில், "அபசாரம் செய்து விட்டேன்......பெரிய அபசாரம் செய்து விட்டேன்!" என்றார்.

அவருடைய கண்களில் கண்ணீர் பெருகியது. என் கையைப் பிடித்திருந்த அவருடைய கை நடுங்கியது. அவருடைய உடல் பதறியது. நெஞ்சிலிருந்து வார்த்தைகள் எழும்புவதே கடினமாயிருந்தது. சிரமத்தைச் சமாளித்துக் கொண்டு ஈனஸ்வரத்தில் பேசத் தொடங்கினார்: "ஆரம்பத்திலேயே நீங்கள் சொன்னீர்கள். அது என் மனசுக்குப் படவில்லை. ஏதோ செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தில் எதையும் சிந்தித்துப் பார்க்காமல் செய்து விட்டேன். ராமன் சன்னிதியில் அந்தப் புதிய சீதையைப் பிரதிஷ்டை செய்த பொழுதுதான் என் குற்றம் எனக்குச் சுரீரென்று பட்டது. இந்த ராமாபசாரத்துக்கு எத்தகைய தண்டனை கிடைக்குமோ?

"ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி ஏக பத்தினி விரதன். ஏற்கெனவே அந்தச் சன்னிதியில் ஒரு பிராட்டியின் திரு உருவம் இருந்ததாகவே வைத்துக் கொண்டாலும் அதற்குப் பதிலாக வேறு ஒரு பிராட்டியின் சிலையைப் பிரதிஷ்டை செய்வது மகா பிசகுதான். சிலையானாலும் அது வேறு, இது வேறு தானே? அந்தச் சிலைக்கும் இந்தச் சிலைக்கும் நகக் கணுவில் வித்தியாசமிருந்தாலும் போதாதா? ஏக பத்தினி விரதனுகிய ராமனுக்கு இது ஏற்றுக் கொள்ளத் தகாதது தானே? ஒரு லக்ஷ்மணனுக்குப் பதில் இன்னொரு லக்ஷ்மணனைப் பிரதிஷ்டை செய்யலாம். ஒரு அனுமானின் சிலைக்குப் பதிலாக வேறொரு அனுமானின் சிலையை ஸ்தாபிக்கலாம். ஆனால் ஒரு பிராட்டிக்குப் பதிலாக வேறு ஒரு பிராட்டியைச் சிருஷ்டித்துப் பிரதிஷ்டை செய்வது மகா அபசாரம்.

"இந்தக் குற்றம் இரவு பகலாக என் நெஞ்சை ராம பாணமாகத் துளைக்கிறது. இந்த உயிரை நெடுநாள் நான் சுமந்து கொண்டிருக்க முடியாது. இந்தப் படுக்கையிலிருந்து இனி நான் எழுந்திருப்பேன் என்ற நம்பிக்கை இல்லை. நான் இறப்பதற்கு முன்னால் நான் செய்த குற்றத்தை ஒருவரிடம் சொல்லிக் கருணாமூர்த்தியாகிய ராமன் எனக்கும் நற்கதி அளிப்பாரா என்று கேட்டு மன ஆறுதலடைய வேண்டுமென்று தோன்றியது. அதற்காகத்தான் உங்களை அழைத்தேன்......" என்றார்.

நான் அவருக்குத் தகுந்த ஆறுதல் மொழிகளைக் கூறிவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

இரண்டு நாட்கள் சென்றன. திடீரென்று கேசவ பட்டாச்சாரியார் இறந்து விட்டதாக எனக்குச் செய்தி வந்தது. மனிதர்களுக்கு மரணம் என்பது சகஜம். ஆனால் ஊரில் பலர் 'பறிகொடுத்த ராமன்' சன்னதியில் அவர் சிலையைப் பிரதிஷ்டை செய்ததால்தான் ராமன் அவருடைய அபசாரத்தைப் பொறுக்கமாட்டாமல் பட்டாச்சாரியாரின் உயிரையே பலி கொண்டு விட்டார் என்று பேசிக் கொண்டனர். ஆனால் பிழை செய்தவர்களைத் தண்டிக்கும் கொடிய தெய்வமாக நான் ராமனை நினைக்கவில்லை.

கேசவ பட்டாச்சாரியார் இறந்த பிறகு அந்த ராமன் சன்னதியைக் கவனிப்பவர்கள் இல்லை. மறுபடியும் அங்கே இருள் சூழ்ந்தது. வௌவால்களும் வந்து குடியேறின. ராமன் இப்பொழுது சீதா சமேதராகத் தரிசனம் அளித்தாலும் இன்னும் அவருக்குப் 'பறி கொடுத்த ராமன்' என்ற காரணப் பெயரேதான் அழியாமல் விளங்கி வருகிறது.

படித்துப் பாருங்கள்!

கடவுளர் போற்றும் தெய்வம்

மக்கள் தெய்வங்களைப் போற்றுகிறார்கள். ஆனால் தெய்வங்கள் யாரைப் போற்றுகின்றனவோ என்ற சந்தேகம் சிலருக்கு எழலாம். அந்தச் சந்தேகத்தை திரு அ. மு. பரமசிவானந்தம் நிவர்த்தி செய்திருக்கிறார் இந்தப் புஸ்தகத்தில். ஆம், தெய்வங்கள் போற்றும் தெய்வம் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிதான் என்று அழகாக விளக்கியுள்ளார்.

தமிழ் நாட்டுக் கற்புடைய பெண்களின் உயர்வு வேறு எந்த நாட்டிலும் காணப்படாத ஒரு சிறப்பாகும். கொண்ட கணவனோடு மாறுபடாது, 'வாழ்ந்தால் அவனுக்காக வாழ்வேன்; வீழ்ந்தாலும் அவனுக்காகவே வீழ்வேன்' என்னும் தன்னலமற்ற தியாக வாழ்வை மேற்கொண்டவள் தமிழ்ப் பெண். அப்படித் தியாக வாழ்க்கை நடத்திய கற்புடைய பெண்களுக்கெல்லாம் தலையானவள் கண்ணகி. சோழநாட்டிலே பிறந்து, பாண்டிய நாட்டிலே தன் கற்பின் ஆற்றலைக் காட்டி, கடைசியில் சேர நாட்டிலே கோயில் கொண்டாள் வீரமா பத்தினி கண்ணகி.

கற்புக்கரசி கண்ணகியின் வீர வாழ்க்கையை செஞ்சொல் அன்னும் சிலப்பதிகார காவியமாக இயற்றி அருளினார் இளங்கோவடிகள். அந்தச் சிலப்பதிகார காவியக் கதையைத்தான் திரு அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் "கடவுளர் போற்றும் தெய்வம்" என்னும் பெயரில் எளிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். இந்நூலுக்கு திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் அணிந்துரை தந்து சிறப்பித்துள்ளார். திரு வடமலை அவர்கள் தமது மணிமேகலை பதிப்பகத்தில் வெளியிட்டிருக்கிறார்.

[கிடைக்குமிடம்: மணிமேகலைப் பதிப்பகம், 1/43 கயினியப்பன் தெரு, சென்னை-1. விலை ரூபாய் 1—0—0]

அட, நாராயணா!

தினந்தோறும் எத்தனையோ நிகழ்ச்சிகள் சாதாரணமாக நம் வாழ்க்கையில் நிகழ்ந்த வண்ணமாக இருக்கின்றன. அவற்றில் விசேஷம் ஒன்றும் இருக்காது. எத்தனையோ சம்பாஷணைகள் நிகழ்கின்றன. அவையும் அதே மாதிரி பிரயோஜனமற்று நிற்கும். இதையெல்லாம் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்பதே கிடையாது. இவற்றில் விசேஷம் இருப்பதாக யாராவது கூறினாலும் கூட அதை யாரும் பொருட்படுத்துவதில்லை.

ஆனால், இந்தப் புத்தகம், விசேஷம் ஒன்றும் இல்லாத மேற்கூறிய சம்பவங்களையெல்லாம் ரஸமுள்ளவைகளாகச் செய்கிறது. நாம் தினமும் பார்த்து அசட்டை செய்த விஷயங்களையெல்லாம் கூர்ந்து கவனித்து, படித்து, சிந்தித்து, ரஸிக்கும்படியாகச் செய்கிறார், ஆசிரியர். அறுபத்தாறு லட்சம் ரூபாய் தம்மிடம் இருந்தால் தாம் அதைக் கொண்டு என்னவெல்லாம் செய்வார் என்று அவர் கூறுவதைப் படித்தால் நாமும் ஆசையோடு சேர்ந்து அந்த அறுபத்தாறு லட்ச ரூபாய் சிந்தனையில் ஆழ்ந்து விடுவோம்.

இந்தப் புத்தகத்துக்கு, ஆசிரியர் "கல்கி" எழுதியிருக்கும் முன்னுரையில், "வியாஸம் எழுதும் கலை தமிழ்நாட்டில் முன்னேறியிருக்கிறது என்பதற்கு இதோ இந்தப் புத்தகம் ஒரு சிறந்த உதாரணமாக அமைந்திருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

[கிடைக்கு மிடம்: என். ராமரத்னம் (என்னார்) வலைந்தா பிரகாரம், சென்னை—3 விலை: ரூ. 1—4—0.]

உத்தமன்

உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரின் "ஒத்தெல்லோ" நாடகத்தைக் கவிஞர் அ. கு. ஆதித்தர் தழுவி, தமிழ்க் கவிதை நாடகமாகச் செய்திருக்கிறார். ஒரு மொழியில் அமைந்த ஒரு நூலைப் பிறமொழிப் படுத்தல் என்பது எளிதான காரியம் அன்று; அதிலும் அந்நூலைத் தீந்தமிழ் கவிதையாகத் தீட்டுவது என்றால் மிக மிகக் கடினம். இந்நூல் நடிப்பவர் படிப்பவர் ஆகிய இருவருடைய சிந்தனைக்கும் உரியதாகும் என்பதில் ஐயமில்லை.

[கிடைக்குமிடம்: அ. கு. ஆதித்தர், கிறிஸ்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, சென்னை 10. விலை ரூ. 2—4—0.]



கைலாசமய்யர் வழக்கமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஹோட்டலில் அன்று சாப்பாடு மோசமாக இருந்தது. அவருடன் கூடப் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் அவர்களுடைய அதிருப்தியை முணுமுணுப்போடு நிறுத்திக் கொண்டு சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியேறினார்கள். ஆனால் கைலாசமய்யர் நேரே ஹோட்டல் முதலாளியிடம் சென்று அன்றையச் சாப்பாட்டைப் பற்றிப் புகார் செய்தார்.

முதலாளி கைலாசமய்யரை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, ''சரி, நான் கவனித்து வேண்டியதைச் செய்கிறேன்'' என்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், ''கைலாசமய்யர்வாள்! நீங்கள் நான் சொல்லுகிறேன் என்று கோபப்படக் கூடாது. நீங்கள் எல்லாம் இந்த வயதில் குழந்தை குட்டிகளுடன் குடும்பத்தோடு இருந்து வாய்க்கும் வயிற்றுக்கும் தகுந்த விதமாகச் சமைத்துப் போடச் சொல்லிச் சாப்பிட வேண்டியவர்கள். இந்த வயதில் உங்களுக்கு என் ஹோட்டல் சாப்பாடு மட்டும் என்ன, எந்த ஹோட்டல் சாப்பாடுமே பிடிக்காது!'' என்று பாதி விளையாட்டாகவும் பாதி உண்மையாகவும் சொன்னார். இந்தப் பதிலைக் கேட்ட கைலாசமய்யர் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போய் விட்டார்.

நீறு பூத்த நெருப்புப் போல வெளிக்குத் தெரியாமல் அவர் மனத்துள்ளே புகைந்து கொண்டிருந்த விசனத்தைக் கிளறிவிட்டது ஹோட்டல் முதலாளியின் அந்தப் பேச்சு. மூன்று வருஷங்களுக்கு முன் குடும்பத்தில் ஏற்பட்ட சலசலப்பின் விளைவாகக் கைலாசமய்யர் குடும்பத்தை விட்டு விலகி ஹோட்டல் சாப்பாட்டை நம்பித் தனி வாழ்க்கை நடத்தும்படியாயிற்று. அதை யொட்டிய சம்பவங்கள் அவர் நினைவுக்கு வந்தன. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் கைலாசமய்யர் எம். ஏ. பாஸ் செய்துவிட்டு ஒரு பெரிய உத்தியோகத்திலிருந்த பொழுதுதான் கல்பகத்தைக் கலியாணம் செய்து கொண்டார். கல்பகத்தின் தகப்பனார் வியாபாரத் துறையில் நல்ல செல்வமும் செல்வாக்கும் படைத்திருந்தார். கைலாச மய்யரின் குடும்பத்தினர், கல்பகத்தைத் தங்கள் மாற்றுப் பெண்ணாக அடைவதைப் பெரிய பாக்கியமாகக் கருதினர். ஆனால் கைலாசமய்யர் தம்முடைய குடும்ப நிலைமையை அறிந்து அவ்வளவு பெரிய குடும்பத்தில் போய்ச் சம்பந்தம் செய்து கொள்ளுவதை அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால் குடும்பத்திலிருந்த பெரியோர்களின் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிக் கடைசியில் கல்பகத்தையே ஏற்றுக் கொண்டார்.

கைலாசமய்யர் எதிர்பார்த்தது போலவே, கல்பகத்தின் செய்கை ஒவ்வொன்றும் அவள் குடும்பச் செருக்கை எடுத்துக் காட்டும் விதமாக அமைந்தன. ஆகவே, கைலாசமய்யரின் இல்லற வாழ்க்கை அவர் சம்பந்தப்பட்ட மட்டில் கசந்து கொண்டே வந்தது. காரணமில்லாமலேயே அடிக்கடி கல்பகம் அவள் புக்ககத்தாருடன் சண்டையிட்டுக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போய்விடுவாள். அவளைச் சமாதானப்படுத்தித் திரும்பத் திரும்ப அழைத்து வருவது கைலாசமய்யருக்குப் பெரும் பாடாகப் போய்விட்டது.

இதற்கிடையில்தான் கைலாசமய்யருக்குச் சேர்ந்த புத்திரன் வைத்தியநாதன் பிறந்தான். அதற்குப் பிறகாவது கல்பகத்தின் குணம் மாறும் என்று எதிர் பார்த்திருந்த கைலாசமய்யருக்கு ஏமாற்றம்தான் எஞ்சியது.

குழந்தை வைத்தியநாதனுக்கு வயது ஆக ஆக அவன் பெற்றோர்கள் இருவருக்கும் இடையே உருவாகிக் கொண்டிருந்த வேற்றுமையும் வளர்ந்து கொண்டே வந்தது. அதை நிவர்த்திக்கும் வகை தெரியாமல் அவன் குழந்தை மனம் தத்தளித்தது. இந்தச் சூழ்நிலையிலேயே வளர்ந்து பெரியவனாகிப் படித்து அவன் பி. ஏ. ஹானர்ஸ் பட்டமும் பெற்றான். அதையடுத்துப் பம்பாயில் ஒரு நல்ல உத்தியோகமும் கிடைத்துவிடவே அதை ஏற்றுக் கொள்வதற்காக அவன் பம்பாய்க்குச் சென்று விட்டான்.




வைத்தியநாதன் பம்பாய் போன சில தினங்களுக்குப்பின் கைலாசமய்யருக்கும் கல்பகத்துக்கும் நடுவே, குழந்தை லக்ஷ்மிக்குப் படிப்புடன் பாட்டும் நாட்டியமும் சொல்லிக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி ஆரம்பித்த பேச்சு தடித்துச் சண்டையாகப் பரிணமித்து விட்டது. கல்பகம் நிதானமிழந்து கைலாசமய்யரின் மனது புண்படும்படி பேசிவிட்டாள். அதன் பலனைக் கைலாசமய்யர் சண்டை நடந்த

தினத்தன்றே தனக்கு வேண்டிய சில சாமான்களுடன் வீட்டை விட்டு வெளியேறி நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதில் குடியேறிவிட்டார். அப்பொழுதும் கல்பகத்தின் மனம் மாறவில்லை. உள்ளூரிலிருந்த அவள் பிறந்தகத்துப் பந்துக்கள் வழக்கம் போலவே அவளுக்குப் பக்கபலமாக நின்று கைலாசமய்யரின்மேல் குற்றம் சாட்டினர். உண்மையை அறிந்து அதற்குப் பரிகாரம் காண அவர்கள் முன் வரவில்லை. அதில் அவர்களுக்குச் சிரத்தையுமில்லை. காலப் போக்கில் கைலாசமய்யர் தன்னுடைய மன அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை அடைந்தார். குழந்தை லக்ஷ்மி மட்டும் தாயாருக்குத் தெரியாமல் அடிக்கடி வந்து அவரைப் பார்த்துப் போவாள். அது அவருக்கு எவ்வளவோ ஆறுதலாயிருந்தது!

ஹோட்டல் சாப்பாட்டுக்கும் தனி அறை வாசத்துக்கும் தன்னை ஒரு விதமாகத் தயார் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் தான் ஹோட்டல் முதலாளி சொன்ன வார்த்தைகள் கைலாசமய்யரின் மனத்தைச் சுருக்கென்று தைத்துப் புண்ணாக்கி விட்டன.

2

சீடங்குபோன வாழ்வை நினைத்த வண்ணம் தன்னுடைய அறையை அடைந்து கைலாசமய்யர் சாய்வு நாற்காலியில் பொத்தென்று விழுந்தார். அப்பொழுதிருந்த மனநிலையில் ஆபீசுக்குப் போய் வேலை செய்யும் அளவுக்குக் கூட அவருக்கு உற்சாகமில்லை. அன்று இரவு முதல் அந்த ஹோட்டலுக்குச் சாப்பிடப் போவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று முடிவுக்கு வந்தார். 'வேறு எந்த ஹோட்டலுக்குப் போனாலும் இதே கதிதானே!' என்று வினவியது அவர் மனம். இப்படி அவர் சிந்தனையில் ஈடுபட்டிருந்த சமயம் அவருடைய பியூன் ஆபீஸ் விலாசத்தில் அவருக்கு வந்திருந்த கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்துச் சென்றான். கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார் கைலாசமய்யர். அது பம்பாயிலிருந்து வந்திருந்தது. கிருஷ்ணஸ்வாமி அய்யர் என்பவர் எழுதியிருந்தார். தம் பேத்தி பிரஹதாம்பாளின் ஜாதகம், வைத்தியநாதனின் ஜாதகத்துக்குப் பொருந்தியிருப்பதாகவும், தாம் பம்பாய்க்கு வந்து வைத்தியநாதனைப் பார்த்த பொழுது தாயாரும் தகப்பனாரும் பிரஹதாம்பாளை நேரில் பார்த்துச் சம்மதப் பட்டால் மேற்கொண்டு கலியாண ஏற்பாடுகளைச் செய்யலாமென்று அவன் தெரிவித்ததாகவும் எழுதியிருந்தார். அது மட்டும் அல்ல; அன்று மாலையே தாமும் தம் மனைவியும் பிரஹதாம்பாளுடன் கைலாசமய்யர் வீட்டுக்கு வருவதாகவும் அறிவித்திருந்தார்! கடிதத்திலிருந்த அந்தப் பகுதியைப் படித்ததும் கைலாசமய்யருக்குக் கலக்கம் ஏற்பட்டது. வரப்போகும் விருந்தாளிகள் தமக்கும் கல்பகத்துக்கும் இடையே உள்ள மனஸ்தாபத்தை அறிந்து கொண்டால்......! இதை நினைத்ததுமே அவர் மனத்தில் வியாகூலம் படர்ந்தது. அன்று மாலை எதிர்நோக்கியிருந்த சோதனையைச் சமாளிக்க என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தார். "அப்பா!" என்ற குரல் அவர் மோன நிலையைக் கலைத்தது. திரும்பிப் பார்த்தால் குழந்தை லக்ஷ்மி அறையின் வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள். "உள்ளே வாயேன்" என்றார். அவர் முகத்தில் பரவியிருந்த கலக்கத்தைக் கவனித்த லக்ஷ்மி தயங்கிக்கொண்டே, "அம்மா உங்களை இங்கே பார்க்க வரலாமா என்று கேட்டுக் கொண்டுவரச் சொன்னாள்!" என்றாள்.



கைலாசமய்யரின் கோபம் மறுபடியும் தலை தூக்கியது. "அவள் முகத்தில் நான் விழிக்கத் தயாராக இல்லை என்று சொல்லு" என்றார்.

அந்தப் பதிலை ஏற்றுக் கொண்டு லக்ஷ்மி அங்கிருந்து புறப்பட்டுப் போக இஷ்டப்படவில்லை என்று அவள் முகபாவமே சொல்லியது.

"ஒரு சமாசாரம், அப்பா" என்றாள் லக்ஷ்மி.

கைலாசமய்யர் மௌனமாக இருக்கவே மேலும் தொடர்ந்து, "வைத்தி அண்ணா பம்பாயிலிருந்து அம்மாவுக்குக் கடிதாக போட்டிருக்கிறான்!" என்றாள்.

இதைக் கேட்டதும் கைலாசமய்யரின் கோபம் சற்றுத் தணிந்தது. வைத்தியநாதனுடைய கடிதம் பம்பாயிலிருந்து கிருஷ்ணஸ்வாமி அய்யர் எழுதியிருந்த விஷயத்தைப் பற்றித்தான் இருக்கவேண்டுமென்று ஊகித்துக் கொண்டு, "சரி, நீ போய் அம்மாவை வரச் சொல்லு" என்றார்.

சற்று நேரம் கழித்துக் கல்பகம் கைலாசமய்யரின் இருப்பிடத்துக்கு வந்தாள். கைலாசமய்யர் வந்தவளை மௌனமாக வரவேற்று அவள் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். கிருஷ்ணசாமி ஐயர் அவருக்கு எழுதியிருந்த விஷயத்தைத்தான் வைத்தியநாதனும் எழுதியிருந்தான்.

"சரி உன்பாடு, உன் பிள்ளைபாடு! நான் என்ன செய்ய வேண்டும்!" என்று கேட்டார்.

கல்பகத்தின் கண்களில் நீர் மல்கியது. "எல்லாம் தெரிந்த நீங்களே இப்படிச் சொன்னால் நான் என்ன செய்வது! வரும் விருந்தினர்களை நான் மட்டும் தனியாக இருந்து வரவேற்பது அழகாக இருக்குமா!" என்று மிகவும் பணிவாகக் கேட்டாள்.

கைலாசமய்யரின் மனது இளகியது. வைராக்கியம் தளர்ந்தது. கல்பகத்தின் வேண்டுகோளுக்காக இல்லாவிட்டாலும் வைத்தியநாதனின் வருங்கால வாழ்க்கையை உத்தேசித்துப் பழைய சம்பவங்களை மறந்து கல்பகத்துடன் புறப்பட்டார், ஒரு காலத்தில் அவளுடன் குடித்தனம் நடத்திய வீட்டுக்கு!

அன்று மாலை ரயிலில் வந்த பிரஹதாம்பாளை யும் மற்றவர்களையும் வரவேற்று உபசரித்தனர் கைலாசமய்யர் தம்பதிகள். மூன்று வருஷங் களுக்கு பிறகு கனி ருசியாகக் கல்பகம் சமையல் செய்து போட்ட விருந்தைச் சாப்பிட்ட கைலாசமய்யருக்கு வீட்டுச் சாப்பாட்டின் விசேஷத்தை உணரும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

சிலநாள் கழிந்து ஒரு நல்ல முகூர்த்தத்தில் பிரஹதாம்பாளுக்கும் வைத்தியநாதனுக்கும் கலியாணம் நடந்தேறியது. கலியாணம் கழிந்த பின் பிரஹதாம்பாளுடன் வைத்தியநாதன் பம்பாய்க்குப் பிரயாணமானான். வைத்திய நாதனின் கலியாணத்தின்போது கல்பகம் எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டது கைலாசமய்யருக்கு எவ்வளவோ மனக்கஷ்டத் தைக் கொடுத்தது. கல்பகத்தின் குணத்தில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லையென்பதை அவர் அறிந்து கொள்ள அதிக நாள் பிடிக்க வில்லை. அவர்களுடைய புனர் வாழ்வு அவர் எதிர்பார்த்த அளவுக்கு சௌஜன்யமாக அமைய வில்லை. ஆகவே, அவர் மறுபடியும் பிரிந்து தனியே போவதுதான் உசிதம் என்ற தீர்மானத்துக்கு வந்தார். தம்முடைய அந்த முடிவைப் பிள்ளைக்கும் எழுதி விட்டார்.

3

அன்று ஆபீசுக்குப் போனதும் வைத்திய நாதனிடமிருந்து வந்த கடிதம் அவரைத் தூக்கி வாரிப் போட்டது. கடிதத்தில் பிரஹதாம் பாள் தன்னிடம் மனஸ்தாபப் பட்டுக்கொண்டு பம்பாய்க்கு வந்திருந்த தன் அத்தையுடன் டெல்லிக்குப் போய் இரண்டு வாரம் ஆகிற தென்றும், முன்பின் தீர விசாரியாமல் அவளைக் கலியாணம் செய்து கொண்டது பெரிய தவ றென்றும், மேலே தான் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருப்ப தாகவும் வைத்தியநாதன் எழுதியிருந்தான்.

அதைப் படித்த கைலாசமய்யருக்கு மனத்தை என்னவோ செய்தது. 'நம் தாம்பத்ய வாழ்க்கை தான் இப்படியென்றால் நம் பிள்ளையின் தாம் பத்ய வாழ்க்கையும் இப்படி ஆக வேண்டுமா! அவன் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணித்தானே, நான் கல்பகத்துடன் வீட் டுக்குப் போனேன்! அவன் தலைச் சுழியும் இப்படியாகி விட்டதே' என்று வருந்தினார்.

அன்று ஆபீஸ் முடிந்ததும் குழம்பிய மனத் தோடு வீடு திரும்பிய கைலாசமய்யரைக் கவ லையே உருவாக வரவேற்றாள் கல்பகம்.

"சமாசாரத்தைக் கேட்டீர்களா! பிரஹ தாம்பாள் எனக்கு டெல்லியிலிருந்து கடிதம் எழுதியிருக்கிறாள். அவளுடன் காரணமில்லா மல் வைத்தியநாதன் அடிக்கடி சண்டை போடுகிறானும். அதைப் பொறுக்க முடியாமல் அவள் பம்பாய்க்கு வந்திருந்த தன் அத்தை யோடு டெல்லிக்குப் போய் விட்டதாகவும், இதுவரை வைத்தியநாதனுக்கு எழுதிய கடி தங்கள் ஒன்றுக்காவது பதில் வரவில்லையென் றும், தான் என்ன செய்வது என்று தெரியா மல் கஷ்டப்படுவதாகவும் எழுதியிருக்கிறாள்" என்று சொன்னாள் கல்பகம்.

இதைக் கேட்டதும் கைலாசமய்யர், தம்மை யும் மீறித் துக்கம் தோய்ந்த குரலில், "வைத் தியநாதன் இதைப் பற்றி எனக்கு ஆபீஸ் விலாசத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறான். யார் கண்டார்கள்! இது பரம்பரைச் சாபம் போலிருக்கிறது!" என்றார்.

கைலாசமய்யர் சொன்ன வார்த்தைகள் கல்பகத்தின் மனத்தில் பலமாகத் தைத்தன. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "நாம் இருவரும் உடனே புறப்பட்டு டெல் லிக்குப் போய்ப் பிரஹதாம்பாளைக் கையுடன் அழைத்துக் கொண்டு பம்பாய்க்கு வந்து, வைத்தியநாதனுக்கும் புத்தி சொல்லி, இரு வரையும் சமாதானப்படுத்திச் சேர்த்து வைக்க வேண்டும். என்ன, நாளைக்கே புறப்பட லாமா!" என்று கேட்டாள்.

புருஷன்-மனைவி சண்டை தம் குடும்பத்துக் குப் பரம்பரைப் பாத்தியதையாக ஆகிவிடக் கூடாதே என்ற கவலையில் கைலாசமய்யர் அதற்குச் சம்மதித்தார்.

கைலாசமய்யரும் கல்பகமும் மறுநாளே டில்லிக்குப் புறப்பட்டுச் சென்று பிரஹதாம் பாளை அழைத்து வந்து பிள்ளைக்கும் புத்திமதி சொல்லிச் சேர்த்து வைத்தார்கள்.

பிள்ளையும் மாற்றுப் பெண்ணும் தங்கள் சண்டை பூசல்களை மறந்து இன்பமாக இல்லற வாழ்க்கை நடத்துவதைக் கண்டு கைலாச மய்யரும் கல்பகமும் தங்கள் மனஸ்தாபங்களை மறந்து அந்த ஆனந்த வாழ்க்கையில் ஒன்றி விட்டனர்.

இப்பொழுதெல்லாம் கைலாசமய்யர் ஹோட் டல் பக்கம் தலைகாட்டுவதில்லை. பிள்ளையை யும் மாற்றுப் பெண்ணையும் சேர்த்து வைத்த பெருமை தங்களையே சாரும் என்று கைலாச மய்யர் தம்பதிகள் எல்லையற்ற மகிழ்ச்சி கொள் கின்றனர். ஆனால் பிரிந்திருந்த தங்களைச் சேர்த்து வைப்பதற்காகப் பிரஹதாம்பாளும் வைத்தியநாதனும் விளையாட்டுச் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பது அவர்க ளுக்குத் தெரிந்திருக்க நியாயம் ஏது! எப்படி யிருந்தால் என்ன! அவர்களுடைய குடும்பச் சக்கரம் நன்றாக ஓடினால் நமக்குச் சரி!



"ஏண்டா! குழந்தே அழறே?"


"எங்காத்திலே, இன்னிக்கி, இட் டலி, தேங்காய் கொழுக்கட்டை... எல்லாம் பண்ணிருக்கா ஆ...ஆ..."

"அதற்குச் சந்தோஷம்னு பட ணும்? ஏன் அழுகிறாய்?"

"நான் காணாமற் போய் விட் டேன். வீட்டுக்கு வழி தெரியல்லே, மாமா!...ஆ...ஆ..."

தொல்லைதரும், சகிக்கவொண்ணாத வலிகள் அவளைப் படுக்கையிலேயே கிடத்தியிருந்தன. ஆனால்......





"க்ருஷன்"

வெகு துரிதமாக நிவாரணம் அளித்தது

இவ்வாறு நிவாரணம் அடைந்த பின்னர், இந்த ஸ்திரீயினால் "க்ருஷன்" இல்லாமல் இருக்க முடியவில்லை. அவளது அனுபவத்தை அவள் வாக்குகளைக் கொண்டே படியுங்கள்:

"நான்கு மாதங்களாகப் படுக்கையில் கூடத் திரும்பிப் படுக்க முடியாதபடி அதிக வலிகளினால் அவதிப்பட்டேன். அச்சமயம் அநேக சிகிச்சைகளைக் கையாண்டும் யாதொரு குணமும் கிடைக்க வில்லை. ஆஸ்பத்திரிக்குப் போவது பற்றி தீவிரமாய் யோசித்தேன். எனினும், என்போன்று அவஸ்தைப்படும் ஒருவரைப் பற்றி "க்ருஷனின்" விளம்பரம் ஒன்றில் கண்டு நானும் அதை ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தேன். ஆச்சரியகரமாக வலிகள் குறைவடைவது கண்டு பெரிதும் வியப்புற்றேன். நான்கு மாதங்களாகத் தவறாமல் க்ருஷன் உபயோகித்து வருகிறேன். அது இல்லாமல் என்னால் ஒருபோதும் இருக்க முடியாது." — B. C

முதுகு வலி முதலியவற்றின் சித்திரவதையிலிருந்து சீக்கிரம் நிவாரணம் அடைய வேண்டுமாயின் 'க்ருஷ'னில் அடங்கியுள்ள முக்கியமாக ஆறு உப்புக்களையும் ரத்தத்திற்குள் செலுத்துங்கள். அம்முறையாவது:— இயற்கையின் நியதிக்கிணங்க மூத்திரக்காய்கள் மறுபடியும் இயங்குமாறு க்ருஷன் உப்புக்கள் செய்கின்றன. குடலில் சேர்ந்துள்ள விஷப் பொருள்கள் தவறாமல் வெளியேற்றப் படுகின்றன. விஷப் பொருள்கள் போனால் வலிகளும் தாமாக ஒழியும். "க்ருஷன்" 'ஒரு சிறு அளவு' தொடர்ந்து சாப்பிட்டுவர, இவ்வலிகள் மறுபடியும் உங்களை பாதிக்கா. ஜலத்துடனோ டீயிலோ கலந்து க்ருஷனைச் சாப்பிடலாம். எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



KSID. 14


நாராயணன் கிப்ஸ் உபயோகிக்கிறான்—அவன் பற்கள்
வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன
நாராயணன் கிப்ஸ் டென்டிபிரிஸை விரும்புகிறான். அவன் சிறு வயதிலிருந்தே அதை உபயோகித்து வருகிறான்.
காலையிலும் மாலையிலும் எல்லா பற்களையும் கிப்ஸ் டென்டிபிரிஸினால் தேய்க்கிறான். மேலும்கீழுமாக —ஒரு பக்கமிருந்து மறுபக்கமாக அல்ல.
அவன் பற்கள் பிரகாசமாகவும் வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன. அது கிப்ஸ் டென்டிபிரிஸினால்தான்!
நீங்களும் கிப்ஸ் உபயோகிக்கிறீர்களா?
சாம்பல், கரி, இவைபோன்ற இதர கரகரப்பான பல்துலக்கும் வஸ்துக்கள் பற்களுக்கும் ஈறுகளுக்கும் ஹானி விளைவிக்கக்கூடும். நுரைபோல் மிருதுவான கிப்ஸ் டென்டிபிரிஸ் பற்களுக்கோ அல்லது ஈறுகளின் மிருதுவான பாகங்களுக்கோ ஒருபொழுதும் கேடுதல் செய்வதில்லை. கிப்ஸ் நீங்கள் எப்பொழுதும் ஒழுங்கான பற்களைப்பெற உதவுகிறது. வாய்க்கும் சுவாசத்திற்கும் புதுமணத்தை அளிக்கின்றது. மேலும் அதன் 3 கவர்ச்சிகரமான வர்ணங்களிலுள்ள டப்பிகளில் எதை தேர்ந்தெடுத்தாலும் உபயோகிக்க மிகவும் சௌகரியமாயிருக்கும்.
Gibbs
DENTIFRICE
கிப்ஸ் டென்டிபிரிஸ்
ஒழுங்கான முறையில் பற்களை வெண்மையாக சுத்தம் செய்கிறது


Quick
RELIEF
NOPAIN
உடனே வலியை நீக்கி
நிவாரணம் தரும்
சகலவிதமான
வலிகளுக்கும்
கைகண்ட மருந்து
நோபெய்ன்
எப்போதும் கைவசம்
வைத்திருக்கவும்
A CALCHEMICO PRODUCT
C.C. 5/59
மதராஸ் ஆபீஸ்
5-149, பிராட்வே
ஜி. டி., மதராஸ்


'கோலினஸ்
புன்னகையில்
வசீகரம்
இருக்கிறது!
நுரை தான் இந்த
வித்தியாசத்திற்குக் காரணம்।
அதிக சிக்கனமான தங்கூட
ஏனெனில் அரைபங்கு
அளவே போதுமானது!
சமமற்ற பிரஷில்
உபயோகிப்பதே
உத்தமம்
இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:—
ஜியாப்ரேமானர்ஸ் & கோ. லிட், பம்பாய் 1
கிளைகள்:-கல்கத்தா - மதராஸ் - டில்லி.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392

